
சாண்டில்யன்
இந்திர
குமாரி
வானதி
பதிப்பகம்

முறியடித்து கொங்கணத்தையும்
த்துக் கொண்டான்' என்று நீல
HORT HISTORY OF INDIA' என்ற

் யாதவ குலத்தினுடைய ஆஸ்
போரிலும் மிக வல்லவர்' என்று
ார். இந்தச் சரித்திர நிகழ்ச்சி
களுடன் குலவதி என்ற யாதவ
னனுக்குத் துறவியான ஒரு
பமான ஒரு கதையை ஒட்டி

மிழில் வெளிவந்தது. 'துறவி'
போனசாக வெளியிடப்
சேர்ந்து ஒரே புத்தகமாக
கிறது.

ல் பிரசுரித்த 'குங்குமம்'
து ஒரே புத்தக வடிவில்
'வானதி' அதிபர் திரு
நன்றி உரித்தாகும்.

**சாண்டில்யன்**

13–9–85

# 1. அடங்காப்பிடாரி

**மே**ற்குத் தொடர்ச்சி மலைச்சரிவின் கரடுமுரடான பாதையில் தலை கால் தெரியாமல் பாறைகளைத் தாண்டித் தாண்டி புரவியோட, அதன்மீது அலட்சியமாக அமர்ந்திருந்த அந்த முரட்டுப் பெண்ணை மலைச்சரிவின் இடைவில் உட்கார்ந்திருந்த சண்டதண்டன் மிகுந்த அச்சத்துடனும் கவலையுடனும் பார்த்துத் துன்பப் பெருமூச்செறிந்தான். நடு வயதை எட்டிக் கொண்டிருந்தாலும் இடைவிடாத உழைப்பினாலும் போர்களாலும் இளமை அதிகமாக மாறாத சண்டதண்டன், தனது பருத்த புயங்களைப் பார்த்து 'தகப்பனுக்கேற்ற பெண். வேறு யாரைக் கொள்ளுவாள்? எனது வாலிப முரட்டுத்தனம் முழுமையும் பெண்ணாக வடிவெடுத்து பிறந்திருக்கிறது,' என்று தன்னையும் அந்த முரட்டுப் பெண்ணையும் ஒப்பிட்டுப் பார்த்து 'இவளை என்ன செய்யப் போகிறேன்! சுத்த அடங்காப் பிடாரியாக இருக்கிறாளே!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். மீண்டும் தனது கண்களை மலை உச்சியை நோக்கித் திருப்பினான்.

அந்த அடங்காப்பிடாரி வாயு வேகத்தில் புரவியைச் செலுத்தினாலும் அவள் முரட்டுத் தனத்திலும் ஒரு அழகு இருக்கவே செய்தது. அவள் புரவியைச் செலுத்திய வேகத்தில் அவள் கரிய குழல்கள், கடலிலிருந்து எழுந்த பெருங்

காற்றில் அலைந்து அவ்வப்பொழுது அவள் முகத்தை சந்திரனை மூட முற்படும் மேகம்போல் மூடினாலும், அதை அவள் தனது வலது கையால் நீக்கவே செய்தாள். அவள் மேகக்குழல் அறைகுறையாக அவள் முக சந்திரனை மூடியபோது ஆங்காங்கு தெரிந்த முக லாவண்யத்தின் சிறு பகுதிகள்கூட அவள் இணையற்ற எழிலுக்குச் சான்று காட்டியது. அவள் அணிந்திருந்த மேலாடையும் காற்றில் அவ்வப்பொழுது விலகி மறைக்கப்பட்டிருந்த எழில் மேடுகளைக் காட்டியபோது அவற்றின் பரிமாணம் அதிகமில்லாதிருந்தாலும், திண்மை வலுவாயிருந்ததால் புரவியின் அத்தனை வேகத்துக்கும் அவை சற்றும் அசையவில்லை. புரவி துள்ளியும் தாவியும் விரைந்த போதும் அவள் அதன் மீது செங்குத்தாகவே உட்கார்ந்திருந்தாளாதலால் நுண்ணிய இடையும் சிறிது இலங்கிற்றில்லை. புரவியின் பக்கவாட்டில் திரும்பியபோது தெரிந்த அவள் செங்குத்தான முதுகும் நிமிர்ந்த வெளுத்த கழுத்துப் பகுதியில், ஏதோ புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட கரிய மலர் மொட்டுப்போல் காட்சியளித்த தலையும் லட்சண சாஸ்திரத்தின் அத்தாட்சியாக விளங்கின.

'இப்பேர்ப்பட்ட அழகிக்கு அடக்கம் மட்டும் இருந்திருந்தால் எப்பொழுதோ அவள் திருமணத்தை முடித்திருப்பேனே' என்று சண்டதண்டன் வருந்தவே செய்தான். அதைத் தவிர திருமணத்துக்காக அவன் முயன்ற இடங்களிலெல்லாம் அவளுடைய பிரக்யாதி பரவியிருந்ததால், எந்த அரசகுல மகனும் அவளை மனையாளாகப் பெற இஷ்டப்படாததையும் அவளை வதுவை செய்துகொள்ள விரும்பாததற்கு வேறு ஏதோ சாக்குப் போக்குகளைச் சொல்லிவிட்டதையும் நினைத்துப் பார்த்த சண்டதண்டன், தனது மகளுக்குக் கல்யாணம் ஆகாமலே போய்விட்டால் என்ன செய்வது என்ற திகிலில் இருந்தான்.



அல்லியை அடக்கிய அர்ஜுனன் போல், இவளுக்கு எவனா
வது ஒருவன் வருவான் என்ற நம்பிக்கையில் சண்டதண்டன்
வாழ்ந்து வந்ததனால் அவன் துயரத்தை அவன் நம்பிக்கை
ஓரளவு குறைத்திருந்தது.

இத்தனைக்கும் தனது மகளிடம் சண்டதண்டன் அளவு
கடந்த அன்பை வைத்திருந்தான். அவள் எட்டு வயதாயிருக்
கும் போதே அவளது தாயார் காலமாகி விட்டதால், அந்தத்
தாயின் இடத்தைத் தந்தையான சண்டதண்டன் நிரப்பி,
அவளுக்கு அளவுக்கு மீறிய செல்லம் கொடுத்ததன்றி,
கிட்டத்தட்ட ஒரு ஆண் பிள்ளையைப் போலவே அவளை
வளர்த்து வந்தான். குதிரையேற்றம், யானையேற்றம், விற்
பயிற்சி, வாட்பயிற்சி அனைத்தையும் அவளுக்குச் சொல்லி
வைத்தான். வெளிநாடுகளிலிருந்து வனவாசி வந்த அராபி
யர்களிடமிருந்தும் யவனர்களிடமிருந்தும் அவர்கள் உடை
களை வாங்கி அவளை அலங்கரித்து ஆணாக்கி அழகு
பார்த்தான். அந்தப் பழக்கமெல்லாம் அவளுக்குப் பூர்ண
மாகப் படிந்துவிடவே, அவள் சேலையைவிட, அரபு நாட்டு
சராயையே அணிந்து வந்தாள். மேலே சொக்காய் ஒன்றும்
போட்டு வந்தவள் பருவமடைந்ததும் என்ன காரணத்
தாலோ திடீரென சொக்காய்க்கு மேல் தாவணி
யொன்றையும் அணிந்து கொண்டாள். அப்படி அவள்
தனது அழகுகளை மறைக்க முயன்றதைக் கண்ட அவள்
தந்தை சண்டதண்டன் 'எப்படியும் இவளுக்கு இயற்கை
குணம் போகவில்லை' என்று திருப்தியடைந்தான். அவளுக்
வயதாக ஆக அந்தத் திருப்தியும் போய்விட்டது அவனுக்
தனது அரசில் உள்ள பல வாலிபர்களை அவள் வலு
சண்டைக்கு இழுத்து, அவர்கள் வாட்களைச் சுழற்றியெறி
காயமும் படுத்தியதால் அவள் கொடுமைக்கு உள்ளா
வர்கள் நீதி மன்றத்திலும் அவளை இழுக்கத் தொடங்க
சண்டதண்டனின் நிலை சொல்லத் தரமல்லாததாயிற்று

அவளால் காயப்பட்டவர்களை அழைத்துச் சண்ட தண்டன் தானே சமாதானம் சொன்னான். அவளை அடக்கி வைப்பதாகப் பிரமாணமும் செய்தான். அந்தப் பிரமாணத்தைக் காப்பாற்ற முடியாது போகவே அவளை மலைக் காடுகளுக்கு அழைத்துச் சென்று நாட் கணக்கில் அங்கே தங்கி அவளுக்குப் புத்தியும் சொன்னான். தன்னுடன் தனிமையிலிருந்தால் அவள் தான் சொன்னதைக் கேட்பாளென்று நம்பித்தான் மேற்குத் தொடர்ச்சி மலையின் அந்தப் பகுதிக்கு அவளை அழைத்து வந்தான்.

அங்கு தங்கிய முதல் இரண்டு மூன்று நாட்களுக்குள் மீண்டும் அவள் தனது சொரூபத்தைக் காட்ட ஆரம்பித் தாள். ஒரு நாள் காலை தனது தந்தையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு “அப்பா!” என்று செல்லமாக அழைத்தாள்.

“என்னம்மா?” என்று அவனும் அன்புடன் வின வினான்.

“நாம் இரவும் பகலும் இந்த மலைமாளிகையில் அடைந்து கிடக்க வேண்டுமா?” என்று செல்லக் குரலில் கேட்டாள்.

“ஏன் அடைந்து கிடக்கவேண்டும்? தாராளமாக நீ கடற்கரைக்குப் போகலாமே. இந்த இடத்தில் மலையின் அடிவாரத்தைக் கடல் முத்தமிடுகிறதே, பார்க்க வில்லையா நீ?” என்று வினவினான் சண்டதண்டன்.

“எப்படிப் பார்ப்பேன்! தந்தை உத்தரவில்லாமல் நான் போக முடியுமா?” என்று கெஞ்சினாள்.

“குழந்தாய்! உன்னை நான் எதில் தடை செய்திருக் கிறேன்; வீண் சண்டையை



“இன்று நானே உன்னை அழைத்துப்போய் இந்த மலையின் வண்ணங்களைக் காட்டுகிறேன்” என்று சொன்னான்.

அன்று முதல் தந்தையும் மகளும் மேற்குத் தொடர்ச்சி யின் மலைப் பகுதிகளையும் அதை அடுத்த கடற்பகுதி களையும் சுற்றிப் பார்த்தனர். ஆங்காங்கு ஓடிக்கொண் டிருந்த அருவிகள், அவற்றின் கரைகளில் முளைத்து ஆகாய மளாவிய பெரிய தேவதாரு மரங்கள், இவற்றையெல்லாம் தந்தை காட்ட மகள் மகிழ்ந்தாள். அந்த மலையில் தான் புரவியில் சென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எண்ணினாள். அதைப் பற்றி அன்றிரவு தந்தையிடம் கேட்டாள். “அப்பா! எனக்கு ஒரு புரவி வாங்கிக் கொடு. இந்த மலைக் கற்களில் நடப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது” என்று கூறி கற்கள் குத்தின தனது உள்ளங்காலைக் காட்டினாள்.

அதைக் கண்ட சண்டதண்டன் மலைக்கற்களைச் சபித் தான். அக்கற்கள் தனது இதயத்தைக் குத்திவிட்டதாக எண் ணினான். மறுநாளே அவளுக்கு ஒரு சாதுவான புரவியும் வாங்கிக் கொடுத்தான். அவள் புரவியில் ஏறி வித்தை செய்யப்போகிறாளோ என்ற பயத்தினால்தான் அவன் தனது தலைநகரிலிருந்து புரவிகளைக் கொண்டு வர வில்லை. மலையடிவாரம் வரை ரதத்திலும், பிறகு பல்லக் கிலும் பயணம் செய்து மலை உச்சி மாளிகைக்கு வந்து சேர்ந்தான். அவன் புரவி வாங்கிக் கொடுத்த நாளிலிருந்து மலைப் பகுதிகளில் தனியாகத் திரிந்தாள். ஆனால் அப் புரவி என்ன சாட்டையடி அடித்தாலும் நகராததால் அது குதிரையா, கழுதையா என்ற சந்தேகம் வந்தது. அதைப் பற்றி அன்றிரவே தந்தையிடம் புரவிமீது குற்றப் பத்திரிகை படித்தாள். அவள் தந்தை “இந்தப் புரவி உனக்கு இஷ்ட

கொடுத்தார். புரவி வேண்டாமென்று மறுத்துவிட்ட அவர் மகள், இரவு முற்றி தந்தை துயின்ற பின்பு மலையுச்சி மாளிகையிலிருந்து கிளம்பி மலைக் காட்டுவாசிகள் குடிசைகளிடம் சென்று, அவர்கள் ஆட்ட பாட்டங்களைக் கவனித்தாள். அப்படியொரு இரவில்தான் அவள் அந்தப் புதுப் புரவியையும் அதற்கு உடையவனையும் சந்தித்தாள். அந்தச் சந்திப்பு, அதனால் அந்தப் புரவிக்குச் சொந்தக் காரனிடம் ஏற்பட்ட போட்டி, இரண்டும் பாரத சரித்திரத்தின் ஒரு பகுதியையே மாற்றியது.

## 2. கலந்த விழிகள்

முற்றும் முன்பின் அறியாத மனிதர்கள் எந்தவித முன்னேற்பாடுமின்றி ஏன் சந்திக்கிறார்கள்? அத்தகைய சில சந்திப்புகளால் பெரும் நன்மைகள் அல்லது பெரும் தீமைகள் ஏன் ஏற்படுகின்றன? இவற்றுக்கெல்லாம் காரண காரியங்களோ, திட்டமான—தர்க்கரீதியான முடிவுகளோ கிடைப்பதில்லை. இந்த மாதிரி சமயங்களில் மனிதன் தன்னையும் மீறிய சக்தியொன்று இருப்பதாக உணருகிறான். அது தன்னை இயக்குவதையும் புரிந்து கொள்கிறான். முதலில் அதைப் பற்றிய ஞானோதயம் ஏற்படாவிட்டாலும் பின்னால் அதைக் கண்டிப்பாகத் தெரிந்து கொள்கிறான். அப்படியொரு சக்திதான் சண்டதண்டன் மகளையும் மலையுச்சி மாளிகையிலிருந்து அந்த நள்ளிரவில் வெளியே இழுத்திருக்க வேண்டும்.

மிகவும் முரட்டுத்தனம் வாய்ந்த தன் பெண்ணைச் சமுதாயத்திலிருந்து சில நாட்களாவது விலக்கி வைத்து, அவளை வழிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்துடன் சண்டதண்ட பல்லவன் அந்த மலை மாளிகைக்கும்



அடர்ந்த காட்டுக்கும் தனது மகளை அழைத்து வந்தான். நாகரிகத்தைக் கண்ணால் காணாத காட்டுவாசிகளையும் தனது பணி மக்களையும் தவிர வேறு யாரும் வரமுடியாத அந்த மாளிகைக்கு வந்து தங்கிய சண்டதண்டன், வந்த முதல் இரண்டு மூன்று நாட்கள் மிகுந்த மனநிம்மதியுடன் இருந்தான். பெண்ணுடன் மலைச் சரிவிலுள்ள காடுகளுக்கும், மேலைக்கடல் பகுதிக்கும் சென்று இன்பமான இயற்கையுடன் உறவாடுவதில் கழித்து வந்தான். முதலில் மிகவும் அடங்கிய பெண்ணைப்போல் நடித்த அந்த அரச மகளுக்கு, இரண்டு நாட்கள் ஆனதுமே காட்டிலும் மலையிலும் அருவிகளிலும் மற்ற இயற்கைக் காட்சிகள் எல்லாவற்றிலுமே அதிருப்தி ஏற்பட்டதால், அவள் முகத்தில் ஒரு சிடுசிடுப்பைக் காட்டலானாள். பிறகு தந்தை இரண்டு புரவிகளை ஒன்றன்பின் ஒன்றாக வாங்கிக் கொடுத்த போதும் திருப்தியடையாத அவள் உள்ளம் பெரிதும் வெறுப்பை அடைந்திருந்தது. வெறுப்பு உற்சாகத்தை விரட்டியடித்தது.

மலையுச்சி மாளிகையில், தனக்கென்று ஒதுக்கப்பட்ட தனியான பள்ளியறையில், கடலை நோக்கிய சாளரங்களைத் திறந்து வைத்துக் கொண்டு உறங்க முற்பட்ட சண்டதண்டன் மகள், பஞ்சணையில் இருமுறை புரண்டாள். பிறகு வலது கையில் தலையை ஊன்றிக் கொண்டு அரைப்படுக்கையாகப் படுத்து வெளியே கவனித்தாள். வெளியே இருந்த பெரிய மரங்களின் அசைந்த கிளைகளிலிருந்து பட்சிக் கூடுகள் காற்றில் ஆடின. அன்று சுக்லபட்சம் துவங்கி மூன்று நாட்களே ஆகியிருந்தபடியால், மதியும் மறைந்து எங்கும் பெரும் இருட்டு சூழ்ந்திருந்ததானாலும், தொடர்ந்த இருட்டில் பார்வையை ஓரளவு பெறும் கண்ணின் சக்தியால் — அன்று ஓரளவு காட்டைப் பார்க்கவும் முடிந்தது அவளால். அப்படிப் பார்த்தவள்,

அத்தனை இருட்டிலும் காடு எத்தனை அழகாயிருக்கிற தென்று நினைத்தாள். 'இந்த மலையில் முரட்டுப் பாறை களில் இத்தனை பெரிதாக வளரும் மரங்கள் சாதாரண பூமியில் ஏன் வளர மறுக்கின்றன?' என்று கேள்வியும் கேட்டுக் கொண்டாள்.

அப்படி அவள் பலவிதமாகச் சிந்தித்துக் கொண் டிருக்கையில்தான், மெள்ள ஒரு டமாரம் 'டம்டம்' என்று ஒரே சீராக எங்கோ ஒலிப்பதைக் கேட்டு, பஞ்சணையில் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அது விடாமல் ஒலிப்பதைக் கேட்டு, கட்டிலை விட்டிறங்கி, சாளரக் கட்டையில் உட்கார்ந்து பின்னால் சாய்ந்த வண்ணம் அந்த ஒலியைத் தொடர்ந்து கேட்கலானாள். காட்டுவாசிகள் ஏதாவது பூஜை போடும் சமயத்தில்தான் இம்மாதிரி டமாரம் அடிக்கப்படுமென் பதைக் கேள்விப்பட்டிருந்த அரசகுமாரி, ஒரு தாவணியை எடுத்து அரபு சொக்காய்மீது போட்டுக் கொண்டு, சாளரத்தின் வழியே கீழே குதித்து, அந்த ஒலி வந்த திக்கை நோக்கி நடந்தாள். அவள் நடக்க நடக்க அந்த ஒலி எட்டப் போய்க் கொண்டிருந்ததாலும் அதைச் சட்டை செய்யாமல் காட்டின் ஊடே சென்றாள். இப்படியே ஒரு நாழிகை காலம் நடந்த பின்பு, அந்த ஒலி வெகு அருகில் ஒலித்ததன்றி, காட்டுவாசிகள் பாட்டும் பாட்டுக்கேற்ற கைத்தாளங்களும் கேட்கவே சற்று நடையைத் துரிதப்படுத்தினாள் அரசகுமாரி.

காடு திடீரென இடைவெளி கொடுத்தது. மரங்கள் சக்கர வட்டமாக முளைத்திருந்த ஒரு மலைத் திடலில் காட்டு வாசிகள் பலர் உட்கார்ந்திருந்தார்கள். பெரும் தீயொன்று அந்த இடைவெளி சதுக்கத்தில் எரிந்து கொண்டிருந்தது. அது அணையாது இருப்பதற்காக ஆங்காங்கு குவிக்கப்பட்டிருந்த சுள்ளிகளை எடுத்துத் தீயில் போட்டு காட்டுவாசிகளில் ஆண்களாயிருந்தவர் சுடர் அணையாமல் பார்த்துக் கொண்டார்கள். பாவாடையையும் கச்சையையும்



மட்டுமணிந்த பெண்கள், அந்த தீச்சுடர் வீசிய வெளிச் சத்தில் கைகளைத் தட்டியும் சுழன்றும் ஆடிக் கொண்டி ருந்தார்கள். பெரிய சரும வாத்தியத்துடன் உட்கார்ந்திருந்த ஒருவன், அதை ஒரே சீராகத் தட்டிக் கொண்டிருந்தான். அந்தக் காட்டுப் பெண்கள் கறுப்பாயிருந்தாலும், அவர்கள் மூக்கில் பெரிய கம்பிகள் வளைக்கப்பட்டிருந்தாலும், பாவாடையும் முழந்தாள் அளவே இருந்தாலும், ஆட்டம் சீராகவும் அழகாகவும் இருந்தது.

அவர்கள் குழல்களைத் தூக்கிப் போட்டிருந்த கொண்டைகள் கூட ரம்மியமாகவே இருந்தன. அவர்கள் ஆட்டம் அரசகுமாரி வந்த பிறகு அதிக துடி பிடித்ததால், அரசகுமாரியை யாரும் பார்க்கவில்லை. கைதட்டலும் 'உம் உம்' என்ற பாட்டு முனகலும் பாவாடைகள் விசிறியதால் ஏற்பட்ட சலசலப்பும் எல்லாமே சேர்ந்து பிரமிக்கத்தக்க சூழ்நிலையை விளைவித்தன. அந்தக் காட்சியிலும் ஆட்டத் திலும் மயங்கிய சண்டன் மகள், மெள்ள அந்தக் கூட்டத்தின் முனையில் நின்றாள். ஆனால் நாட்டியத்திலிருந்த உற்சா கத்தில் யாருமே அவளைக் கவனிக்காததால் நீண்ட நேரம் அவள் நின்றுகொண்டே இருந்தாள். பாட்டின் ஒரு பகுதி முடிந்ததும் அவளைப் பார்த்துவிட்ட காட்டுமகள் ஒருத்தி அவளை நோக்கித் தனது கையைநீட்ட, மற்றப் பெண்களும் அவளை நோக்கினார்கள். பெண்களின் பார்வை போகும் இடத்தை நோக்கித் திரும்பிய வயதான ஒருவன், அரச குமாரியைக் கண்டதும் வியப்பு நிரம்பிய கண்களால் அவளை அளவெடுத்தான். பிறகு கேட்டான் "யார் நீ?" என்று.

அவள் பதிலேதும் சொல்லவில்லை—அந்தக் காட்டு வாசியின் கேள்வியில் தொனித்த அதிகாரத்தால். "இந்த மலைக்கு நீ புதிதா?" என்று இரண்டாம் முறை கேட்டான் அவன். அதற்கும் அவள் பதில் சொல்லாமல் [illegible]

பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தாள். அந்த வயோதிகள் அவளை மீண்டும் உற்று நோக்கி "ஏன் ஆண் பிள்ளை மாதிரி உடையணிந்திருக்கிறாய்?" என்று மூன்றாவது முறை வினவினான்.

"உடையணிவது என் இஷ்டம். நீ கேட்க வேண்டிய அவசியமில்லை" என்று துடுக்காகப் பதில் சொன்னாள் அவள்.

"ஏன் அவசியமில்லை? பெண் ஆணைப் போலிருந்தால் கேள்வி கேட்காதிருக்க முடியுமா?" என்று அந்த வயோதிகன் மீண்டும் கேட்டான்.

"ஏன் முடியாது? அவரவர் வேலையை அவரவர் கவனித்தாலென்ன?" — தனது முரட்டுத்தனத்தை அதிகமாகக் காட்டினாள் அவள்.

"நான் இந்தக் காட்டுப் பகுதியின் தலைவன்..." என்று உஷ்ணமாக உணர்த்தினான் அந்த வயோதிகன்.

"அதனாலென்ன?"

"எங்கள் குலத்தின் ஒழுக்க வழக்கங்களுக்கு நான்தான் பொறுப்பாளி."

"நான் உங்கள் குலமா?"

"இல்லாதிருந்தாலும் இங்கு வந்திருக்கிறாய். ஆகையால் எங்கள் கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டவள்."

"இதுவரை நான் யாருக்கும் கட்டுப்பட்டது கிடையாது." இதை மிக அழுத்தமாகச் சொன்னாள் அவள்.

காட்டுவாசிகளின் தலைவன் அதற்குமேல் அவளுடன் தர்க்கம் செய்யவில்லை. "இங்கு எதற்காக வந்தாய்?" என்று மட்டும் கேட்டான்.

"இந்த நாட்டியம் பார்க்க வந்தேன்" என்றாள் அவள்.



பிறகு வயோதிகன் திரும்பி கையசைக்க நாட்டியம் துவங்கியது. கைத்தாளங்களும் தம்பட்டமும் சப்தித்தன. பெண்கள் சேர்ந்து நின்று தாங்கள் நின்ற வட்டம் கலையாமல் ஆடினார்கள். அரசகுமாரி அந்த ஆட்டத்தின் லயத்தைப் பார்த்துப் பெரிதும் வியந்தாள். அந்த ஆட்டத்தில் மென்மை மட்டுமின்றி கடுமையும் கலந்திருந்ததைக் கண்டு வயோதிகன் பக்கத்தில் சென்று "தாத்தா நானும் ஆடட்டுமா?" என்று வினவினாள்.

வயோதிகன் கையசைக்க இரண்டு பெண்களுக்கிடையே இடைவெளி ஏற்பட, அதில் அரசகுமாரியும் சேர்ந்து ஆடினாள். ஆட்டத்தின் வேகம் உச்ச ஸ்தாயிக்குச் சென்றதும், எதற்கும் துவளாத அவள் உடலும் துவண்டது. ஆட்டம் முடிந்தபின் அயர்ந்து உட்கார்ந்துவிட்டாள் அரசகுமாரி. அவள் மூச்சு அடுத்தடுத்து பெருமூச்சாக வந்து கொண்டிருந்தது. அதைக் கவனித்த வயோதிகன் "இன்னும் இரண்டு நாள் ஆடினால் பழகிவிடும். அப்புறம் உனக்கு இப்படி மூச்சு வாங்காது" என்று அன்புடன் சொன்னான். தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு அவள் முதுகைத் தடவியும் கொடுத்தான். "இந்தா இதைக் குடி." என்று தனது பக்கத்திலிருந்த ஒரு மூங்கில் குழலைக் கொடுத்தான். அது என்னவென்று முகர்ந்து பார்க்கத் தொடங்கிய அவளை "மலைத்தேன் தைரியமாகக் குடி. தெம்பு வரும்" என்று சொன்னான் காட்டுவாசிகளின் தலைவன்.

குழலிலிருந்த தேனை மெல்ல, சிறிதுதான் அருந்தினாள் அரசகுமாரி. இனிப்பும் புளிப்பும் கலந்திருந்த தேனுடன் வேறேதோ கலந்திருந்ததை ருசியால் அறிந்த அவள் "தாத்தா, இதில் ஏதாவது மருந்து கலந்திருக்கிறதா?" என்று வினவினாள். "இல்லை. நீண்ட நேரம் ஆடிக் களைத்தவர்களுக்குத் தெம்பு உண்டாக்க கசப்பைச் சேர்க்கிறோம்" என்றான் வயோதிகன்.

"கசப்பா?"

"ஆம். வேம்பு அரிக்குகள். இன்று நீ போய் தூங்கு. நாளை விடிந்தபின்தான் எழுந்திருப்பாய்" என்றான்.

"உங்கள் பேரென்ன தாத்தா?" என்று அவள் கேட்டாள்.

"வனவாசி" என்றான் வயோதிகன்.

"அது பெயரா?"

"ஆம்."

"இப்படிப் பெயர் வைத்துக் கொள்வதுண்டா?"

"என் தாயார் தகப்பனார் வைத்த பெயர். தவிர பெயரில் என்ன இருக்கிறது?" – இதைச் சொன்ன வனவாசி "உன் பெயர் என்ன?" என்று வினவினான்.

சற்றுச் சிந்தித்தாள் அவள். பிறகு சொன்னாள் "இந்திர குமாரி" என்று.

அந்த வயோதிகன் புருவத்தைச் சுளித்துச் சிறிது நேரம் சிந்தித்தான். 'இந்தப் பெயரை எங்கோ கேட்டிருக்கிறேன்' என்று முணுமுணுத்தான். பிறகு தலையை ஆட்டிவிட்டு "நீ போய் வா" என்றான்.

"நாளை வரட்டுமா?"

"எதற்கு?"

"நாட்டியமாட"

"தாராளமாக வா. உனக்கு நாளைக்கு எங்கள் பெண்களின் உடையில் ஒன்று தருகிறேன். ஆட சௌகரியமாக இருக்கும்."



அதைக் கேட்ட அவள் நகைத்தாள். "ஏன்? இந்த உடைக்கு என்ன?" என்று வினவினாள்.

"ஆட்டத்தின் முழு அழகு இதில் வராது. நாளை நான் சொல்கிறபடி ஆடிப் பார்" என்றான் வயோதிகன்.

சரி என்று தலையை ஆட்டிவிட்டு அவள் கிளம்பினாள்.

"நீ எங்கு தங்கியிருக்கிறாய்? யாரையாவது துணை அனுப்பட்டுமா?" என்று வினவினான் வனவாசி.

"வேண்டாம்" என்று சொல்லிவிட்டு அவன் தடுக்கு முன்பு விரைவாக நடந்துவிட்டாள் இந்திரகுமாரி.

அன்றிரவு அவள் நன்றாகத் துயின்றாள். 'அந்தக் கிழவன் கொடுத்த தேனில் ஏதோ கசப்பு கலந்திருக்கிறதாகச் சொன்னானே, அதுதான் இப்படித் தூக்கம் வருகிறதா?' என்று தன்னைக் கேட்டுக் கொண்டே இருக்கையில் கண்களை மூடியவள், காலையில் கதிரவன் நன்றாக எழுந்த பின்பே அவளும் எழுந்தாள். பஞ்சணையிலிருந்து சோம்பல் முறித்துக் கொண்டு அறையிலிருந்து வெளியே வந்த மகளைப் பார்த்து சண்டதண்ட பல்லவன் "அம்மா! உனக்கு உடல் நிலை சரியில்லையா?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை, நன்றாகத் தானிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போய், நீராட்டத்தை முடித்துக்கொண்டு தந்தையுடன் உணவருந்தினாள்.

முதல் இரண்டு மூன்று நாட்கள் மிகுந்த துன்பத்துடன் இருந்த தனது மகள் உற்சாகம் காட்டுவதைக் கண்ட சண்டதண்டன் மகிழ்ச்சி எய்தினான். "அம்மா! குழந்தாய்! நீ இப்படியே தினம் இருந்தால், எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்?" என்றும் அன்புடன் சொன்னான்.

"இனிமேல் இப்படியே இருக்கிறேன் அப்பா" என்றாள் இந்திரகுமாரி.

"இந்தக் காட்டில் உனக்குப் பொழுது போகாதென்று நினைத்தேன். காட்டு வாழ்க்கை உனக்குப் பிடித்து விட்டதா?" என்று கேட்டான் சண்டதண்டன்.

"ரொம்பப் பிடித்திருக்கிறது அப்பா" என்றாள் அரசகுமாரி.

அன்றைய இரவில் மீண்டும் காட்டுவாசிகள் இருந்த இடத்துக்குச் சென்றாள். வனவாசிக் கிழவன் அவளுக்கு மாற்றுடை தரும்படி இரண்டு பெண்களுக்கு உத்தரவிட, அவளை மறைவுக்கு அழைத்துப்போய் இரண்டு சல்லடப் பாவாடைகளையும் கச்சைகளையும் கட்டிவிட்டார்கள். கொண்டையையும் தூக்கிப் போட்டார்கள். அன்று அவர்களுடன் சேர்ந்து மிக ரம்மியமாக ஆடினாள் அரசகுமாரி. தலைவனான கிழவன், அவள் ஆட்டத்தைக் கண்டு பிரமித்துப் போனான். "அம்மா! நீ காட்டில் எங்கள் சாதியில் பிறந்திருக்க வேண்டியவள்" என்று பாராட்டினான். ஆட்டம் முடிந்த பிறகு அவள் தனது ஆடையை அணிந்து கொண்டு கிளம்பினாள் மாளிகைக்கு, தனது பள்ளியறைக்கு வந்ததும் கொண்டையைக் கலைத்து பழையபடி முடிந்து கொண்டாள்.

இப்படி இரண்டு மூன்று நாட்கள் சென்றதும் சண்டதண்ட பல்லவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பகல் வேளைகளில் பெண் மிகவும் பண்பட்டுவிட்டதைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டான். நான்காவது நாளுக்குப் பிறகுதான் நிலைமை மாறியது. நான்காவது நாள் இரவு முற்றியதும், தந்தையை நித்திரை சோதித்து பழையபடி காட்டுவாசிகள் இருக்குமிடத்தை அடைந்த அரசகுமாரி, சற்று திகைத்து நின்றாள். அரைச் சக்கர வட்டமாக அ- நின்றுகொண்டிருந்த காட்டுப் பெண்களின் முன்பாக வயோதிகத் தலைவனுடன் ஒரு இளைஞனும் உட்கார்ந்து



கொண்டிருந்தான். இடையில் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த தீயின் ஜ்வாலையில் அவன் உருவம் நன்றாகவே தெரிந்தது அரச மகளுக்கு. இருபது வயதுக்கு மேல் மதிக்க முடியாத அந்த இளங்காளை, நிலத்தில் உட்கார்ந்து முழந்தாள்களைக் கட்டிக் கொண்டிருந்தான். அவன் முன்பு ஒரு நீண்ட வாள் கிடந்தது. அவன் பின்னால் ஒரு புரவி கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. நீண்ட அதன் உடலிலிருந்தும், உறுதியான கால்களிலிருந்தும் அது அவன் தோள்மீது தலையை வைத்துக் கொண்ட முறையிலிருந்தும் நன்றாகப் பழக்கப்பட்ட ஜாதிப் புரவியென்பதை அரசகுமாரி உணர்ந்து கொண்டாள். அதை அன்று வாங்கி விடுவதென்று முடிவு செய்தாள். அந்த நோக்கத்துடன் தீ ஜ்வாலையில் வெளிச்சத்துக்கு வந்த அவளை, அந்த வாலிபனும் திரும்பி நோக்கினான். அந்த வஜ்ரக் கண்களின் தீட்சண்யத்தைக் கண்டு அசந்து போனாள் அரசகுமாரி. இருப்பினும் கேட்டாள் "அந்தப் புரவி ஹார்மோஸிலிருந்து வந்திருக்க வேண்டும், அப்படித்தானே?" என்று.

அந்த வாலிபன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். அந்தப் பார்வை தனது உள்ளத்தையே ஊடுருவிப் பார்ப்பது போலிருந்தது அரசகுமாரிக்கு. அவளும் தனது வாட் கண்களால் அவன் விழிகளைச் சந்தித்தாள்.

## 3. அவள் கேட்ட பரிசு

கலந்த விழிகள் கலந்தே நின்றன. அந்த வாலிபனின் வஜ்ர கண்கள் தனது இதயத்துக்குள் ஊடுருவித் தாக்குவது போன்ற உணர்வையும், உணர்வினால் ஏற்பட்ட சங்கடத்தையும் இந்திரகுமாரி வெளியில் காட்டவில்லை. உள்ளே எழுந்த லேசான அச்சத்தையும் உதறி எறிந்தாள்.

தனது இயற்கையான முரட்டுக் குணத்தின் விளைவாக 'எதற்காக இவன் இப்படிக் கண்குத்திப் பாம்பு போல் பார்க்கிறான்? பண்பில்லாத காட்டுமிராண்டி' என்று உள்ளூற அவன்மீது வசை பாடினாலும், அவன் கண்களிலிருந்து தனது கண்களை விலக்கவே இல்லை. [illegible] அவள் கண்களில் மட்டுமே கவர்ச்சியிருந்தால் அந்த வாலிபன் அவற்றையே பார்த்துக் கொண்டிருப்பான். ஆனால் அவள் உடலின் வசீகரமும் அவன் கண்களை இழுத்ததால், அடுத்தபடி அவன் கண்கள் புடைத்து நின்ற மார்பகத்தின் காரணமாக எழுந்திருந்த சட்டைப் பகுதியைக் கவனித்தன. அங்கும் சில விநாடிகள் தனது கண்களை நிறுத்தி, பிறகு சராயணிந்த கால்களை நோக்கி, மெல்லியனவாகத் தெரிந்தாலும் அவற்றின் நீளத்தையும் திடத்தையும் அவன் ரசிக்கவே செய்தான். என்னதான் ஆண் வேஷம் போட்டாலும் பெண்மையின் சாமுத்திரிகா லட்சணங்களை மறைக்க முடியாதென்ற முடிவுக்கு வந்த அந்த வாலிபன், நீண்ட சட்டை அவள் கால்களின் மேற்புறத்தை வரை மறைத்திருந்ததால், அவள் சிற்றிடை தெரியாவிட்டாலும் மற்ற பரிமாணங்களைப் பார்க்கும்போது, அது சிறுத்துதான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்து, திருப்திக்கு அறிகுறியாகத் தலையையும் ஆட்டிக் கொண்டான். நீண்ட அந்த சட்டைக்குள் இருக்கும் பருவத் தொடை சற்றுப் பருத்து இருக்குமென்று ஊகத்தாலும் வேறு பல ஊகங்களாலும் லேசாக மந்தகாசமும் செய்தான்.

இந்திரகுமாரியின் நிலையும் சொல்லத் தரமல்லாததாயிருந்தது. அவன் கண்களைக் கண்டு, தனது கண்களை அடாதுப்படுத்தாவிட்டாலும், துணிவுடன் எதிர்கொண்டு நோக்கினாலும், அவன் வஜ்ரக் கண்கள் தாழ்ந்துவிட்டதை எண்ணிச் சற்றுப் பெருமையடைந்த அவள், அடுத்த விநாடி அந்தப் பெருமையை உதறினாள். அவன்



கண்கள் தன்மீது சஞ்சரித்ததன் விளைவாக அவை சென்ற இடங்களைப் பார்த்த இந்திரகுமாரி 'என்ன இருந்தாலும் ஆண் பிள்ளை அயோக்கியன்தான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

'அவன் மட்டும் என்னைப் பார்ப்பதென்ன?' என்று நினைத்து, தனது கண்களால் அவனை அளவெடுத்தாள் அவள். 'மேல் மதிப்புக்கு இருபது வயதுக்குட்பட்ட சிறுவனாகத் தோன்றுகிறானே தவிர, வயது முப்பதைத் தாண்டியிருக்க வேண்டும்' என்று ஊகித்தாள் அவள். இருபுறமும் வகிடு எடுத்து கத்தரிக்கப்பட்ட அவன் முரட்டுக் குழல்களைக் கவனித்த அவள், அவன் தன் தலையைப் பற்றி அதிக அக்கறை காட்டவில்லையென்பதை ஊகித்தாள். அந்த முரட்டுக் குழல்களைச் சரியாக இருபுறமும் வாரிவிட்டால் அவன் எத்தனை அழகாயிருப்பான்? எத்தனை கம்பீரம் அவனுக்கு ஏற்படும்? என்றெல்லாம் நினைத்தாள் இந்திரகுமாரி. நீண்ட கழுத்தும் எடுப்பான நாசியும் இடிப்பும் கவசம் போல் காட்சியளித்த அவன் மார்பும் அவன் வலிமைக்குச் சான்று கூறின. குதிரை வாட்டில் உட்கார்ந்திருந்த அவன் கால்களை முழுதாகத் தெரியாவிட்டாலும், அவை நல்ல நீளமும் உறுதியும் வாய்ந்தவை என்பது புலனாயிற்று. அவன் இடது கையில் மட்டும் மரத்தினால் செய்யப்பட்டது போன்ற ஒரு பெரிய கங்கணம் இருந்தது. அந்த வாலிபன் வேறு எந்தவித ஆபரணத்தையும் அணியாதது பற்றி அவள் வியந்தாள். சாதாரணமாக க்ஷத்திரியர்கள் அணியும் வீர சங்கிலியைக்கூட அவன் அணியாததால் அவன் ஏதோ ஏழை வீரனாயிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்த இந்திரகுமாரி, அவனை விட்டுத் தனது கண்களை எடுத்து அவன் பின்னால் நின்ற புரவி மீது செலுத்தினாள்.

புரவி ஆறடி நீளத்துடன் வாளிப்பான சரீரத்துடன்

மெல்லியதாக இருந்ததையும், அதன் நீண்ட கால்களையும் கவனித்த இந்திரகுமாரி, அது அராபி சாதியென்பதை உணர்ந்து கொண்டதால் மகிழ்ச்சி எய்தினாள். அந்தப் புரவியைப் பார்த்ததும் அதை வாங்கிவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் "நான் உங்களை ஒரு கேள்வி கேட்டேன்" என்றாள் அரச மகள் மெதுவாக.

"என்ன கேள்வி கேட்டாய்?" என்று குரலில் எந்த வித உணர்ச்சியும் இல்லாதவனாய் அவன் பதில் கேள்வி போட்டான்.

"இந்தப் புரவி ஹார்மோஸிலிருந்து வந்ததா என்று கேட்டேன்" இதை அதிகாரத் தோரணையில் கேட்டாள் அவள்.

அவன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. "உனக்குப் புரவிகளைப் பற்றி அதிகம் தெரியும் போலிருக்கிறது" என்று அவன் வினவினான் புன்முறுவலின் ஊடே.

"சுமாராகத் தெரியும்." இதைச் சற்றுச் சங்கடத்துடன் கூறினாள் அவள்.

"இது ஹார்மோஸிலிருந்து ஏன் வந்திருக்க வேண்டும்? அரேபியாவின் மற்றப் பகுதிகளிலிருந்து வந்திருக்க முடியாதா?" அவன் தொடர்ந்து கேட்டான்.

"முடியாது. இத்தனை நீள உடல் அரபு நாட்டின் மற்ற பிராந்தியப் புரவிகளுக்குக் கிடையாது" என்று அவள் விளக்கினாள்.

புரவிகளைப் பற்றி அவள் நன்றாக அறிந்திருக்கிறாளென்று அந்த வாலிபன் உணர்ந்து கொண்டான். "ஆம் ஆம், ஹார்மோஸிலிருந்து வந்ததுதான்" என்று கூறிய அவன் "ஆமாம், நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்?" என்று வினவினான்.



அவள் விழிகளில் லேசாகக் கோபம் துளிர்த்தது. "எங்கிருந்து வந்தால் உனக்கென்ன?" என்று அவள் வினவினாள், சினம் சொற்களிலும் ஒலிக்க.

"நீ மட்டும் என் புரவி எங்கிருந்து வந்ததென்று கேட்கலாமா?"

"புரவியும் நானும் ஒன்றா?"

"அதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாது."

"அப்படியா!"

"ஆம். இந்தப் புரவி நான் சொன்னபடி கேட்கும்."

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை. அவன் வேண்டுமென்றே தன்னை வம்புக்கு இழுக்கிறானென்பதைப் புரிந்து கொண்டாள். ஆகவே, வனவாசிக் கிழவனை நோக்கி "தாத்தா! ஏன் ஆட்டம் ஆரம்பிக்கவில்லை?" என்று வினவினாள்.

"உனக்காகத்தான் காத்திருக்கிறோம். உடையை மாற்றிக் கொண்டு வா!" என்றான் வனவாசிக் கிழவன்.

முந்தைய நாட்களைப் போலவே அவள் மறைவுக்குச் சென்று உடையை மாற்றிக்கொண்டு வந்து, மற்றப் பெண்களுடன் நின்று கொண்டாள். தம்பட்டம் ஒலிக்க நடனமும் துவங்கியது. மற்ற காட்டுவாசிகள் சுள்ளிகளைத் தூக்கிப் போட்டு, தீச்சுடரை எழுப்பவே, அந்தச் சுடரொளியில் மற்றப் பெண்களுடன் அரசகுமாரி ஆடினாள்.

அவளைக் கண் கொட்டாமல் பார்த்தான் அந்த வாலிபன். அவள் சல்லடம் தரித்திருந்ததால் அவள் பருவத் தொடைகள் தீச்சுடரில் நன்றாகவே தெரிந்தன. 'பெண் எத்தனை ஒல்லியாயிருந்தாலும் பருவப் பகுதிகள் திண்மை

யடைந்து விடுகின்றான்' என்று திருப்தியுடன் தனக்குத்தானே சொல்லிக் கொண்ட அந்த வாலிபன், அவள் மார்பு பெரியதாக இல்லாவிட்டாலும் அதன் சிறுமையிலும் ஒரு புடைப்பும் வன்மையும் இருந்ததைக் கவனித்தான். தீக்கட்டி முன்பு அவள் மற்ற பெண்களுடன் ஆடியபோது அவள் தனிப்பட்ட மலராகத் தெரிந்தாள். குழல் பிரியா திருப்பத்தாக பின்னிவிடப்பட்ட கொண்டை தந்த குவித்தாரின் புஷ்பவதத் உச்சியைப் போலிருந்ததை அந்த வாலிபன் கவனித்து 'இதைவிடச் சிறந்த உவமையை யாரும் சொல்ல முடியாது' என்று தன்னைப் பெருமையும் படுத்திக் கொண்டான். மற்றும் கால் வைத்து அவள் வளைந்து வளைந்து ஆடியபோது அவள் இடையின் இடையையும், அதற்குக் கீழ் எழுந்த பாந்த எழில்களையும் கண்டு அந்த வாலிபன் பிரமித்துக் கொண்டிருந்தான். 'இப்பேர்ப்பட்ட அழகி இந்தக் காட்டைச் சேர்ந்தவளாக இருக்க முடியாது' என்ற முடிவுக்கு வந்த அந்த வாலிபன் வளைவாகக் கிழவனை நோக்கி "தாத்தா! இவள் யார்? எங்கிருக்கிறாள்?" என்று வினவினான்.

"திட்டமாக எனக்குத் தெரியாது. அநேகமாக மாளிகையிலிருந்துதான் இருக்க வேண்டும்!" என்றான் கிழவன்.

"அவள் பெயர் என்ன?" என்று வாலிபன் வினவினான்.

கரியோதிகன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிது சிந்தித்துவிட்டு "எதுவாயிருந்தால் உனக்கென்ன?" என்று கேட்டான்.

"பார்த்தால் இந்தக் காட்டைச் சேர்ந்தவளாகத் தெரியவில்லை"

"உன்னைப் பார்த்தால் மட்டும் இந்தக் காட்டைச் சேர்ந்தவனாகத் தெரிகிறதா?"



"இல்லை. ஆனால் என் பெயர்தான் உங்களுக்குத் தெரியுமே!"

"நீ சொன்ன பெயர்தான் தெரியும். அது நிஜமான பெயர்தானா என்பது எனக்கெப்படித் தெரியும்?"

"என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?"

"இல்லையென்று சொல்லவில்லை. நீ உண்மையும் சொல்லி இருக்கலாம். ஆனால் நீ இந்தக் காட்டுப் பொருத்தமில்லை. உன்னைப் போன்ற பெருமக்கள் அரசமாளிகையில் தங்குவார்கள். நீ மாளிகைப் பக்கம் போகவில்லை. எப்பொழுது வந்தாலும் எங்களுடன் தங்குகிறாய். நாங்கள் காட்டிலுள்ளதைக் காட்டுகிறோம். பிறகு போய்விடுகிறாய். இவ்வளவுதான் உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். அவளும் அப்படித்தான். ஆனால் உன்னைப் போல அவளும் ஒரு பெயரைச் சொல்லியிருக்கிறாள். அது சரியான பெயரா, அதுவும் தெரியாது எனக்கு" என்று முடிவாகத் தனது சுருக்கமான விளக்கத்தைச் சொன்னான் கரியோதிகன்.

"சரி அப்படியானாலும் இருக்கட்டும். அந்தப் பெயரைத்தான் சொல்லுங்களேன்?" என்று வாலிபன் கேட்டான்.

"இந்திரகுமாரி என்று சொன்னாள்" என்று கிழவன் சொன்னதும் வாலிபன் முகத்தில் திகைப்பு உண்டாயிற்று. அதை நொடி நேரத்தில் அவன் மறைத்துக் கொண்டாலும் கரியோதிகன் கண்களை வாலிபனால் ஏமாற்ற முடியவில்லை.

"அந்தப் பெயர் உனக்கு முன்பே தெரியும் போலிருக்கிறதே?" என்று கிழவன் கேட்டான்.

"அப்படி ஒரு பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவள் இங்கு வரக் காரணமில்லை" என்றான் வாலிபன்.

கிழவன் நகைத்தான் மெதுவாக. "இங்கு யார் வருவார்கள். யார் வரமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. நகரத்தை வெறுப்பவர்கள் எல்லோருக்கும் அமைதிக்கு புகலிடம் காடும் மலையும்தான். ஆனால் அதிக நாள் உங்களால் இங்கு தங்க முடியாது. நான்கு நாட்களுக்கு மேல் உங்களுக்கு இது சலித்துவிடும்" என்றான் கிழவன் நகைப்பின் ஊடே.

"ஏன் தங்க முடியாது?" என்று அந்த வாலிபன் வினவினான்.

"இயற்கைக்கும் உங்களுக்கும் பொருந்தாது" என்ற கிழவன், அதற்குமேல் ஏதும் சொல்லவில்லை.

வாலிபனும் மேற்கொண்டு கேள்வி ஏதும் கேட்கவில்லை. நடனம் சூடு பிடித்துப் பெண்கள் வேகமாகச் சுழன்று ஆட ஆட, அவர்கள்மீது தீயின் சுடரொளி பட்டும் விலகியும் வித விதமான ஜாலங்களை விளைவித்துக் கொண்டிருந்தன. அதுவும் இந்திரகுமாரியின் உடல்மீது அது பட்டும் படாமலும் அவள் ஆட ஆட, மாறி மாறி இந்திர ஜாலத்தைச் செய்து கொண்டிருந்ததால் அந்த வாலிபன் அவள் மீது வைத்த கண்ணை வாங்காமலே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் ஆடியபோதே விழிகளை இருபுறமும் ஓட்டினாள். சுழலச் செய்தாள். வாலிபன் மனம் அந்த விழி வீச்சைத் தாங்க முடியாமல் தத்தளித்தது. அவள் தொடைகள் மீது வெளிச்சம் விழுந்து விலகியபோது, அவன் அந்தச் சுடர்மீது சீற்றமே கொண்டான்.

நடனம் முடிந்து அவள் ஆடையை மாற்றிக் கொள்ள மறைவுக்குச் சென்றபோது, வாலிபன் கிழவனைப் பார்த்து "அந்தப் பெண் எப்படி ஆடுகிறாள்? நீங்கள்தான் பழக்கி வைத்தீர்களா?" என்று கேட்டான்.



"இல்லை" என்று கிழவன் மேலும் சொன்னான், "இயற்கையிலேயே அவள் உடலில் நாட்டிய அமைப்பு இருக்கிறது. சொல்லி வரும் கலையும் உண்டு. சொல்லாது வரும் கலையும் உண்டு" என்று.

அதை ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான் அந்த வாலிபன். மீண்டும் பழைய உடையை அணிந்துகொண்டு திரும்பிய இந்திரகுமாரியை நோக்கிய வாலிபன் "மிக நன்றாக ஆடினீர்கள்" என்று பாராட்டினான்.

அவள் புன்முறுவல் கொண்டாள், "அதற்கு என்ன பரிசு தருகிறீர்கள்?" என்று வினவினாள்.

"என்னிடமிருக்கும் எதைக் கேட்டாலும் தருகிறேன்" என்றான் அவன்.

"வார்த்தை மீற மாட்டீர்களே?" என்று அவள் கேட்டாள்.

"என் எதிரிகள்கூட நான் வார்த்தை மீறியதாகச் சொல்லமாட்டார்கள்" என்றான் அவன்.

அவள் கேட்டாள் பரிசை—அதிர்ச்சியுற்று நின்று விட்டான் அந்த வாலிபன்.

## 4. துணைவன்

இந்திரகுமாரி கேட்ட பரிசைப் பற்றிக் காதில் வாங்கியதும் இரண்டு விநாடிகள் பேரதிர்ச்சியுற்ற அந்த வாலிபன், சட்டென்று அந்த அதிர்ச்சியை மறைத்து, தனது முகத்தில் மந்தகாசத்தின் சாயையைப் படரவிட்டுக் கொண்டதைக் கண்ட சண்டதண்டன் மகள், அவன் சாதாரண நாடோடியல்லவென்பதைப் புரிந்து கொண்டாள்.

உணர்ச்சியை அத்தனை விரைவில் அடக்கக் கூடிய வீரன் அசாதாரணமானவன் என்பதை ஊர்ஜிதமும் செய்து கொண்டதன் விளைவாக "வீரரே! நான் கேட்ட பரிசு அந்தப் புரவிதானால் அதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை" என்று அவனுக்குச் சமாதானமும் சொன்னாள். அந்தச் சமாதானத்தைச் சொன்னபோது குழலைப் போல் ஒலித்த அவள் குரலைக் கண்டு பிரமித்த அந்த வாலிபன் "கேட்ட பரிசைக் கொடுப்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது" என்று மிகுந்த கவலையுடன் சொன்னான்.

அவன் கவலையைத் தவறாகப் புரிந்து கொண்ட பல்லவன் மகள் "நமக்குச் சொந்தமான எதைக் கொடுப்பதிலும் மனச் சிக்கல் இருக்கத்தான் இருக்கும்" என்று கூறி விட்டு "விலையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். எதுவாயிருந்தாலும் கொடுத்துவிடுகிறேன்" என்று கூறினாள்.

அந்த வாலிபன் அவளை ஏறெடுத்து நோக்கினான். "விலையைப் பற்றிக் கவலைப்படவில்லை பெண்ணே. ஏனென்றால் இதற்கு விலையும் கிடையாது" என்று கூறவும் செய்தான்.

"விலை கிடையாதது உலகத்தில் என்ன இருக்கிறது?"என்று கேட்டாள் அவள்.

"எவ்வளவோ இருக்கின்றன! அவற்றில் இந்தப் புரவியும் ஒன்று" என்று கூறிய அந்த வாலிபன் "விலையைப் பற்றியல்ல நான் கூறுவது. இதனால் உனக்கு ஏற்படக் கூடிய ஆபத்தைப் பற்றித்தான் யோசிக்கிறேன்" என்றான்.

"என்ன ஆபத்து ஏற்பட்டுவிடும் இதனால்?" என்று அவள் கேட்டாள்.

"மிகவும் முரட்டுக்குதிரை இது" என்று அவன் சொன்னபோது,



"ஏன் நகைக்கிறாய்?" என்று அவன் வினவினான்.

"என் தந்தை என்னையும் முரட்டுப் பெண் என்றுதான் சொல்கிறார்."

"அப்படியானால்..."

"முரட்டுக்கு முரடு சமாளித்துக் கொள்ளும்."

இதைக் கேட்ட அவன் ஒரு விநாடி சிந்தித்தான். சில விநாடிகள் அவள்மீது தனது கண்களை ஓடவிட்டான். பிறகு ஏதோ புரிந்து கொண்டவன் போல் தலையை அசைத்து "சரி பெண்ணே! புரவியை எடுத்துக் கொள்" என்று சொன்னான். இப்படிச் சொல்லிக் கொண்டே எழுந்த அந்த வாலிபன், புரவியின் முதுகின் மேல் போட்டிருந்த கடிவாளத்தை எடுத்து அரசகுமாரியின் கையில் நீட்டினான். அதைப் பெற்றுக் கொள்வதற்குப் புரவியின் அருகில் வந்த அரச மகள், அந்தப் புரவியை ஒருமுறை வலம் வந்தாள். தீச்சுடரில் அதன் அழகைக் கவனித்தாள். "இதன் வர்ணம் மயக்கக் கூடியதாயிருக்கிறது. இந்த மாதிரி மேகவண்ணப் புரவியை ஏதோ ஓரிரு முறைதான் பார்த்திருக்கிறேன்" என்று சொன்ன அரச மகள், அந்த வாலிபன் கையிலிருந்த கடிவாளத்தை மிகுந்த பணிவுடன் பெற்றுக் கொண்டாள். அதைப் பெற்றுக் கொண்ட போது, அவள் கைகளில் பட்டுவிட்ட அந்த வாலிபன் விரல்கள் அவள் உடலில் மின்னலை அள்ளி வீசுவது போன்ற உணர்வை அளித்ததால், சற்றுப் பின்னடைந்தாள். அவள் இதழ்களில் புன்முறுவலொன்றும் தவழ்ந்தது. "வீரரே! இந்தப் பரிசுக்கு நன்றி சொல்லும்முறை எப்படி என்று எனக்குத் தெரியவில்லையே" என்று கேட்டாள்.

பதிலுக்கு அவன் அவள் செவ்விய இதழ்களை நோக்கினான். அவற்றில் துளிர்த்திருந்த ஈரத்தையும், அந்த ஈரமும் சிவப்புமாகச் சேர்ந்து அவள் அதரங்கள் தீச்சுடரின்

ஒளியில் மாணிக்கம்போல் பளபளப்பதையும் பார்த்தான். அப்படி அதிகமாகப் பார்ப்பது அநாகரிகமென்ற எண்ணத்தால் கண்களை நிலத்தில் தாழ்த்திக் கொண்டு "எனக்கு வேண்டும் பரிசைப் பிறகு கேட்கிறேன். சரி, புரவிமீது ஏற இப்படி வா. இதன்மேல் ஏற நான் உதவி செய்கிறேன்" என்று தனது இரு கைகளையும் அவளை நோக்கி நீட்டினான்.

அவன் தனது இதழ்களைப் பார்ப்பதை அவள் கவனித்தாள். அப்படிப் பார்த்ததால் ஏற்பட்ட வேட்கையின் சாயையையும் அவள் கவனித்தாள். நீட்டிய கைகளைப் பார்த்ததும் என்ன காரணத்தாலோ அவளை அச்சம் ஆட்கொண்டதால் "வேண்டாம், எனக்குப் புரவி ஏறத் தெரியும்" என்று சொல்லி, அவன் அவளைத் தடுப்பதற்குள் கடிவாளத்தைச் சற்று இழுத்துப் புரவி மீது பாய்ந்து ஏறிவிட்ட பிறகுதான் தனது தவறு அவளுக்குப் புரிந்தது. அவள் தன்மீது தாவி முதுகில் உட்கார்ந்ததுமே அந்த மேகவர்ணப் புரவி ஒரு கனைப்பு கனைத்தது. அடுத்து கால்களைத் தரையில் தேய்த்து திடீரெனப் பாய்ந்து மேலெழுந்து தரையில் குதித்து. பிறகு ஓடியும் தாண்டியும் மேலெழுந்தும் குதித்தும் வெறி பிடித்ததுபோல் தீயைச் சுற்றிச் சுற்றி அவளைத் தீயில் தள்ளிவிட முயன்றது. ஆனால் அத்தனைக்கும் அந்தப் பெண் சளைக்காததையும் அவள் உறுதியான கால்கள் அதன் வயிற்றைக் கவ்வியிருந்ததையும், புரவிமீது உட்கார்ந்ததுமே செங்குத்தாக விறைத்துவிட்ட அவள் உடல், அந்த ராட்சஸப் புரவியின் ஆட்டங்களுக்கெல்லாம் ஈடுகொடுத்ததையும், வாலிபனைத் தவிர வனவாசிக் கிழவனும் மற்ற காட்டுவாசிகளின் கும்பலும் பிரமித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவளைத் தன் முதுகிலிருந்து வீழ்த்திவிட அது செய்த அட்டகாசங்கள் அனைத்தும் பயனற்றுப் போனாலும் புரவி எதற்கும் அடங்காதிருந்ததைக் கண்ட வனவாசிக் கிழவர் மிகுந்த கவலையுடன் வாலிபனை நோக்கி "ரவி!



அதை நீயே அடக்குவது நல்லதல்லவா?" என்று வினவினார், கவலை குரலிலும் ஒலிக்க.

அவன் வினாவுக்கு வாலிபன் உடனே பதில் சொல்லவில்லை. "தாத்தா! நான் ஆரம்பத்திலேயே சொன்னேன், இது முரட்டுக் குதிரையென்று. அவள் கேட்கவில்லை. அதன் பயனை அனுபவிக்கிறாள். இதற்கு நான் ஏதும் செய்வதற்கில்லை" என்று கூறினான். சில நிமிடங்களுக்குப் பிறகு, அப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அந்தப் புரவி அந்தப் பெண்ணை மரத்தின் மீது மோதிவிட வெகு வேகமாகப் பாய்ந்தது – பெரியதொரு தேவதாரு மரத்தின்மீது. ஆனால் அதன் கடிவாளம் பலமாக இழுக்கப்பட்டதாலும், வயிற்றில் ஏதோ ஒரு பலவீனமான பகுதியில் விழுந்த உதையாலும் புரவி சட்டென்று நின்று பின்வாங்க முற்பட்டது. பிறகு வாயு வேகத்தில் காட்டின் ஊடே பாய்ந்து சென்றது.

நீண்ட நேரம் புரவி திரும்பாததைக் கண்ட வனவாசிக் கிழவன் மீண்டும் தீச்சுடர் அருகே உட்கார்ந்து கொண்டான். வாலிபனையும் மற்றவர்களையும் உட்காரச் சொல்லி, "ரவி! புரவி நீ அழைத்தால் வருமா?" என்று கேட்டான்.

"வரும்."

"சரி கூப்பிடு அதை"

"தேவையில்லை"

"உன் புரவி ஒரு பிசாசு."

"அந்தப் பெண்ணும் ஒரு பிசாசு."

"இருந்தாலும் பெண்ணல்லவா?"

"தாத்தா! பெண்களுக்குப் பட்டால்தான் தெரியும். அவளே வருவாள் விரைவில்."

"எப்படித் தெரியும் உனக்கு."

வாலிபன் மெல்ல நகைத்தான். "அந்தப் பெண்ணுக்குப் புரவியேற்றம் புதிதல்ல. தவிர புரவியை இயக்கவும் அடக்கவும் வேண்டிய மர்மங்களை அவள் அறிந்திருக்கிறாள். இந்தப் பெண்ணைத் தவிர வேறு யாராவது இந்தப்புரவியில் ஏறி இருந்தால் ஒரு விநாடிகூட அதன்மீது உட்கார முடியாது. இதன்மீது உட்கார முயன்று கீழே தள்ளப்பட்டு மண்டை உடைந்தவர்கள் உண்டு. இப்பொழுதுதான் என்னைத் தவிர இந்தப் புரவியைக் கையாளக்கூடிய இன்னொருவரை நான் பார்க்கிறேன்" என்று கூறினான். அவன் சொற்களில் உறுதியிருந்தது. அந்தப் பெண்ணைப் பற்றிய மதிப்பும் பூர்ணமாக இருந்தது.

"விசித்திரமான பெண்" என்றான் வயோதிகனான வனவாசி.

"ஆம். தவிர இவள் தந்தைக்கு இவள் ஒரே பெண்ணாயிருக்க வேண்டும்" என்றும் சொன்னான் அந்த வாலிபன்.

"அதெப்படித் தெரியும் உனக்கு?" கிழவன் கேட்டான் வியப்புடன்.

"ஆணுடை தரிக்கிறாள், இரவில் இஷ்டப்படி திரிகிறாள், இவள் தந்தை இவளை உருப்படியாக வளர்க்கவில்லை, அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுத்திருக்கிறார்" என்று கடிந்தும் பேசினான்.

இப்படி அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே காட்டுக்குள்ளிலிருந்து புரவியின் பெருமூச்சு புஸ் புஸ் என்று பெரிதாகக் கேட்டது. அடுத்த சில விநாடிகளில் அரச மகள் புரவியைச் செலுத்திக் கொண்டு தீச்சுடரின் ஒளிக்குள் வந்தாள். புரவியும் புரவியின் புதுச் சொந்தக்காரியும் இரு விதமாகத் தோற்றமளித்தார்கள். முதலில் ஆர்ப்பாட்டம் செய்த புரவி மிகவும் களைத்திருந்தது. அதன்



வாயில் நுரை கட்டி வழிந்து கொண்டிருந்தது. பெருமூச்சால் அதன் சாட்டை வயிறு எழுந்து எழுந்து தாழ்ந்து கொண்டிருந்தது. அதன்மீது அப்பொழுதும் கம்பீரமாக அமர்ந்திருந்த அரச மகளும் களைத்திருந்தாள். அவள் முகத்தில் குறுவேர்வை துளிர்த்து அதுவும் முகத்துக்குத் தனி அழகைக் கொடுத்தது. அவள் மேல் சட்டை இரண்டு இடங்களில் கிழிந்திருந்தது. அவள் மிக வேகமாகச் சவாரி செய்ததில் மரக்கிளைகளில் எங்கோ சட்டை மாட்டி கிழிந்திருக்கிறது என்பதை அந்த வாலிபன் புரிந்து கொண்டான். சட்டை கிழிந்ததால் லேசாகத் தெரிந்த வலது தோளும் சிற்றிடையின் இடப்புறமும் தீச்சுடரில் செவேலெனத் தெரிந்தன. மற்றபடி அவள் உடல் துவளவில்லை. கால்களில் தெரிந்த பகுதிகளில் அதிக சிராய்ப்புமில்லை. இடது கணுக்காலில் மட்டும் ஓரிடம் லேசாக எங்கேயோ உராய்ந்ததன் விளைவாகச் சதை சிறிது கீறி குருதியின் துளிகள் தெரிந்தன.

வேகமாய்ச் செய்த குதிரைச் சவாரியால் சற்றே வாங்கிய பெருமூச்சைச் சமாளித்துக் கொண்டு, அவள் சர்வ சாதாரணமாகக் கீழே இறங்கினாள். சேணத்தைப் புரவியின் தோளில் போட்டுவிட்டு வனவாசிக் கிழவனிடம் வந்து "தாத்தா! நேரமாகிறது, நான் போய் வரட்டுமா?" என்று கேட்டாள்.

"அம்மா! இன்று நேரம் மிக அதிகமாகிவிட்டதே. நான் துணை வரட்டுமா?" என்று கிழவன் கேட்டான்.

"வேண்டாம், நானே போய்விடுவேன்" என்றாள் அவள்.

"அதுவரை பேசாதிருந்த வாலிபன் "உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் நான் துணை வருகிறேன்" என்று சொன்னான்.

அவள் சிறிது சிந்தித்தாள். அவள் சில வேளைகளில் தன்னை 'உங்கள்' என்று மரியாதையாகவும் இன்னும் சில

நேரங்களில் 'நீ' 'உனக்கு' என்று சகஜமாகவும் பேசலானதை எண்ணிப் புன்முறுவல் கொண்டாள். 'வயோதிகனை வனவாசியைத் துணைக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டு இந்த வாலிபனை அழைத்துக்கொண்டு போனால் தாத்தாதான் என்ன நினைப்பார்?' என்று சற்றுத் தயங்கினாளும் "துணை வேண்டியதில்லை. அவசியம் என்று நீங்கள் கருதும் பட்சத்தில் வருவதில் எனக்கு ஆட்சேபணையும் இல்லை" என்று முடிவாகச் சொன்னாள். "தாத்தா, போய் வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டு அவள் முன் நடக்க, வாலிபன் பின்னால் நடந்தான். இருவரையும் பக்கவாட்டில் தொடர்ந்தது அந்த மேகவர்ணப் புரவி.

என்னதான் துணிச்சலுள்ளவளானாலும் அரசமகளுக்கு அந்த வாலிபன் உடன் வந்ததில் சற்று உணர்ச்சிகள் புரண்டதால் மௌனமாகவே நடந்தாள். வாலிபனும் பேசவில்லை ஏதும். பிறகு தனது உணர்ச்சிகளை உதற அவளே பேச முற்பட்டு "உங்கள் பெயரைச் சொல்லவில்லையே நீங்கள்" என்று மெதுவாகக் கேட்டாள்.

"ரவி என்று இந்தக் காட்டுவாசிகள் என்னை அழைக்கிறார்கள்" என்று சொன்னான் அவன்.

"என் பெயரைக் கேட்கவில்லையே நீங்கள்?" என்று அவள் கேட்டாள்.

"நீ இந்திரனுக்குப் பெண் என்று கேள்வி" என்று வாலிபன் அவள் பின்னாலிருந்து சற்று முன்னேறி அவள் பக்கத்தில் நடந்தான்.

அவள் மோகனப் புன்னகை காட்டினாள். "மறைமுகமாகத்தான் அழைப்பீர்கள் போலிருக்கிறது. இந்திரகுமாரி என்று ... கேட்டாள்



புன்னகையின் ஊடே அப்பொழுது பக்கத்தில் வந்து கொண்டிருந்த அவள் உடலின் மீது அவன் உடல் லேசாக உராய்ந்தது. புரவி சற்று அவனை இடித்ததால்.

"அந்த உரசலில் ஆயிரம் இன்ப உணர்ச்சிகளை அனுபவித்தான் அந்த வாலிபன். அக்கம் பக்கத்தில் நடந்ததாலும் புரவியும் அடிக்கடி நகர்ந்ததாலும் அவன் கையொன்று அவளையும் அறிந்தோ அறியாமலோ மீறி அவள் பின்னழகில் பட்டுப்பட்டு விலகிக் கொண்டிருந்தது. அவளுடைய உணர்ச்சிகள் அவளை உலுக்கிக் கொண்டிருந்தன.

தனது உணர்ச்சிகளை மறைக்க அவன் சொன்னான்:

"இந்திரகுமாரி என்று பெயர் சொல்லி அழைக்க எனக்கு இஷ்டம்தான். ஆனால் உனது அனுமதியில்லாமல் நான் எப்படி அழைக்க முடியும்" என்று.

அவள் தலை கவிழ்ந்து நடந்த வண்ணம் "அதனால் தான் மறைமுகமாக அழைத்தீர்களா?" என்று கேட்டாள்.

"ஆம்" என்று அவன் பதில் சொன்னான். அத்துடன் அவள் தோளில் கிழிந்திருந்த சட்டையின் பாகத்தைத் தொட்டுப் பார்த்தான்.

அந்த முதல் ஸ்பரிசம் அன்றுவரை அவள் காணாத இன்ப வேதனையை சிருஷ்டித்தது. அத்துடன் நில்லாமல் அவன் "இதோ இங்கும் கிழிந்திருக்கிறது" என்று இடையிலிருந்த கிழிசலிலும் கையை விட்டு "வெறும் ஆடை கிழிசல்தானே! மரக்கிளை கீறவில்லையே!" என்று அனுதாபத்துடன் கேட்டான்.

அவள் இடையின் வழவழப்பில் கைபட்டபோது அவன் மெய்சிலிர்த்தான். அத்துடன் நில்லாது. அவளது இடையில் தனது கையைச் செலுத்தி "இந்த விஷப் பரீட்சையை நீ

அவன் குனிந்த தலை நிமிராமலே கேட்டான் "எந்த விஷப் பரிட்சையை?" என்று. அவள் கேள்வியில் கேலி இருப்பது அவனுக்குத் தெரிந்தது.

தெரிந்தும் தெரியாதவன் போல் "புரவி மீது நீ சவாரி செய்தது. அதனால்தானே சட்டை கிழிந்து காயமும் பட்டிருக்கிறது?" என்று அவன் கேட்டான்.

"காயம் எங்கும் படவில்லையே" என்று அவள் சொன்னாள், அவனை சோதிப்பதற்காக.

"கணுக்காலில் கீறியிருக்கிறது. ரத்தமும் துளிர்த்திருக்கிறது" என்றான் அவன் வேதனையுடன்.

"அதை எப்படிப் பார்த்தீர்கள்?" என்று அவள் வினவினாள்.

"நீ வந்தவுடனேயே பார்த்தேன். என் புரவியின் யோக்கியதை எனக்குத் தெரியாதா?" என்று சொல்லிக் கொண்டே "இந்திரகுமாரி! சற்று நில். அந்தக் காயத்தைப் பார்த்துவிடுகிறேன்." என்று சட்டென்று முழந்தாளிட்டுக் கீழே உட்கார்ந்து அவள் இடது காலைப் பிடித்து சற்றுத் தூக்கி, தன் மடியில் வைத்துக் கொண்டு கீறலைக் கவனித்தான். கீறலில் ரத்தம் உறைந்துவிட்டாலும் புள்ளி புள்ளியாகத் தெரிந்த மணிகளைத் தனது கையால் துடைத்து அகற்றினான். அத்துடன் "வேறெங்காவது காயமிருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே அவள் கால் சராயைச் சிறிது உயர்த்தினான்.

"இல்லை இல்லை. வேறெங்கும் காயமில்லை. எழுந்திருங்கள்" என்று அவள் கூறினாள், சிரித்தாள். மனோகரமான அந்தச் சிரிப்புதான் அடுத்த நிகழ்ச்சிக்குக் காரணமாயிற்று. அவன் அவள் காலை விடவில்லை. மெதுவாக அதை வருடினான்.



"எழுந்திருங்கள்" அவள் மிக மெதுவாகச் சொன்னாள். சிறிது தயக்கத்திற்குப் பிறகு "என் காலை நீங்கள் பிடிப்பது தகாது" என்றும் கூறினாள்.

"ஏன் தகாது?" என்று அவன் கேட்டுக் கொண்டே எழுந்தான்.

"நான் பெண்" என்று அறிவுறுத்திய அவள் திகைப்படைந்தாள். இத்தனை நாள் அதைப் பற்றிச் சிந்திக்காத காரணத்தால்.

"அதனாலென்ன?" என்றான் அவன்.

"நீங்கள் என் காலைப் பிடிப்பதை யாராவது பார்த்தால்?"

"பார்த்தாலென்ன?"

"தவறாக நினைப்பார்கள்."

"என்ன அப்படித் தவறு செய்துவிட்டேன் நான்?"

"பெண்ணின் காலை ஆண்மகன் பிடிப்பது நியாயமல்ல."

"பொதுவில் பிடிப்பது நியாயமல்லதான்..."

"மறைவில் பிடிக்கலாம் போலிருக்கிறது?"

"பிடிக்கத்தான் வேண்டும்."

"எதற்கு?" — இதைக் கேட்டதும் அவள் தனது உதடுகளைக் கடித்துக் கொண்டாள் வெட்கத்தின் விளைவாக.

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவளும் கேட்கவில்லை. அவன் சட்டென்று அவள் இடையைப் பிடித்துத் தூக்கி, புரவியின் மீது அவளை உட்கார வைத்து, கடிவாளத்தை அவள் கையில் கொடுத்தான். அவள் புரவியை நடத்தினாள். அவன் அவள் காலைப் பிடித்தவண்ணம் புரவியின் பக்கத்தில் நடந்து சென்றான்.

புரவியின் ஒவ்வொரு அசைவிலும் அவன் கட்டுமஸ்தான உடலும் அதாவது மேலும் ஊர்ந்து வருவதை உணர்ந்தாள் இந்திரகுமாரி. ஓரிடத்தில் அவன் கையைத் தனது கையால் ஒதுக்கி "உம்! அதற்குமேல் வேண்டாம்" என்று கூறியும் கொண்டாள். அவன் மேற்கொண்டு விஷமம் எதும் செய்யவில்லை. மௌனமாகவே நடந்து சென்றான். மாளிகையை அடைந்ததும் அவன் சற்றுப் புறமாகச் சென்று கொட்டடியில் புரவியைப் பிணைத்தான். பிறகு தனது அறைப் பக்கம் சென்று பக்கத்திலிருந்த ஒரு மரக்கிளையில் ஏற முற்பட்டான். அந்தக் கிளை ஒரு சாளரத்தை நோக்கி வளர்ந்திருந்ததையும் அது மரத்தின் அடிக்கட்டையிலிருந்து வளர்ந்திருப்பதையும் கண்ட அந்த வாலிபன் "இதுதான உன் அறையா?" என்று சாளரத்தைக் காட்டினான்.

"ஆம்" என்றாள் அவள்.

"அவன் அவளைக் கிளையிலிருந்து அப்படியே தூக்கி அந்தச் சாளரக் கட்டையில் நிற்க வைத்தான். "நானிருக்கும் வரையில் அந்தக் கிளை உனக்குத் தேவையில்லை" என்றான்.

அவள் தலையசைத்தாள். அந்த அசைப்பில் எத்தனையோ அர்த்தங்கள் புதைந்து கிடந்தன. அவன் அவளை ஒருமுறை உற்று நோக்கிவிட்டு நடந்தான், காட்டை நோக்கி. சில நொடிகளில் காடு அவனை விழுங்கிவிட்டது. சாளரத்தின் புறம்பே அவள் காட்டை நோக்கி நின்று கொண்டிருந்தாள். பிறகு பெருமூச்சு விட்டு அறைக்குள்ளிருந்த கட்டிலை நோக்கிச் சென்று பஞ்சணையில் தொப்பென்று விழுந்தாள்.

## 5. பெண்மையின் உதயம்

ஆண்கோலம் பூண்டு, யாராலும் கிட்டவும் நெருங்க முடியாத தனது புரவியை அடக்கி ஏறிவிட்ட அந்த அரசமகளை, கையால் தூக்கிச் சாளரக் கட்டையில் உட்கார



வைத்துவிட்டு, காட்டுக்குள் புகுந்துவிட்ட கட்டழகு வாலிபனான கடம்ப ரவிவர்மன், மரங்களின் மறைவுக்கு வந்ததும் சிறிது நின்று சாளரத்தைத் திரும்பி நோக்கினான். சுகபடுத்து [illegible] அனைத்தும் ஆடச் [illegible] நோக்கி தலை நிலை மங்கிவிட்டதன் காரணமாக அந்தச் சாளரம் விளக்கமாகத் தெரியாவிட்டாலும் அதன் கட்டையிலிருந்து உள்ளே குதித்து—காட்டை நோக்கிய கட்டழகியின் வெள்ளைநிற உருவம் மட்டும் மிக விவரமாகத் தெரிந்தது ரவிவர்மன் கட்டழகுக்கு. சாளரத்தின் கட்டையிலிருந்து இறங்கி சாளரத்தை அடைந்து ஒரு வினாடியே நின்ற இந்திரகுமாரி, சட்டென்று அறைக்குள் சென்றுவிட்டதால் சோகப் பெருமூச்சு விட்ட மகாவீரனான ரவிவர்மன் கடம்பன், காட்டின் ஊடே சிந்தனை மிகுந்து நடக்கலானான். அவன் எண்ணம் முழுவதையும் அந்த இரவின் நிகழ்ச்சிகள் ஆட்கொண்டிருந்தபடியால், திரும்பத் திரும்ப அவள் நாட்டியமாட வந்ததும், ஆடிய நாட்டியமும், நாட்டிய உடையை அணிந்ததால் நன்றாகத் தீச்சுடரில் தெரிந்த அவள் அங்க லாவண்யங்களும் அவன் இதயத்தை ஆட்டிக் கொண்டிருந்தன. அத்துடன் அந்த முரட்டுப் பெண்ணின் இடையையும் தோளையும் கிழிந்த சட்டை மூலமாகத் தான் தொட்டபோது அந்த இடங்கள் எத்தனை வழவழப்பாக இருந்தன என்று சிந்தித்துப் பார்த்த ரவிவர்மன், அந்த அழகியின் மற்ற பகுதிகள் இன்னும் எத்தனை வழவழப்பாகவும் மென்மையாகவும் இருக்கும் என்று எண்ணி உவகை கொண்டான். 'அராபியர் உடையை இவள் எதற்காக அணிகிறாள்?' என்று ஒரு முறை கேட்டுக் கொண்டாலும் 'ஏன், அணிந்தாலென்ன? அதுவும் அவளுக்கு அழகாகத் தானே இருக்கிறது?' என்று சொல்லிக் கொண்டான். "அழகாக இருந்தால் எந்த ஆடையும் அழகு படுத்தும். அழகுக்கு யார் அழகு செய்வர்? எது அழகு படுத்தும்?

என்று கேள்விகளை எழுப்பிய ரவிவர்மன் 'அவளை அழகுபடுத்த ஆடை எங்கிருக்கிறது? அவள்தான் ஆடைக்கு அழகு கொடுக்கிறாளே!' என்று அவள் அழகைச் சிலாகித்துக் கொண்டே நடந்து காட்டுவாசிகளின் குடிசைகளிடம் வந்து சேர்ந்தான்.

அவன் வருகைக்காகக் காத்திருந்த வனவாசிக் கிழவன் "அதிக நேரமாகிறதே ரவி" என்று கேட்டான்.

"அந்தப் பெண்ணை மாளிகைக்குக் கொண்டு போய் விட்டு வந்தேன்" என்று வனவாசிக்குத் தெரிந்த விஷயத்தைப் புதிய செய்தி போல் சொன்னான் ரவி.

"அதற்கு இத்தனை நேரமா?" என்று வனவாசி வினவினான்.

"அவள் இருக்கும் அந்தப் பெரிய மாளிகை இங்கிருந்து ஒரு நாழிகைப் பயணம் இருக்கிறதே..." என்ற ரவிவர்மன் புன்முறுவல் செய்தான்.

"நடந்து சென்றால் அத்தனை நேரமாகும். புரவியில் போவதற்கு அத்தனை நேரம் எதற்கு?"

"அவளுக்குத்தானே புரவியிருந்தது?" நான் நடந்து தானே போனேன்,"

"ஆம் ஆம்" என்று ஏதோ சிந்தனையுடன் தலையை அசைத்த கிழவன் "ரவி! நேரமாகிவிட்டதே, நீ உணவு அருந்த வேண்டாமா?" என்று கேட்டான்.

"வேண்டாம், காலையில் பார்த்துக் கொள்வோம்" என்றான் ரவிவர்மன்.

"சிறிது பால் சாப்பிடுகிறாயா? நல்ல ஆட்டுப்பால் இருக்கிறது" என்றான் வனவாசி.



"வேண்டாம் தாத்தா, இன்று காதுக்கும் விருந்து கிடைத்தது, கண்ணுக்கும் விருந்து கிடைத்தது..." என்று இழுத்தான் ரவிவர்மன்.

வனவாசியின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. "அந்த விருந்தை ஏற்கனவே பலமுறை அருந்தியிருக்கிறாய். அப்பொழுது சாதாரண உணவையும் அருந்துவாயே. இன்றைக்கு மட்டும் என்ன விதிவிலக்கு?" என்று விசாரித்த வனவாசியின் கண்களில் விஷமச் சிரிப்பு ஒளிவிட்டது.

"இன்றைய நடனத்தில் மற்ற நாட்களில் இல்லாத புதுமை ஒன்று புகுந்ததல்லவா?" என்று கேட்டான் ரவிவர்மன்.

"இந்திரகுமாரியைச் சொல்கிறாயா?"

"வேறு யாரைச் சொல்லுவேன்?"

"அவள்—"

"என்ன தாத்தா?"

"யாருக்கும் அடங்காத உன்னையே அடக்கி விட்டாள்."

"தாத்தா!" பொய்க் கோபம் காட்டினான் ரவிவர்மன்.

"ரவி! அவளிடம் மனதைப் பறிகொடுக்காதே."

"ஏன் தாத்தா?"

"அவளை எல்லோரும் அடங்காப்பிடாரி என்று அழைக்கிறார்கள். ஆனால் ஒரு விதத்தில் அதுவும் நல்லதுதான்."

"ஏது?"

"அடங்காப்பிடாரிக்கும் அடங்காப்பிடாரிக்கும் பொருத்தம் சரியாயிருக்கும்" என்று நகைத்த வனவாசிக் கிழவன் "படுத்துக்கொள்ள பாய் கொண்டு வரட்டுமா?" என்று கேட்டான்.

'வேண்டாம்'

[illegible]

[illegible]

ஆனால் நவீனன் உருவம் மறைந்ததும் கட்டிலில் பஞ்சணையில் விழுந்த இந்திரகுமாரிக்கு, அந்தப் பஞ்சணை பாறைபோல் கடினமாகத் தெரிந்தது அவள் இரண்டு முறை புரண்டு படுத்தாள். 'அப்பா! அந்த வாலிபன் எத்தனை நல்லவன்?' என்று எண்ணியவள் 'சீ! சீ! அவன் நல்லவனா? ஏது மண்ணாங்கட்டியாவது. மிக துஷ்டன். அப்பப்பா என்ன இந்திரஜாலங்களையெல்லாம் கற்றிருக்கிறான்' என்று நினைத்துச் சீற்றம் கொண்டாள். 'நான் அறியும்போது என்னை எப்படி உற்றுப் பார்த்தான். அவன் பார்த்த இடங்களிலெல்லாம் பார்க்கத் தக்கவையா? நான் அணிந்திருந்த சல்லடத்தையும் ஊடுருவிப் பார்த்து விடுவான் போலிருக்கிறதே. அவன் பரம அயோக்கியன். சந்தேகமில்லை' என்று கடிந்து கொண்டாள்.

'அடுத்து அவன் புரவியை அடக்கிய பிறகு அதை எனக்குப் பரிசாகக் கொடுத்தான். அது சரி. நானே வெட்கமில்லாமல் கேட்டேன். போகட்டும் எனக்கு எதற்காகத் துணைக்கு வந்தான்? துணைக்கு வந்தவன் சும்மா வந்தானா? எனது கால் சராயைச் சற்று மேலே ஏற்றினான். இடங் கொடுத்தால் மடம் பிடுங்குகிற கதையாகக் கைகளை என் தொடைக்கும் கொண்டு வந்தான். மகாமோசப் பேர்வழி நாங்கள் அக்கம் பக்கத்தில் நடந்தபோது என்மீது வேண்டுமென்றே இடித்தான். பின் என் ஆடைக் கிழிசல்களை



[illegible] என்றும் தனது பெண்மையின் [illegible] நினைவுகளில் சிக்கி, நீண்ட நேரம் உறக்கம் பிடிக்காமலே ஒரு ஜாமத்தைக் கடத்திவிட்ட இந்திரகுமாரி, அப்படியே அசந்து உறங்கிவிட்டாள். பொழுது விடிந்து இரண்டு நாழிகைக்குப் பிறகும் அவள் எழுந்திருக்கவில்லை.

வெள்ளி முளைக்கு முன்பே எழுந்திருக்கும் பழக்கமுள்ள தனது செல்வி, சூரியன் எழுந்தும் கண் விழிக்காததை நினைத்து வியப்படைந்த பல்லவனான சண்டதண்டன் தனது பணி மக்களை அழைத்து புதல்வி ஏன் எழுந்திருக்கவில்லையென்று விசாரித்தான். அவர்களுக்குக் காரணம் ஏதும் தெரியாது போகவே, அவளுக்கு உடல்நிலை சரியாயிருக்காது என்று நினைத்து "நான் கடல் பக்கம் போகிறேன். அரசகுமாரி விழித்தால் வரச் சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டு மாளிகையை விட்டு வெளியேறினான். மலைச்சரிவில் பாதி மலை வரையில் நடந்த சண்டதண்டன், தனது மகள் கூட வராத காரணத்தால் அந்தப் பாதி மலையில் இருந்த ஒரு பாறையில் உட்கார்ந்து சிந்தனை வசப்பட்டான் அவன். நாலைந்து வருடங்களாகியும் அவளுக்கு ஒரு மணாளன் கிடைக்காதது பற்றி

எண்ணியெண்ணி, அவற்றுக்கெல்லாம் காரணம் அவளது ஆண் உடையும் ஆண்களைப் போன்ற நடையுடைப் பாவனைகளும்தான் என்று முடிவுக்கு வந்தான். அப்படி அவன் சிந்தனை வசப்பட்டிருந்த சமயத்தில்தான் இந்திர குமாரி அந்தப் புதுப் புரவியில் அசுர வேகத்தில் பறந்து வந்தாள் மலைச்சரிவில்.

அவள் அப்படி வருவதை வியந்து பார்த்துக் கொண்டிருந்த சண்டதண்டன், அது தான் வாங்கிக் கொடுத்த புரவிகளில் ஒன்றல்ல என்ற முடிவுக்கு வர அதிக நேரம் பிடிக்கவில்லை. தான் புரவி ரூபத்தில் வேண்டுமென்றே வாங்கிக் கொடுத்த எருமைகளுக்கும் அந்தப் புரவிக்கும் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் என்பதை அதன் நடையிலிருந்தே புரிந்துகொண்ட பல்லவன், 'இந்தப் புரவி இவளுக்கு ஏது?' என்று சந்தேகித்தான். அந்த மலைப் பகுதியெங்கும் இத்தகைய சாதிப் புரவி கிடையாதென்பது அவனுக்குத் தெரிந்தே இருந்ததால் 'இந்த முரட்டுப் பெண் இந்த முரட்டுக் குதிரையை எங்கிருந்து பிடித்தாள்?' என்று ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டாலும், மறுவிநாடி அந்தக் கேள்வியை மறந்தான். அந்தப் புரவியின் வேகத்திலும் பாய்ச்சலிலும் மகள் மலையில் உருண்டுவிட்டால், அவள் கைகால்களில் அடிபட்டு ஊனப்பட்டால் அவளை யார் திருமணம் செய்து கொள்வான் என்று அச்சமுற்ற சண்டதண்டன் அந்தப் புரவியையும் அவள் அசட்டையுடன் அதைச் சமாளிப்பதையும் கண்டு 'பாரதத்தில் வீராங்கனைகளுக்குக் குறைச்சலா என்ன?' என்று பெருமைப்படவும் செய்தான்.

அத்தனையிலும் அவள் தன் பெண் என்ற பெருமை பிடிபடவில்லை பல்லவனுக்கு. அந்த முரட்டுப் புரவிமீது அமர்ந்திருந்ததே அவளுக்கு அழகாயிருந்ததைக் காட்ட முடியுமானால் அவளைத் திருமணம் செய்து கொடுப்பது



சிரமமாயிருக்காது என்று நினைத்தான். ஆனால் அவள் அழகை ஆண்மை குறைத்திருக்கிறதென்று பல்லவன் நினைத்துப் பெருமூச்சு விட்டான். அந்தச் சமயத்தில் புரவியை வாயு வேகத்தில் சரிவில் செலுத்தி வந்த இந்திரகுமாரியும் புரவியைத் தந்தைக்கு அருகில் நிறுத்தி, கீழே குதித்துத் தந்தைக்கு அருகில் உட்கார்ந்து, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அவள் கட்டிய வேகத்தில் மூச்சுத் திணறியதால் "விடு, என்னைக் கொன்றுவிடாதே" என்று சண்டதண்டன் கூவியே, கழுத்தை விட்ட இந்திரகுமாரி அவன் கழுத்தைத் தடவிக் கொடுத்து "அப்பா! ரொம்ப வலித்து விட்டதா?" என்று செல்லமாகக் கேட்டாள்.

"இல்லை பெண்ணே!" என்று சமாதானம் சொன்ன சண்டதண்டன் "ஆமாம்! இந்தப் புரவி ஏது உனக்கு?" என்று கேட்டான்.

"நீங்கள்தான் சரியாகப் புரவி வாங்கிக் கொடுக்கவில்லை. நானே வாங்கிவிட்டேன்" என்று செல்லமாகப் பேசினாள் இந்திரகுமாரி.

"அம்மா! இந்தப் பகுதிகளில் இந்த மாதிரி அரபுப் புரவிகள் கிடையாதே. உனக்கு மட்டும் எங்கிருந்து கிடைத்தது?" என்று மீண்டும் கேட்டான் பல்லவன்.

"நீங்கள் இஷ்டப்பட்டிருந்தால் நீங்களும் வாங்கியிருக்கலாம்" என்றாள் இந்திரகுமாரி.

"இஷ்டப்படாமலென்ன? உனக்கு வேண்டியது எதை மறுத்தேன்?"

"அப்பா!"

"என்னம்மா?"

"உங்கள் தந்திரம் எனக்குத் தெரியாதா?"

"தந்திரமா!"

"ஆமாம், நாகரீகமற்ற இந்தக் காட்டுப்பகுதிக்கு நீங்கள் அழைத்து வந்ததே தலைநகரில் எனது தொல்லை தாங்க முடியாததால் தானே?"

மெல்ல நகைத்தான் பல்லவன். அவள் பேச்சை வேறு திசையில் மாற்ற முயல்வதை அறிந்து "அது கிடக்கட்டும், இந்தப் புரவி எது? என்ன விலை? எதும் சொல்லவில்லையே?" என்று வினவினான்.

இந்திரகுமாரி கண்களை மலைப்பாறைமீது ஓட்டினாள். "அப்பா!" என்று மெதுவாக அழைத்தாள்.

"உம்" என்று உம் கொட்டினான் சண்டதண்டன்.

"இந்தப் புரவிக்கு விலை உண்டா?" என்று அவள் மெதுவாக வினவினாள்.

"விலை மதிக்க முடியாதது என்று ஒரு சொல் வழக்கு உண்டு. ஆனால் இத்தனை நல்ல புரவியை யாரும் இனாமாகக் கொடுக்கமாட்டார்கள்..." என்று பல்லவன் சொற்களை இழுத்தான்.

"கொடுத்திருந்தால்?" என்று வினாத் தொடுத்தாள் அவள்.

"கொடுத்தது யார்?" என்று திட்டமாகவே கேட்டான் சண்டதண்டன்.

"இந்திரகுமாரி தந்தைமீது செல்லமாகச் சாய்ந்து "அப்பா உங்களுக்கு வனவாசியைத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"வனத்தில் இருப்பவர்களுக்கெல்லாம் வனவாசி என்று பெயர். கூட்டம் கூட்டமாக இந்த மலைகளில் பல இடங்களில் இருக்கிறார்கள்" என்று பல்லவன் பதில் சொன்னான்.



"அது பொதுவாகச் சொல்லும் பெயர். நான் சொல்லுகிற தாத்தாவுக்கு வனவாசி என்றே பெயர்" என்றாள்.

"நமது மாளிகையிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கும் குடிசைகளில் அப்படி ஒரு தலைவன் இருப்பதாகக் கேள்வி. அதனால் என்ன? அவனிடம் இந்த மாதிரி புரவி ஏது?" என்று பல்லவன் கேட்டான்.

"தாத்தாவிடம் புரவி கிடையாது" என்று சொன்னாள் இந்திரகுமாரி.

"தாத்தாவா!"

"ஆம் வயதானவர்"

"அந்தத் தாத்தா..."

"கொடுக்கவில்லை இந்தப் புரவியை. அவர் நண்பர் கொடுத்தார்." இதை மிகுந்த வெட்கத்துடன் சொன்னாள் இந்திரகுமாரி.

பல்லவன் முகம் சிந்தனையில் ஆழ்ந்தது. "யாரந்த நண்பர்?" என்று சற்றுச் சீற்றத்துடன் கேட்டான் சண்டதண்டன். "எப்படியிருந்தாலும் நீ விலை கொடுக்காமல் எதையும் வாங்கக்கூடாது. நீ அரச மகள்" என்று சற்றுக் கடுமையாகப் பேசினான் பல்லவன்.

"அவரும் சும்மா கொடுக்கவில்லை" என்றாள் அரசகுமாரியும் கோபத்துடன்.

"பின் எப்படி வாங்கினாய்?"

"போட்டியில் ஜெயித்தேன்."

"என்ன போட்டி?"

"தாத்தாவின் நண்பர்..."

"உம்"

"இந்தப் புரவியிது யாரும் உட்கார முடியாது என்றார்."

"உம்"

"நான் உட்கார்ந்து காட்டினேன். சவாரி செய்தேன். இதன் கொட்டத்தை அடக்கினேன். போட்டியின் பரிசு இந்தப் புரவி" என்று சற்றுப் பொய்யையும் கலந்து பேசினாள் அரசகுமாரி.

"இதெல்லாம் எப்போது நடந்தது?" என்று கேட்டான் சண்டதண்டன்.

"நேற்றிரவு" என்று உண்மையைச் சொன்னாள் இந்திரகுமாரி.

"இரவா?"

"ஆம் அப்பொழுதுதான் நாட்டியம் நடக்கிறது."

"நாட்டியமா!"

"ஆம். அங்குதான் இந்தப் புரவியையும் இதன் சொந்தக்காரரையும் சந்தித்தேன்." இதைச் சொன்ன அரசகுமாரி வெட்கத்துடன் தந்தையைப் பார்த்தாள்.

அவள் கண்களில் விரிந்த வெட்கத்தைப் பார்த்த சண்டதண்டன் பெரும் வியப்புக்குள்ளானான். தனது முரட்டுப் பெண்ணின் உள்ளத்தில் பெண்மை உதயமாகி விட்டதை உணர்ந்த சண்டதண்டன், அவளையும் உருக்கியவனைப் பார்க்கத் தீர்மானித்தான்.

# 6. ரவியின் வேட்டை

இந்திரகுமாரியின் முகத்தில் விரிந்த வெட்கச் சாயையாலும், குரலில் தெரிந்த குழைவினாலும், தனது பெண்ணுக்கும் பெண்மை உணர்ச்சிகளை ஊட்டக்கூடிய



ஒருவன் அந்த மலைக்காட்டுக்கு வந்திருக்கிறானென்பதை உணர்ந்ததால் பெரும் மகிழ்ச்சியை ஒரு பக்கம் அடைந்த சண்டதண்டன், பெண்ணை மயக்கியவன் தனது மகளுக்கு மணவாளனாகும் தகுதியில்லாதவனாயிருந்தால் என்ன செய்வது என்று மற்றொரு பக்கத்தில் கவலையும் கொண்டான். ஆகையால் அந்தப் புது மனிதனைப் பற்றிய விவரங்களையும் அறிய விரும்பி "அம்மா வனவாசித் தாத்தாவின் நண்பன் எப்படியிருக்கிறான்?" என்று மெதுவாக விசாரித்தான்.

அதற்கும் பதில் சொல்ல வெட்கப்பட்ட இந்திரகுமாரி "அவர் அந்தக் கூட்டத்துக்குப் பொருந்தியவராகத் தெரியவில்லை. அவரிடமிருந்த வாளிலிருந்தும் இந்தப் புரவியின் சொந்தக்காரர் என்பதாலும் அவர் ஏதோ வீரராக இருப்பார் என்று மட்டும் ஊகித்தேன். மற்றபடி அவர் இன்னாரென்று திட்டமாகத் தெரியாது. அதுவும் ஒரு புருஷனைப் பார்த்து நான் எப்படி விவரம் விசாரிப்பேன்" என்று சற்றுத் தயங்கித் தயங்கிப் பதில் சொன்னாள்.

அவள் தயக்கத்தையும் அந்தப் புதுப் புருஷனைப் பற்றிப் பேசியபோது அவள் காட்டிய நாணத்தையும் கண்களில் துளிர்விட்ட சலனத்தையும் பார்க்கவே செய்த சண்டதண்ட பல்லவன், அவளை மேலும் சோதிக்க விரும்பி "அம்மா! முன்பின் தெரியாதவரிடமிருந்து புரவியை வாங்கிக் கொள்ளலாமா?" என்று ஏதும் அறியாதவனைப் போல விசாரித்தான். சற்று சிந்தித்தாள் பல்லவன் மகள். "அப்பா! வனவாசித் தாத்தாவை உங்களுக்குச் சரியாகத் தெரியாது. மிகுந்த கட்டுத் திட்டங்கள் செய்பவர். சந்தேகமிருந்தால் யாரையும்கிட்டே சேர்க்கமாட்டார். அவரே ஒருவரைக் கொண்டாடுவதென்றால் அவர் கண்ணியமானவராகத்தான் இருப்பார். ஆனால் அப்பா! இந்தப் புரவியை நான் இனாமாகவும் வாங்கவில்லை. இதை யாரும் அடக்க

முடியாது என்று இதன் முடியாது. இதன்மீது உட்காரவும் முடியாது—நான் வாளாவிருக்க சொந்தக்காரர் மார் தட்டியபோது—நான் வாளாவிருக்க முடியுமா? இதை ஏறி அடக்கி ஓட்டியும் காட்டினேன். வேறு வழி இல்லாமல் புரவியைக் கொடுத்தார்" என்று தனது பெருமையையும் சொன்னாள். "அப்பா நான் யாசகம் வாங்குவேனென்று நினைக்கிறீர்களா?" என்று வினவவும் செய்தாள்.

மகளுடைய பிடிவாதத்தைப் பற்றியோ நெறியைப் பற்றியோ பல்லவனுக்குச் சிறிதும் சந்தேகமில்லையென் றாலும் விஷயம் தெரிந்துகொள்ள முயன்று "நீ எப்படி வனவாசியைச் சந்தித்தாய்" என்று வினவினான்.

"அவர்கள் குடிசைகளிருந்த இடத்துக்குப் போனேன். நான் மாளிகையிலிருந்து வந்திருப்பதை அவர் புரிந்து கொண்டார். மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டார். குடிசைப் பெண்கள் ஆடும் நாட்டியத்தில்கூட எனக்கு ஆட இடம் கொடுத்தார்..." என்று சொல்லிக் கொண்டே போன மகளை "என்ன! குடிசைப் பெண்களோடு நாட்டிய மாடினாயா!" என்று பெரு வியப்பைக் காட்டினான் பல்லவன்.

"ஆம் அப்பா! அந்த நாட்டியம் எனக்கு மிகவும் பிடித் திருக்கிறது"

"பிடித்திருக்கிறதா?"

"ஆம் நீங்கள் அதைப் பார்த்தால் அசந்து போவீர்கள்!"

"ஆம் ஆம்"

"அந்த நாட்டியம் ஆடிய பிறகு, உடலில் சிறு களைப்பிருந்தாலும் சுறுசுறுப்பு அதிகமாகிறது"

"அப்படியா?" — இம்முறை சண்டதண்டன் குரலில் சிறிது வியப்பு இருந்தது.



தந்தையின் குரலிலிருந்த கடுப்பு, கள்ளம் கபடமற்ற அவள் வெள்ளை மனதுக்குப் புரியவில்லை. "ஆமாம் அப்பா! அந்த நாட்டியத்தின்போதுதான் இந்தப் புரவியை யும் பார்த்தேன். அதன் சொந்தக்காரரையும் பார்த்தேன்" என்று சகஜமாகச் சொன்னாள்.

அதைக் கேட்டதும் சண்டதண்டன் மனத்தில் சந்தேகம் பலமாக ஏற்பட்டாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் சகஜமாகவே கேள்விகளைத் தொடுத்தான். "இரவிலா போகிறாய்?" என்று முதல் வினாவைத் தொடுத்தான்.

"ஆம் அப்பா!"

"எப்படிப் போகிறாய்? எனக்குத் தெரியாதே!"

"உங்களுக்கு எப்படித் தெரியும்? நான் போகிற தென்றால் நீங்கள் தடை செய்வீர்கள், நகரத்தில் என் தொல்லை தாங்கமாட்டாமல் இந்தக் காட்டு மாளிகையில் சிறை வைத்திருக்கிறீர்கள். ஆனால் என்னைச் சிறைப்படுத்த உங்களாலும் முடியாது. நீங்கள் உறங்கிய பின்பு சாளரத்தின் வழியாக வெளியே குதித்துப் போய் விடுகிறேன். காட்டில் உலாவுகிறேன். அப்படி உலாவிய ஒரு இரவில்தான் குடிசை களைப் பார்த்தேன். வனவாசி தாத்தாவையும் பார்த்தேன். அப்பா! நான் சுதந்திரப் பறவை. நீங்கள் எங்கு அடைத் தாலும் கிட்டாமல் பறந்து விடுவேன்" என்று செல்லக் குரலில் பேசினாள் அரசமகள்.

"நல்லது நல்லது" என்று எரிச்சலுடன் சொன்ன சண்டதண்டன் "உனக்குப் புரவியைக் கொடுத்தவனை நான் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"பார்க்கலாமென்றுதான் நினைக்கிறேன். அவன் [illegible]

தாத்தாவை விசாரித்துப் பார்க்கிறேன்" என்றாள் இந்திரகுமாரி.

இந்தப் பதில் சற்று ஆறுதலாயிருந்தது சண்டதண்டனுக்கு. மகளின் விவகாரம் அத்து மீறிவிடவில்லையென்பதைப் புரிந்து கொண்டதால், தனது சந்தேகங்களை மனத்திலிருந்து அகற்றிக் கொண்டான். ஆகவே ஏதோ அசட்டையாகக் கேட்பவன்போல் "அந்த மனிதன் எந்த ஊராம்?" என்று விசாரித்தான்.

"எனக்கெப்படித் தெரியும்?"

"தாத்தாவைக் கேட்பதுதானே?"

"கேட்க அவசியமில்லை."

"ஏன்?"

"தாத்தாவே அவரை 'ரவி' என்று அழைத்தார். ஆகையால் பெயர் அதுவாகத் தானிருக்க வேண்டும்."

"ரவியா!"

"ஆம்."

"என்ன வயதிருக்கும்?"

"கொஞ்சம் அதிக வயதிருக்கும். ஆனால் பார்ப்பதற்கு வாலிபரைப் போல்தான் இருக்கிறார்."

இதைக் கேட்ட சண்டதண்டன் மேற்கொண்டு பெண்ணை அதிகமாக விசாரிப்பதில் பயனில்லை, சரியுமல்ல என்ற முடிவுக்கு வந்தான். மற்ற விஷயங்களைத் தானே அறிந்து கொள்ளலாமென்றும் தீர்மானித்தான். இருப்பினும் அவளை எச்சரிக்கத் தீர்மானித்து "அம்மா! நாம் இப்பொழுதுள்ள இடம் நமது எதிரிகளின் நாட்டு எல்லைக்கு வெகு அருகிலிருக்கிறது. ஆகவே நீ தனியாக



எங்கும் போகாதே. நமது பணி மக்களில் யாரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டு போ" என்றான்.

பதிலுக்கு அரசகுமாரி நகைத்தாள். "உங்கள் மகளை அணுக யாராலாவது முடியுமா? வேண்டுமானால் துணைக்கு வழக்கம்போல் என் குறுவாட்களை எடுத்துப் போகிறேன். அவற்றைவிட எனக்குத் துணை ஏது?" என்று கூறினாள் நகைப்பின் ஊடே. "அப்பா! எதற்கும் கவலைப் படாதீர்கள். நான் அருவியில் நீராடிவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுத் தந்தையின் பக்கத்திலிருந்து எழுந்தாள்.

அவளைச் சண்டதண்டன் தடுக்கவில்லை. "அதிக தூரம் போய்விடாதே. சற்று எட்டப் போய்விட்டால் மாலப் பிரபா நதி தீரம் வரும். அது கடம்பர்கள் எல்லையைச் சேர்ந்தது" என்று எச்சரித்துவிட்டுச் சென்றான்.

தந்தையின் எச்சரிக்கையும் பேச்சின் போக்கும் புதிதாயிருந்ததால் மிகுந்த சிந்தனை வசப்பட்டுப் புரவியில் ஏறி அருவியிருந்த காட்டுப் பகுதிக்குள் அதைச் செலுத்தினாள் அரசகுமாரி. அந்தப் புரவியின் கழுத்தில் அவள் தனது மாற்று ஆடையைச் சுருட்டிக் கட்டி விட்டதைக் கண்ட சண்டதண்டன், அவள் நீராட்டத்துக்குச் சித்தமாகவே வந்திருக்கிறாளென்றே நினைத்தாலும் அதைப் பற்றி அதிகமாகச் சந்தேகப்படவில்லை அவன். ஒரு ஆண் மகனுடன் சந்திப்பதற்கு வாய்ப்பும் இடமும் ஏற்படுத்திக் கொள்ளும் அளவுக்குத் தனது பெண் முன்னேறியிருக்க முடியாதென்று திட்டமாக நம்பினாலும் எதற்கும் அவள் மீது ஒரு கண்ணை வைத்திருப்பதென்ற முடிவுக்கு வந்தான். அவள் புரவி மலைச்சரிவில் மேலும் இறங்கி, பக்கக் காட்டுக்குள் மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்த பல்லவன், திரும்பவும் மலையில் ஏறி மாளிகையை நோக்கிச் சென்றான். மாளிகை வாயிலுக்கு வந்ததும் ஏதோ நினைத்துக்

கொண்டு பக்கவாட்டில் நடந்து குடிசைகள் அருகாமையில் சென்று "வனவாசி! வனவாசி?" என்று இருமுறை குரல் கொடுக்க வனவாசிக் கிழவன் தனது குடிசையிலிருந்து வெளியே வந்தான். சண்டதண்டனை முன்பின் பார்த்திராத அந்த வயோதிகன் "ஐயோ! தாங்கள் யார்?" என்று விசாரித்தான்.

அதற்குச் சண்டதண்டன் நேராகப் பதில் சொல்லவில்லை. "மாளிகையில் தங்கியிருக்கிறேன்" என்று மட்டும் கூறினான்.

"அரசகுலத்தார் வந்தால் தங்கும் மாளிகை அது" என்றான் வனவாசி.

"ஆம், நானும் அரசகுலந்தான்..."

"என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என் மகள் சொன்னாள்..."

"இந்திரகுமாரி தங்கள் மகளா?"

"ஆம்."

"மிகவும் நல்ல பெண், குணசாலி. ஆனால் புரவியேற்றத்தில் மிகவும் வல்லவள்."

இதைக் கேட்ட சண்டதண்டன் தனது நாகரிகப் போலித்தனத்தைக் காட்டத் துவங்கி "ஆமாம், சுமாராகப் புரவியேற்றம் தெரியும்" என்றான்.

"சுமாராகவா! நன்றாகச் சொன்னீர்கள்? அவளைப் போல் புரவி ஏறத் தெரிந்தவர்கள் இந்தக் காட்டுப் பகுதியில் கிடையாது. ரவியின் புரவியையே அடக்கிவிட்டாள்..." என்று களங்கமற்றுப் பேசினான் வனவாசி.

"ஆம் ஆம், பார்த்தேன் அந்தப் புரவியை. அந்த புரவியின் சொந்தக்காரனுக்குப் பணம் ஏதும் கொடுக்க



வில்லையாமே எனது மகள்?" என்று ஏதோ சர்வ சாதாரணமாகக் கேட்டான்.

"கொடுத்தாலும் ரவி வாங்கிக் கொள்ள மாட்டான். பெரிய மனம் படைத்தவன்..." இங்கு உரையை நிறுத்தினான் வனவாசி.

"ஏனாம்?" என்று சண்டதண்டன் கேட்டான்.

"இவன் ஒரு போக்கு. காரணம் ஏதும் சொல்ல முடியாது. அவன் யாரென்பதும் தெரியாதே. திடீர் திடீரென வருகிறான். காட்டில் வேட்டையாடுகிறான். பிறகு திரும்பிப் போய்விடுகிறான்" என்று வனவாசி விளக்கினான்.

"அவனை நான் பார்க்கலாமா?"

"தெரியாது எனக்கு. நேற்றைக்குப் பிறகு இங்குக் காணவில்லை. ஒருவேளை வேட்டைக்குப் போயிருந்தால் இரவில் வந்தாலும் வரலாம். வந்தால் நான் அழைத்து வருகிறேன் மாளிகைக்கு. முடிந்தால் நீங்களே வாருங்கள். இங்கு சந்திக்கலாம். அப்படி வந்தால் ஏதோ இந்த ஏழைகளின் காட்டு நாட்டியத்தையும் பார்க்கலாம்."

தலையை ஏதோ தாறுமாறாக அசைத்தான் பல்லவன். பிறகு கேட்டான் "வேட்டைக்கு எந்தப் பக்கம் போயிருப்பார்?" என்று.

வனவாசி சிறிது சிந்தித்தான். "அநேகமாக இதை அடுத்திருக்கும் காட்டுக்குத்தான் போயிருக்க வேண்டும். அங்குதான் வேட்டை அதிகமாகக் கிடைக்கும். அங்கு சிறுத்தைகள்தான் அதிகம்" என்று கூறினான்.

"அவருக்குத் துணை யார்? யாராவது காட்டுவாசிகள் வலைகளுடன் போவார்களா?" என்று பல்லவன் கேட்டான்.

...போகமாட்டான் ரவி. அவன் ...ாரையும் அழைத்துப் போகமாட்டான் ரவி. அவன் ...யிருக்கும் சுருக்குக் கயிறுகளை எறிந்தே சிறுத்தையைப் ...டிப்பான். இன்று என்ன செய்கிறானோ. அவன் புரவிகூட இல்லை, சிறுத்தையைத் துரத்த" என்று ஏக்கமாகச் சொன்னான் வனவாசி.

சண்டதண்டன் அதற்குமேல் அதிகமாகப் பேச வில்லை. "ரவி வந்தால் அழைத்து வா. இல்லாவிட்டால் இன்றிரவு நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு, திரும்பி மாளிகையை நோக்கிச் சென்றான்.

இதே சமயத்தில் வேட்டையை எதிர்பார்த்துக் கையில் கயிறுகளுடன் சென்று கொண்டிருந்த ரவிவர்மன், மலைச் சரிவின் தென்பகுதியிலிருந்து கிளம்பி, வேகமாக ஓடிக் கொண்டிருந்த அருவியினருகில் வந்தவன், சட்டென்று பின்னடைந்தான். அருவியில் இந்திரகுமாரி ஆனந்தமாக நீராடிக் கொண்டிருந்தாள்.

## 7. எதிரி

சிறுத்தையை நாடிச் சென்று, மலை அருவியில் மல்லாந்து படுத்து நீராடிக் கொண்டிருந்த சித்தினியைப் பார்த்த ரவிவர்மன், முன்னே செல்ல முடியாமல் அருவிக் கரை மரக்கூட்டத்தின் மறைவிலேயே நின்றான். அன்று அரசமகள் தனிமையை நாடி அந்த அருவிக்கு வந்து, நீராட்டத்துக்காகக் கொண்டு வந்திருந்த சிற் றாடையை லேசாக மேலே சுற்றிக் கொண்டு அருவியில் இறங்கினாள். இரவுப் பனியின் விளைவாகச் சில்லென்றி ருந்த அருவியின் தண்புனல், மல்லாந்த அவள் உடலைத் தழுவிச் சென்றது. ஆழம் அதிகமில்லாததாலும், அவள் இறங்கிய இடத்தில் அரித்து ஓடியதாலும் தலையை ஒரு



பாறைமீது வைத்துக் கொண்டு அவள் படுத்துக் கொண் டாள். பாறையை வளைத்து ஓடிய அருவி நீர், அவள் கழுத்தை இருபுறமும் அணைத்து மார்புமீது பாய்ந்ததால், மார்பை மறைத்திருந்த சிறு சீலையைத் தனது வேகத்தால் சரேலென ஒதுக்கவும் செய்ததன் விளைவாக, அவள் இரண்டு மார்பகங்களும் நீருக்குள் வெளேரெனத் தெரிந்தன. அவள் குழலைத் தூக்கிக் கட்டியிருந்தாலும் அதுவும் சிறிது அவிழ்ந்து அதன் பகுதிகள் நனைந்து கொண்டிருந்தன. நீருக்குள் அழுந்திக் கிடந்த மார்பையும் வயிற்று இடைப் பகுதிகளையும் அருவி நீர் ஓரளவு மறைத்திருந்ததால் அவள் கால்களைத் தூக்கி நீரில் துளைத்து அடித்தபோது மேலே கிளம்பிய நீர், அருவியில் பாய்ந்தோடியதுகூட ஒரு விந்தை யாகவே இருந்தது.

பிறகு அவள் மல்லாந்த நிலையிலிருந்து எழுந்து அருவியில் மண்டியிட்டு உட்கார்ந்து மார்புகளையும் கை கால்களையும் தேய்த்துக் கொண்டதே ரமணீயகரமாக இருந்ததைக் கண்ட ரவிவர்மன், அவள் கால்களைத் தேய்க்க முயன்றபோது கண்களை மூடிக் கொண்டான். மறுபடியும் கண்கள் திறந்தன. அப்பொழுது அவள் பின்னெழில்களை மறைத்தச் சீலை, நீரில் நன்றாக நனைந்து உடலோடு ஒட்டியிருந்ததால் ரவிவர்மன் மனம் உன் மத்தம் பிடிக்கும் நிலைக்கு வந்தது. பிறகு அவள் மார்பை சீலைகொண்டு மறைத்து தலைக்குழலின் நனைந்த இடங்களை மட்டும் சீர்படுத்த முயன்றபோது, அவள் அழகிய உடலின் சில பகுதிகளில் காலைக்கதிரவன் தனது கிரணங்களைப் பாய்ச்சியதால், அவள் ஏதோ காட்டு மோகினி போல் காட்சியளித்தாள். நீண்டநேரம் நீராடிய பிறகே அருவியை விட்டுக் கிளம்பிய இந்திரகுமாரி, கரைக்கு வந்து அங்கு நின்று கொண்டிருந்த தனது புரவியின் கழுத்திலிருந்து புத்தாடையை எடுத்து அணிந்து கொண்டு, ஈர உடைகளைப்

புரவியின் கழுத்தில் மீண்டும் சுற்றினாள். பிறகு தலையை அவிழ்த்துவிட்டாள். அவள் கருங்குழல் அவள் பின்புறத்தில் முக்கால்வாசியை மறைப்பதை மறைவிலிருந்து கண்ட ரவிவர்மன் 'அப்பா! எத்தனை அடர்த்தியான நீளமான குழல்!' என்று வியந்தான். அந்தக் குழலில் எந்த மலர்க் கொத்தை வைக்கலாம் என்று சுற்றுமுற்றும் நோக்கினான். சற்று எட்ட இருந்த சிவந்த காட்டு மலர்க்கொத்தை ஒடித்துக் கையில் வைத்துக் கொண்டு, மீண்டும் மணலில் நின்றான். அவள் உடையணிந்து தலைக்குழலைச் சீர்செய்து முடித்ததும் பின்னாலிருந்து வந்த ரவிவர்மன் மலர்க்கொத்தை அவளுக்கு முன்பு நீட்டி "இது உன் குழலுக்கு அழகாயிருக்கும்" என்றான்.

அவன் குரலைக் கேட்டதும் திடீரென்று திரும்பிய இந்திரகுமாரி, தனக்கு வெகு அருகில் அந்த ஆண்மகன் நிற்பதைப் பார்த்து "நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?" என்று சிறிது அச்சம் குரலில் ஒலிக்கக் கேட்டாள்.

"இப்பொழுதுதான் வந்தேன். நீ குழலை முடிவதைப் பார்த்தேன். பக்கத்து மரத்தில் மலர் நிரம்ப இருந்தது. ஒரு கொத்தை உடைத்தேன்" என்று பொய் சொன்னான் ரவிவர்மன்.

"இப்பொழுதுதான் வந்தீர்களா?" சற்று உறுதி மிகுந்த குரலில் கேட்டாள் அரசகுமாரி.

"ஆம்" என்றான் ரவிவர்மன். அவன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இல்லை.

"இங்குதான் நீங்களும் நீராடுவீர்களா?" என்று அவள் கேட்டாள் மீண்டும்.



"பின் எதற்காக வந்தீர்கள் இங்கே?" என்று இந்திரகுமாரி கேட்டாள்.

"வேட்டையாட வந்தேன்" நிஜத்தையே சொன்னான் ரவிவர்மன்.

"வேட்டையாடவா! என்ன வேட்டை?" வியப்புடன் வினவினாள் அரசகுமாரி.

"இங்கு சிறுத்தைகள் அதிகம்" இதைச் சொல்லி சிறிது புன்முறுவல் கொண்டான் ரவிவர்மன்.

"இன்று வேட்டைக்கு ஏதாவது கிடைத்ததா?" அரசகுமாரி அவனை ஏறெடுத்து நோக்கினாள்.

"இல்லை."

"பாவம்."

"பரிதாபப்படுவதற்கு ஏதுமில்லை. நீ கிடைத்தாயே?"

"இதைக் கேட்டு நகைத்தாள் அவள். திடீரென சட்டென்று நகைப்பை நிறுத்திக் கொண்டாள். அவள் விழிகளில் என்ன காரணத்தாலோ அச்சம் குடிகொண்டது. "என்ன சொன்னீர்கள்?" என்று அச்சமும் கோபமும் கலந்த குரலில் அவள் கேட்டாள்.

"நீ கிடைத்தாய் என்று சொன்னேன்" என்று மிகவும் அடக்கமான குரலில் சொன்னான் அவன்.

"நான் சிறுத்தை இல்லையே" என்று அரசகுமாரி சீற்றத்துடன் சொன்னாள்.

"சிறுத்தையைவிட உக்கிரமானவள் என்று காட்டுவாசிகள் பேசிக் கொள்கிறார்கள்" என்ற ரவிவர்மன்

பண்பாடுகள் உண்டு" என்று கூறினான். "இப்படி வா, மரத்தடியில் உட்கார்ந்து பேசுவோம்" என்று கூறிவிட்டு அவள் தொடருகிறாளா இல்லையா என்று பார்க்காமலே மரக்கூட்டத்துக்குள் நுழைந்து அங்கிருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். மரங்களின் அந்த மறைவுக்குள் அவளும் வந்து அவனெதிரில் நின்றாள்.

அவளை ஏறெடுத்து நோக்கிய ரவிவர்மன் கண்களில் பிரமை தட்டியது. அவள் அணிந்திருந்த புத்தாடையும் ஒரு அரபு உடைதான். இருப்பினும் இன்று அவள் சராயும் சட்டையும் அவள் உடலை இறுக்கிப் பிடித்திருந்ததாகத் தோன்றியது கடம்பனுக்கு. அந்த ஆண் உடையில் கூட அவள் எத்தனை அழகாயிருந்தாள் என்பதைப் பார்த்துப் பெருமூச்சு விட்ட ரவிவர்மன் "இப்படி வா. உட்கார்" என்று அவளுக்குத் தனது பக்கத்தில் ஒரு இடத்தைக் காட்டினான்.

மெள்ள நடந்த அந்த மோகினி காலில் சராய் அணிந்திருந்ததால் முதலில் முழந்தாளில் உட்கார்ந்து காலை மடக்கிய வண்ணமே திரும்பி அவன் பக்கத்தில் அமர்ந்தாள். அப்படி உட்கார அவள் வேகமாகத் திரும்பியபோது சிறிது சாய்ந்துவிட்ட அவள் உடலைத் தனது கையால் பிடித்த ரவிவர்மன், அவளைத் தனது பக்கத்தில் இழுத்து உட்கார வைத்தான். பிறகு அவளைத் திரும்பி நோக்காமலே கேட்டான் "இந்த உடை புதிதா?" என்று.

அவன் எதற்காக அதைக் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட இந்திரகுமாரி "ஆம் புதிதுதான். இன்றைய தினம் புரவி இடக்கு செய்யவில்லை. உடையில் கிழிசல்களுமில்லை" என்று இடக்காகப் பதில் சொன்னாள்.



"ஏன்?" அவள் வியப்பாகக் கேட்டாள்.

"உன் பூவுடலைத் தொட முடியாதே" என்றான் ரவிவர்மன்.

"ஏன் தொடுங்களேன்" என்று அவள் தனது வலது கையை நீட்டினாள்.

"அவன் தனது வலது கையால் அவள் கையைப் பற்றினான். பிறகு சொன்னான்; "அரசகுமாரி! உன் கை புரவிகளின் சேணங்களைப் பிடித்துத் தடித்திருக்கிறது" என்றான்.

"புரவிகளின் கடிவாளத்தாலல்ல அது. வாள் சுழற்றுவதால் ஏற்பட்டது" என்றாள் அவள்.

"நீ வாட் போர் புரிவாயா?"

"புரிவேன்"

"எதற்கு"

"பெண்கள் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டாமா?"

"அதற்கு வாள் வேண்டுமா?"

"வேறு எது வேண்டும்?"

"உன் வாள்விழிகள்..." என்று சொல்லப் போன ரவிவர்மன் "அது உதவாது. யாரையும் எட்ட நிற்க வைக்காது. கிட்டே இழுக்கும்" என்று கூறினான்.

அவள் நிலத்தில் கண்களைத் தாழ்த்தினாள். அவன் மெதுவாக அவள் முகவாய்க்கட்டையை நிமிர்த்தி அவள் முகத்தைப் பார்த்தான். அந்த விழிகளின் அழகும் உதடு

நோக்கிக் குனிந்தான். அவள் முகத்தை அசைக்கக்கூட இல்லை. அவனைப் பார்த்த விழிகளை எடுக்கவும் இல்லை. குனிந்த அவன் உதடுகள் மெல்ல அவள் நெற்றியில் பதிந்தன. இதழ்களை அவன் தொடவும் இல்லை என்பதை நினைத்து அவள் ஏங்கினாள். பிறகு அவன் கைகள் இரண்டும் அவள் இடைகளைச் சுற்றியபோது அவள் திமிர வில்லை. அவனும் அவளை இறுக அணைக்கவில்லை. சட்டென்று விலகி உட் கார்ந்தான். தன் கையை மட்டும் அவள் இடையில் தவழ விட்டு "இந்திரகுமாரி! நான் சற்று அவசரப்பட்டு விட்டேன். காரணம் நீ, உன் அழகு, உன் கண்கள் செய்த இந்திரஜாலங் களால், மனம் மயக்கமடைந்தது..." என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் பேசினான்.

இந்திரகுமாரியின் உணர்ச்சிகளும் எழுந்து நிலை குலைந்து புரண்டு கொண்டிருந்ததால், அவள் பதிலேதும் பேசவில்லை. அவனே பேசினான். "இந்திரகுமாரி! நான் யாரென்பதை நீ தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு நான் கேட்க வேண்டியதை உன்னிடமோ உன் தந்தையிடமோ கேட்பேன்" என்று.

அவள் தனது கையை அவனது கைக்குள் திருப்பினாள் லேசாக. "என்ன கேட்பீர்கள்?" என்று வினவினாள்.

"உன்னைக் கேட்பேன்" என்றான் ரவிவர்மன்.

"இப்பொழுது என்னிடமே கேட்டு விடுவதுதானே?" என்று அவள் முணுமுணுத்தாள்.

கேட்க அஞ்சினான் அவன். "கேட்க அச்சமாயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே அவளை நெருங்கினான்.

"அச்சமென்ன?" என்று அவள் வினவினாள் தன்னை அணைத்த அவன் கைகளுக்குள் சுழன்று.



அவன், அவளைச் சற்று எட்ட வைத்து உற்று நோக்கினான். "நான் யாரென்பதை நீ உணர்ந்து கொள்வது நல்லது" என்றான் அவன், அவள் விழிகளுடன் தனது விழிகளைக் கலந்து.

அவள், செவ்விய உதடுகளைத் திறந்து "சொல்லுங் கள்" என்றாள்.

"நான் உன் தந்தையின் எதிரி" என்று சாவதான மாகச் சொன்னான் ரவிவர்மன்.

## 8. அறிவு குலையும் நேரம்

கட்டழகி இந்திரகுமாரியைக் கட்டியணைத்த கை களைச் சிறிதே நீக்கி, அவள் பூவுடலைச் சற்று எட்ட இருக் கும்படி பிடித்து "நான் உன் தந்தையின் எதிரி" என்று ரவி வர்மன் அறிவித்ததும், அந்த அரசமகள் வியப்பையும் திகைப்பையும் ஒருங்கே அடைந்தாள். அவன் கைகளால் இறுகப் பிடிக்கப்பட்ட தனது தோள்கள் வலி எடுத்தாலும் அதையும் திகைப்பையும் வியப்பையும் கலந்தளித்த உணர்ச்சிகளின் விளைவாக, முழு விவரத்தையும் புரிந்து கொள்ளக் கேட்டாள் அவள், "என் தந்தையை உங்களுக்குத் தெரியுமா?" என்று.

அவள் முகத்தில் நிலவிய உணர்ச்சிகளைக் கண்டதால் சிறிது அனுதாபம் கொண்ட ரவிவர்மன் "இல்லை" என்று சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னான்.

இந்தப் பதில் அவளை மேலும் வியப்புக்குள்ளாக் கவே "பார்த்தாவது இருக்கிறீர்களா?" என்று மீண்டும் வினா ஒன்றைத் தொடுத்தாள்.

"இல்லை. பார்த்ததும் இல்லை" என்றான் ரவிவர்மன், எந்தவித உணர்ச்சியையும் காட்டாமலே.

இந்தப் பதில் அவள் வியப்பை உச்சநிலைக்குக் கொண்டு போய்விடவே "தெரியவும் தெரியாமல், பார்க்கவும் பார்க்காமலிருக்கும் ஒருவரிடம் எப்படி விரோதம் கொள்ள முடியும்?" என்று அவள் கேட்டாள்.

விரோதம் கொள்வதற்குப் பார்க்க வேண்டிய அவசியமில்லை, தெரிந்து கொள்ளவும் வேண்டியதில்லை. தவிர பரஸ்பர தனிப்பட்ட விரோதமும் இருக்க வேண்டியதில்லை. குல விரோதங்கள் உண்டு. அந்த விரோதம் பரம்பரையாக வருகிறது. யாரோ ஒருவனுக்கு யாரோ ஒருவன் இழைத்த அநீதி, பல தலைமுறைகளாகப் பாதிக்கிறது. அப்படித்தான் இதுவும்" என்று சொன்ன ரவிவர்மன் "எங்கள் விரோதத்துக்கும் நமது காதலுக்கும் சம்பந்தமில்லை" என்று கூறினான்.

அவன் பேச்சு மேலுக்கு வேடிக்கையாகத் தோன்றினாலும் அவன் உள்ளத்துக்கு இந்த விரோதம் பிடிக்கவில்லையென்பதைப் புரிந்து கொண்ட இந்திரகுமாரி "அது என்னதான் விரோதம்? எப்படி ஏற்பட்டது? ஏன் தொடர்கிறது?" என்று கேள்விகளை எழுப்பினாள்.

அதுவரை எட்டப் பிடித்திருந்த அழகியை அருகில் இழுத்து தன் தோளில் அவள் தலையைச் சாய்த்துக் கொண்டான். அவன் கையொன்று அவள் இடையை வளைத்து இறுக்கியது. அவள் பூங்கன்னத்துடன் அவன் முரட்டுக் கன்னம் இழைந்தது – சில விநாடிகள். அவன் கண்கள் எதிரே தூர இருந்த மேலைக்கடலை உற்று நோக்கின – நீண்ட நேரம். பிறகு அவன் இதழ்கள் மெதுவாகத் திறக்க அவன் பேச ஆரம்பித்தான். "அரசகுமாரி! அதோ பார், அந்தப் பெரும் கடல் பகுதியை. அதை அடைய ஓடும் இந்த அருவியைப் பார். சுற்றுமுள்ள மலையையும் அடர்ந்த காடுகளையும் பார். நாம் இப்பொழுது உட்கார்ந்திருக்கும் ஸ்ரீபர்வதத்தையும் பார். இவையெல்லாம்



ஆண்டவன் சிருஷ்டி. யாருக்கும் தனிப்பட்ட சொந்தமில்லை. இருப்பினும் இவற்றிலும் மனிதன் சொந்தம் கொண்டாடுகின்றான். பகுதி பகுதியாகப் பிரித்து ஆட்சி செய்கிறான். மற்றவர் ஆட்சியையும் கைப்பற்றப் பார்க்கிறான். இதிலிருந்து தான் விரோதம் கிளம்புகிறது. விரோதத்துக்கு அடிப்படை ஆசை. அதனால் விளைவது பூசல். பூசலில் விளைவது விரோதம்" என்று சொன்ன ரவிவர்மன் பெருமூச்செறிந்தான்.

அவன் வேதாந்தம் பேசுவதைக் கண்ட அரசமகள் "சந்நியாசி போல் தத்துவம் பேசுகிறீர்கள்" என்று கூறினாள்.

அரசகுமாரியின் கன்னத்திலிருந்து தனது கன்னத்தை நீக்கி அவளை நோக்கி, பக்கவாட்டில் திருப்பி, அவள் கன்னத்தில் தனது உதடுகளைப் பொருத்தி மீண்டான் ரவிவர்மன். "நான் சந்நியாசியல்லவென்பதற்குச் சான்று காட்டினேன். வேறுவிதமாக நினைக்காதே" என்றும் சொன்னான்.

அவள் இதழ்களில் இளநகை அரும்பியது. "சந்நியாசத்தை மேலும் நிரூபிக்க அவசியமிருந்தால் இதைவிட மும்முரமான சான்றுகளைக் காட்டுவீர்களா?" என்று விசாரித்த அவள், கள்ள நகையொன்றை உதிர விட்டாள்.

அதன் பொருள் ரவிவர்மனுக்குப் புரிந்திருந்தாலும் அவன் அதை வெளிக்குக் காட்டாமல் இடையை வளைத்த கையை மட்டும் சற்று இறுக்கி அவளை அருகில் இழுத்துக் கொண்டு மேலே பேசலானான். "அரசகுமாரி! எதற்காக அத்தனை பூர்வ பீடிகை போட்டேனென்றால், உனக்கு விஷயத்தை நன்றாகப் புகட்ட. என் மூதாதையை உன் தந்தையின் மூதாதைகள் கேவலமாக நடத்தியிராவிட்டால் இந்த விரோதமே ஏற்பட்டிருக்காது. நானும் அரசனாயிருக்க முடியாது..." என்ற ரவிவர்மன் மேலும் சொல்லலானான் கடம்பர்கள் கதையை.

"பெண்ணே! கேள். ஆறு தலைமுறைகளுக்கு முன்பு நடந்த கதையை நான் சொல்லும் காலத்தில் காஞ்சியில் வீரம் மட்டுமல்ல, செல்வமும் கல்வியும் செழித்திருந்தன. அங்கு கடிகை என்ற பல்கலைக் கழகம் இருந்தது. அதில் கல்வி பயில நாடெங்குமிருந்து மாணவர்கள் வந்தார்கள். அப்படியொரு மாணவன் இந்த ஸ்ரீபர்வதத்திலிருந்தும் சென்றான். அவன் ஒரு அந்தணன், பெயர் மயூரசர்மன். காஞ்சியில் அப்பொழுது கல்வி மட்டுமின்றி, அரச ஆதிக்கமும் அதிகாரமும் பெருத்திருந்தது. அந்தணனான மயூரசர்மன் கடிகையில் படிக்க கட்டுச் சுவடிகளுடன் சென்றான். அங்கு பயின்று வந்த ஒருநாள் பல்லவன் காவலன் ஒருவன் அவனை அவமதித்தான். பிடித்துத் தள்ளினான். அந்தணன் கைச்சுவடிகள் கலைந்தன. அப்பொழுது மேலதிகாரி ஒருவரும் வந்தார். அவர் மயூரசர்மன் நிலையைப் பார்த்து நகைத்தார். மயூரசர்மன் அவர் நகைப்பைப் பார்த்து வெகுண்டான் "என்ன முறைக்கிறாய்? போ கடிகைக் குள்ளே" என்று அவர் அதிகாரம் செய்தார்.

மயூரசர்மன் நீதி கேட்டான் "உங்களைப் பார்த்தால் படைத்தலைவர் மாதிரி தெரிகிறது" என்று துவக்கினான்.

"தெரிவதென்ன? படைத்தலைவனேதான்" என்று அவர் பதில் சொன்னார்.

"உங்கள் காவலன் என்னை அவமதித்ததை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கலாமா?" என்று கேட்டான் மயூரசர்மன்.

"பார்த்துக் கொண்டிருக்காமல் உன்னை எடுத்து கொஞ்சச் சொல்கிறாயா? போடா போ, கடிகைக் குள்ளே போ" என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் சென்றதும் தனது கையிலிருந்த சுவடிகளைக் கடிகையின் வாயிலிலேயே விட்டெறிந்தான் அந்த



மாணவன். "சுவடிகளே உங்களுக்கிருக்கும் மதிப்பைவிட வாளுக்குதான் அதிக மதிப்பிருக்கிறது. இனி அதை ஏந்துகிறேன். அதற்குப் பதில் சொல்லட்டும் பல்லவன்" என்று சீறிவிட்டுச் சென்றான்.

அன்று திரும்பியவன் இந்த ஸ்ரீபர்வதத்தில் திரிந்து அவன் குலத்தாரான கடம்பர்களைத் திரட்டிக் கொண்டான். சரியான வீரர்களை வரவழைத்து அவர்களுக்குப் போர்ப் பயிற்சி அளித்தான். கடம்பர்களை இணையற்ற படை வீரர்களாக அமைத்து மலைகளிலிருந்து இறங்கிச் சென்று, பல்லவர்களின் உதவியாளர்களான ரகத்பாணர்களிடமிருந்து பல்லவர்களுக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தையெல்லாம் பெற்றுக் கொண்டான்.மயூரசர்மனையும் கடம்பர்களையும் அடக்க முடியாத பல்லவர், அதிக நாசத்திலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, மயூரசர்மனை மேலைக் கடலுக்கும் துங்கபத்ரா, மாலப்பிரபா நதிகள் வரையிலுமுள்ள பிரதேசத்தின் மன்னனாக ஏற்றுக் கொண்டார்கள். இப்படித் துவங்கியது கடம்பகுல அரசு. மயூரசர்மன் தன்னை மயூரவர்மனாக அழைத்துக் கொண்டு ராஜ்யாதிபதியானான்.

பின்னால் வந்த கடம்ப அரசர்களான சங்கவர்மன், பகீரதன், ரகு, காகுத்தவர்மன் காலங்களில் கடம்ப அரசு பெரிதாக விரிந்தது. அரசு பெரிதாக விரிந்ததால் உள் பூசலும் அதிகப்பட்டது. முதலில் வைஜயந்தி என்ற வனவாசி மட்டும் கடம்பர்களின் தலைநகராயிருந்தது. போக பலாசிகா (இப்பொழுது ஹல்சி என்று அழைக்கப்படுகிறது) என்பது இரண்டாவது தலைநகராக ஏற்பட்டு அரசு இரண்டு பட்டது. பிறகு மூன்றாகவும் பிரிக்கப்பட்டது.

மயூரவர்மன் தன்மானம் கடம்ப அரசை சிருஷ்டித்தது. பின்னால் வந்த கடம்ப மன்னர்களின் மண்ணாசை

அந்த வலுவான அரசைப் பிளந்தது. காகுத்தவர்மன் பிள்ளைகளுக்குள் ஆதிக்க ஆசை பிடித்தது. ஒருவருக் கொருவர் சண்டை போட்டதால் கடம்ப அரசு பலவீனப் பட்டது. அந்தப் பலவீனத்தை நீக்கி, கடம்ப அரசைப் பழைய நிலைக்குக் கொண்டுசெல்ல நான் தீர்மானித்தேன். என்னுடைய பதினாறு வயதிலேயே என்னைத் தீர்த்துவிட எனது சித்தப்பா விஷ்ணுவர்மன் முயன்றார். நான் தப்பியோடி படைகளைத் திரட்டி விஷ்ணுவர்மனைப் போரில் கொன்றேன். கடம்ப ராஜ்யத்தை மீண்டும் ஒரே அரசாக்கினேன். ஆனால் பல்லவர்கள் எனக்கு அடிக்கடி தொல்லை கொடுத்தார்கள். எங்கள் இரண்டாவது தலைநகரமான பலாசிகாவை ஆக்ரமித்துக் கொண்டார்கள். அந்த ஆக்ரமிப்பை நீக்க மீண்டும் பலாசிகாவை, எங்கள் இரண்டாவது தலைநகரை மீட்க உறுதி கொண்டேன். ஆனால் அந்தப் பணி அத்தனை சுலபமாக இல்லை. பலாசி காவில் அரசாண்ட சண்டதண்டன் எனக்கு இடங் கொடுக்கவில்லை. அரண்களைப் பலப்படுத்தினான். ஆனால் அந்த அரண்களை உடைத்து என் தலைநகரை மீட்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன். அதிக வேலையால் மனச்சாந்தியில்லாத சமயங்களில் இந்தக் காடுகளில் வந்து வேட்டையாடுவேன். காட்டுவாசிகள் நடனத்தைப் பார்ப்பேன். அப்படி வந்த நான் என் விரோதி மகளைச் சந்தித்தேன்..." இப்படிச் சொன்ன ரவிவர்மன் நீண்ட நேரம் மௌனமாயிருந்தான்.

அவன் மௌனத்துக்குக் காரணம் அவளுக்குப் புரிந்தது. அவள் மனக்கோட்டை இடிந்துகொண்டிருந்தது. அவள் மெதுவாக எழுந்திருக்க முயன்றாள். அவனும் எழுந் திருந்தான், கூடவே. அவள் முகத்தைத் தனது கையால் தூக்கிப் பார்த்தான். அவள் கண்களில் நீர் துளிர்த்திருந்தது. கன்னம் சிவந்திருந்தது. அவள் அழகிய சிறிய மார்பும்



சட்டைக்குள் துடித்ததை அவன் காணமுடிந்தது. அவள் அவனுக்கு வெகு அருகில் நின்றிருந்தாள். எதிரும் புதிருமாக நின்ற இருவர் உடல்களும் இடித்துக் கொண்டிருந்தன. அவள் கண்களில் துளிர்த்த நீரைத் தனது இதழ்களால் துடைத்த ரவிவர்மன் உணர்ச்சிகள் மீறியதாலும், உடல்களின் சமீபத்தால் அவன் உறுதி நிலைகுலைந்து போனதாலும் அவள் பூவுடலைத் தன் உடலோடு சேர்ந்து இறுகத் தழுவினான்.

இந்திரகுமாரி கண்களை மூடிக்கொண்டாள். ஏதோ இந்திரலோக சொர்க்கத்துக்கே போய்விட்ட எண்ணம் அவள் மனதில் உதயமாகி உடலெங்கும் சுழன்றதால் அவள் கைகளும் மேலெழுந்து அவன் கழுத்தை வளைத் துக் கொண்டன. அவள் மார்பு அவன் மார்பில் நன்றா கவே அழுந்தியது. சற்றே அவளைத் தளர்த்தி அவள் முகத்தை நோக்கிய ரவிவர்மன், அவளை இரு கைகளி லும் தூக்கிக் கொண்டு முழு மறைவுக்குச் சென்றான். மனத்தோடு மனம் இணையும்போது, அறிவு குலையும் நிலை அது. அந்த நிலை இருவரையும் அணுகிக் கொண்டிருந்தது.

## 9. கண்ணை மூடிக் கொண்டாள்

**கா**தல் அநுபவத்தின் தன்மை உலகு அறிந்ததே என்றாலும், ஆண் பெண் சந்திப்பின் வேட்கையின் முதிர்ச்சி யின் முடிவு அந்த அநுபவந்தான் என்றாலும், மனிதன் அந்த அநுபவத்துக்கு மட்டும் தனிமையை நாடுவது உலகம் ஆரம்பித்த நாளிலிருந்து வந்துள்ள ஒரு மனப்பண்பு. அந்தப் பண்புதான் ரவிவர்மனையும் இந்திரகுமாரியைக் கைகளில் தூக்கிக் கொண்டு மரங்களின் முழு மறைவுக்குச் செல்லத் தூண்டியது. ஸ்ரீபர்வதத்தின் அருவிக்கரையும் அப்படி பகிரங்கமாக மனித நடமாட்டம் ஏற்படும் இடமல்ல

வென்றாலும், அங்கு அடித்த சூரிய வெளிச்சமும் லேசாக இருந்ததென்றாலும், அதுவும் கூடாதென இன்னும் மறைவான, அடர்த்தியான காட்டுப் பகுதிக்கு அரசகுமாரியை அந்த வாலிபன் ஏன் தூக்கிச் சென்றானென்பதற்கு அவன் மன ஓட்டந்தான் காரணம். அந்த மனப்போக்கில் இந்திரகுமாரிக்கும் இசைவு இருந்ததால், அவள் அவன் கையில் புஷ்பக்கொடியெனத் துவண்டு கிடந்தாள்.

அவன் சென்ற இடத்தில் மரக்கூட்டம் மிக அடர்த்தியாயிருந்ததன்றி சூரியக் கிரணங்களும் மரங்களை அதிகமாக ஊடுருவாமல் ஏதோ ஒவ்வொரு கதிர்களை எங்கோ வீசிக் கொண்டிருந்தாலும் இடையேயிருந்த பெரிய வழவழப்பான மலைப்பாறையும் இயற்கை அமைத்துக் கொடுத்த கட்டிலைப்போல் இருந்ததாலும், அந்த இடம் மிக ரம்யமாகக் காட்சியளித்ததால், அந்த இடத்தில் மெல்ல மண்டியிட்டு உட்கார்ந்த ரவிவர்மன், இந்திரகுமாரியை மெதுவாக அந்தப் பாறையில் படுக்கவிட்டான். சுற்றிலுமிருந்த மரங்கள் லேசாக அசைந்து புஷ்ப இதழ்களை அவள்மீது லேசாக உதிர்த்தன. அப்படி உதிர்ந்த புஷ்பங்களும் அவளது கவர்ச்சிப் பிரதேசங்களை நோக்கியே விழுந்ததைக் கண்ட ரவிவர்மன், அவள் பக்கத்தில் உட்கார்ந்து "இந்திரகுமாரி! உன் வனப்பில் இந்தக் காட்டு மரங்களுக்குக்கூட என்ன வேட்கை பார்" என்று கூறிக்கொண்டே, அவள் உடலுக்குக் குறுக்கே தனது கையொன்றைப் போட்டான்.

இந்திரகுமாரிக்கு அந்த மறைவோ மனோகரமான புஷ்பமரச் சூழ்நிலையோ எந்த தைரியத்தையும் அளிப்பதாகத் தெரியவில்லை. அச்சம் அவள் மனத்தைச் சூழ்ந்திருந்ததால் இதயம் திக்குதிக்கென அடித்துக் கொண்டிருந்தது. அதன் விளைவாக அவள் கண்களை மூடிக் கொண்டாள். அவள் இதயத் துடிப்பைக் காண இதய பீடத்தின்மீது கையை வைத்த ரவிவர்மன் "ஏன் உனது



இதயம் இப்படித் துடிக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே அவளை நோக்கினான். அவள் பூவுடல் மல்லாந்து கிடந்தாலும் அதிலும் ஒரு எதிர்ப்பு இருந்ததை அவன் கவனித்தான். பாறையில் நீளக்கிடந்த அந்தப் பூவுடலின் பருவத் தொடைகள் நன்றாக இணைந்து நெருங்கி அசைந்து கொண்டிருந்தன. மூடிக் கிடந்த கண்கள் நன்றாக இறுக மூடிக் கொண்டன. நுதலின் புருவங்கள் சற்றே சுளித்து மேலே ஏறி இறங்கின. அவள் மிக சங்கடமான நிலையில் இருந்தாளென்பதைப் புரிந்து கொண்ட ரவிவர்மன், மெதுவாகக் குனிந்து அவள் கழுத்தில் தனது இதழ்களைப் புதைத்தான். கழுத்திலிருந்து அகற்றிய இதழ்களை அவள் செம்பருத்தி இதழ்களிலும் இணைத்தான்.

அவள் உணர்ச்சியின் கொந்தளிப்பில் இருந்தாள். அவள் உதடுகள் சற்றே விலகி அவன் உதடுகளுக்கு இடங் கொடுத்தன. இணைந்த இதழ்கள் இணையாத இடங்களுக்கும் இடம் கொடுத்தன. கொந்தளித்த உணர்ச்சியால் இதயத் துடிப்பைக் காண மார்புமீது அவன் வைத்த கையை, அவள் தனது கையொன்றால் பிடித்தாள். மல்லாந்து கிடந்த உடலைச் சற்றே திருப்பவும் செய்தாள். அவன் கை அவள் இதய மேட்டிலிருந்து பின்புறம் சென்று அவள் நீண்ட முதுகைத் தடவி, கீழேயும் சென்று பின்னெழில் மேட்டில் நின்றது. சிறிதாயிருந்தாலும் அவள் பின்னெழில் உறுதியும் கடினமும் அதிகமாயிருந்ததை ஸ்பரிசத்தால் உணர்ந்து கொண்ட அந்த வாலிபன், அத்தனை உரம் ஏற்பட்டதற்கு அவளுடைய புரவியேற்றம் காரணமாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். பின்பு அவள் சட்டையை முன்புறத்தில் சிறிது மேலே தூக்கி வயிற்றைக் கவனித்தான். அதன் பக்கங்களில் இரண்டொரு வாள் காயங்கள் பட்டிருப்பதைக் கண்டு, அவள் வாட்போரில் மிக வல்லவளாயிருக்க வேண்டுமென்பதை உணர்ந்து கொண்டான்.

அறிவு குலைந்து உணர்ச்சிகள் மேம்பட்டிருந்த சமயத்தில் அவள் தனது சகலத்தையும் அந்த குல விரோதியிடம் ஒப்படைக்கும் நிலையில் கிடந்ததால், அவள் கைகள் செயலற்றுக் கிடந்தன. தலையை அவள் பாறைமீது சிறிது திருப்பியதால் பின்னால் குழலில் அவன் சற்று முன்பு செருகிய பூங்கொத்து நசுங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்க்காமலே புரிந்துகொண்ட பல்லவன் மகள், தானும் அப்படியொரு பூங்கொத்துதான், அந்த மலைப்பாறையில் தானும் நசுங்க வேண்டியதுதான் என்று எண்ணினாள் — அதனால் இன்பப் பெருமூச்சும் விட்டாள்.

அந்த வேளையில், அந்த விநாடியில் அவளுடைய கண்களின் இரப்பைகளை லேசாகப் பிரித்தான் ரவிவர்மன். அப்படியும் கண்கள் திறக்காததால் மெதுவாகக் குனிந்து "பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் அஸ்தமித்துவிடுமோ?" என்று வினவினான்.

அவள் இதழ்களில் இளநகை அரும்பியது. இதழ்கள் அசைந்து "நான் பூனையா?" என்று மெதுவாக இன்ப ஒலியில் சொற்கள் உதிர்ந்தன.

"இல்லை" அவன், அவள் காதுக்கருகில் மெதுவாகச் சொன்னான்.

"என்ன இல்லை?"

"நீ பூனை இல்லை."

"அப்படியானால் ஏன் அப்படி உவமை சொன்னீர்கள்?"

"உவமை உனக்கல்ல, உன் நினைப்புக்கு."

"என் நினைப்புக்கென்ன?"

"கண்ணை மூடிவிட்டால் உலகம் இருண்டுவிட்டதாக நினைப்பு."



"கண்ணைத் திறந்தால் எல்லாம் சரியாகி விடுமோ?"

"எல்லாம் என்றால்?"

"எல்லாம்தான்."

அவள் நகைத்தாள். கண்ணை விழித்தாள். "என்னைப் பூனையென்றீர்களே? உங்களை நான் குரங்கு என்றால் ஒப்புக் கொள்வீர்களா?" என்று விஷமமாகக் கேட்ட இந்திரகுமாரி, அவனை நோக்கித் தனது பூவுடலை நன்றாகத் திருப்பியதால் அவன் முழந்தாளில் அவள் வயிறு படிந்தது.

அதன் விளைவாகத் தனது முழந்தாளை அவன் சிறிது கீழே இறக்கி விட்டதன் காரணமாக அவள் நெளிந்தாள் ஒருமுறை. அந்த நிலையில் அவன் சொன்னான் "என்னை குரங்கு என்று அழைத்தால் நான் ஒப்புக்கொள்வேன்" என்று.

"ஒப்புக் கொள்வீர்களா?" அவள் வியப்புடன் வினவினாள்.

"அது பழிச் சொல்லல்ல, பகைச் சொல்லும் அல்ல. கடம்பர்களுக்குப் பெருமைச் சொல். எங்கள் கொடியே *அனுமன் கொடிதான்."

அவள் நகைக்கவில்லை "நீங்கள் சிங்கம்" என்றாள் அவனைச் சமாதானம் செய்ய.

"அதுவும் உண்மை. எங்கள் இலச்சினை சிங்க இலச்சினை" என்று சொன்ன ரவிவர்மன் "எங்கள் குல தெய்வமான மதுசேகர்மீது ஆணையாகச் சொல்கிறேன் — நீ என்ன வசை பாடினாலும் அது என் செவிக்குத்தேன்.

* கடம்பர் சிங்க இலச்சினை. குரங்குக்கொடி, அவர்கள் தெய்வம் வனவாசியில் உள்ள மதுகேசர் — டாக்டர் மா. இராஜமாணிக்கனாரின் 'பல்லவ வரலாறு'

நீ என் மனையாள். உலகத்தில் எந்த சக்தியும் என்னை உன்னிடமிருந்து பிரிக்க முடியாது!" என்று கூறி அந்த மலைப்பாறையில் அவனும் படுத்து ஆகாயத்தை நோக்கினான். அப்பொழுது மேலிருந்து மர இடுக்குகளின் வழியாகப் பாய்ந்த கதிர் வீச்சிலிருந்து தப்ப ரவிவர்மன் ஒரு கண்ணை மூடிக்கொண்டான். இம்முறை இந்திரகுமாரி எழுந்து உட்கார்ந்து கொண்டு "மிகவும் அழகாயிருக்கிறீர்கள்! ஒரு கண்ணை மூடிக்கொண்டு அரைக் குருடு மாதிரி இருக்கிறீர்கள்!" என்று கூறி அவனை நோக்கிக் குனிந்து தனது விரல்களால் அவனது ஒற்றைக் கண்ணைப் பிரிக்க முயன்றாள். அவன் இரண்டு கண்களையும் மூடிக் கொண்டான். "இப்பொழுது நான் குருடனல்ல" என்றும் சொன்னான்.

அவள் அழகிய உடலின் மேல் பாதி அவன் மீது படிந்தது. "குருடனல்லவா? கண்ணை மூடினால் உலகம் தெரியுமா?" என்று வினவினாள், அவன் காதுக்கருகில்.

"கண்ணை மூடுவதில் அனுகூலமிருக்கிறது குமாரி" என்ற ரவிவர்மன் தனது இரு கைகளையும் தூக்கி, தன்மீது பதித்த அவள் பாதி உடலைத் தன்னுடன் சேர்ந்து இறுக்கினான்.

"என்ன அனுகூலம்?" அவன்மீது இந்திரகுமாரி இழைந்தாள்.

"கண்ணைத் திறந்தால் சுற்றுப்புறத்துடன் நீயும் தெரிகிறாய்! கண்ணை மூடினால் என் மனக் கண்ணில் நீ மாத்திரம் தெரிகிறாய்" என்ற ரவிவர்மன் கை, அவள் மீது துளைந்தது.

அவன் கைபட்ட இடமெல்லாம் இன்ப வேதனையை அள்ளித் தெளித்தது அவளுக்கு. அவள் வேட்கை எல்லை மீறியது. "இன்னும் ஏன்..." என்று இழுத்தாள்.



அவள் பதில் சொல்லவில்லை. அவன் கண்கள் மேலே எதையோ பார்த்தன. அவன் புரவி அவனை நோக்கித் தலை தாழ்த்தியது. மேலே கிடந்த அவன் சட்டையைப் பற்றி இழுத்தது.

"டேய்! போ! தொந்தரவு செய்யாதே" என்று அதட்டினான் அவன்.

புரவி அப்படியும் விடவில்லை. அவனைப் பிடித்து இழுக்கவே செய்தது. அவள் மெள்ள எழுந்து திரும்பினாள். அந்தச் சமயத்தில் அந்த மரக்கூட்டத்துக்கு வெளியில் யாரோ நடக்கும் ஒலி கேட்டது. சட்டென்று எழுந்தாள் அவள். அவனும் எழுந்து மரக்கூட்டத்துக்கு வெளியே சென்றான். அங்கிருந்து இரண்டு புரவிகள் அருவியைத் தாண்டுவது தெரிந்தது ரவிவர்மனுக்கு. அவன் மீண்டும் மரக்கூட்டத்தின் மறைவுக்கு வந்து இந்திர குமாரியைத் தூக்கி நிறுத்தி அவள் ஆடைகளைத் தானே சரி செய்தான். சொக்காயை நன்றாகக் கீழே இழுத்து விட்டதிலேயே தெரிந்தோ தெரியாமலோ அவன் கை படக்கூடாத இடங்களிலெல்லாம் பட்டது. அவள் மோகனப் புன்முறுவல் கொண்டாள். மண்டியிட்டுத் தனது சராயைச் சரிப்படுத்த முயன்ற அவன் தலையைத் தன் கால்களோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அவன் முகம் அங்கேயே அழுந்திக் கிடந்தது. அவன் மெதுவாக எழுந்து அவளைத் தூக்கிப் புரவிமீது வைத்தான்.

"இன்றிரவு உன்னை எப்படியும் சந்திக்கிறேன். உனது நடனத்தை இன்னொரு முறை பார்த்துவிட்டுத்தான் எனது தலைநகருக்குச் செல்வேன். உன் தந்தையையும் இன்று பார்க்கிறேன். எதற்கும் அஞ்சாதே" என்று தைரியம் சொல்லி அனுப்பினான். புரவியின் பின்புறத்தில் அவன் தட்டிவிட, புரவி பாய்ந்து சென்றது. அருவியைத்

தாண்டியதும் வேகம் மட்டுப்பட்டு, மாளிகையை நோக்கி ராஜநடை போட்டது.

வந்தபோது இருந்த வேகம், ஏறும்போது இல்லை அந்த அசுரப் புரவிக்கு. மெதுவாகவும் உறுதியாகவும் ஏறியது. ஆனால் அவள் எண்ணம் முழுவதும் மலையிலுமில்லை; காட்டிலுமில்லை. தன்னை அன்றுவரை யாரும் தொடாத படியாலும், தொட்டுத் தனது உணர்ச்சிகளை ஊஞ்சலாடச் செய்த அந்த ஆண்மகனையே சுற்றிக் கொண்டிருந்தது. கடலின் அழகோ மலையின் கவர்ச்சியோ, வெள்ளிக் கம்பிபோல் சூரிய வெளிச்சத்தில் பளபளத்து ஓடிய அருவியின் அழகோ அவள் மனதைக் கவரவில்லை. சற்றே பிரிந்த கொண்டையைக்கூட அவள் இழுத்துச் சரி செய்யவில்லை. ஏதேதோ நினைப்புகளுடன் மாளிகையை அடைந்து, முன் வாயில் வழியாக உள்ளே நுழையாமல் பக்கக் கதவு வழியாக நுழைந்தாள். அங்கே அவளைச் சந்திக்க அவள் தந்தை சண்டதண்டன் சித்தமாக நின்றான். ஏன் இத்தனை நேரம்?" என்ற அவன் கேள்வியில் உஷ்ணம் ிதமிஞ்சித் தெரிந்தது.

# 10. ரவிவர்மன்

ஸ்ரீபர்வத மாளிகையின் பக்கவழியாக உள்ளே ழைந்த பைங்கிளியை அந்த வாயிலின் கதவுக்கருகேயே ித்த பல்லவ சண்டதண்டன் "ஏன் இத்தனை நேரம்?" று உஷ்ணத்துடன் வினாவை வீசினாலும், பதிலேதும் ல்லாமலே அவனைத் தாண்டி நடந்த இந்திர ரியை, சீற்றம் ததும்பிய கண்களுடன் நோக்கினான். ள் உள்ளே நடந்தபோது அவள் நடையில் உறுதியிருந் ம் ஆடைகூட சிறிதும் கசங்காதிருந்தாலும், அவள் ல் சூட்டியிருந்த பஞ்சு...



கிடந்ததையும், திட்டமாக முடிந்திருக்கும் குழல்கூட லேசாகக் கலைந்திருந்ததையும் கவனித்த சண்டதண்டன் "மகளே! நான் கேள்வியொன்று கேட்டேன்" என்று சற்றுக் கடுமையாகவே பேசினான்.

உள்ளே மேலும் நடந்து செல்ல முயன்ற இந்திர குமாரி, சற்று நின்று திரும்பித் தந்தையின் கண்களைத் தைரியமாகவே சந்தித்தாள். "கேள்வி புதிதாயிருக்கிறது" என்று சொல்லவும் செய்தாள் — திடமான குரலில்.

மகளைக் கண்டாலே மனம் குலையும் சுபாவமுள்ள சண்டதண்டன் அன்று மனத்தை இரும்பாக்கிக் கொண்டு "புதிய நிலை, புதிய கேள்விகளுக்கு இடம் கொடுக்கிறது." என்று சுட்டிக் காட்டினான்.

இந்திரகுமாரியின் இதழ்கள் இகழ்ச்சியுடன் மடிந்தன. "அந்தப் புதிய நிலை எது என்பதை நான் அறியலாமா?" என்று கேட்டான்.

"நான் சொல்லி நீ அறிய அவசியமில்லை" என்றான் சண்டதண்டன்.

"சரி" என்று கூறிவிட்டுத் தலையை நிமிர்ந்தவண்ணம் உள்ளே நடக்க முற்பட்ட மகளை "சற்று நில்" என்று அதிகாரக் குரலில் அவள் நடையைத் தடை செய்தான்.

அவள் நின்று மீண்டும் தந்தையை நோக்கித் திரும்பி "மனத்திலிருப்பதைத் தெளிவாகக் கேளுங்கள்" என்றாள், சீற்றத்தை லேசாகக் குரலில் வரவழைத்துக் கொண்டு.

"நீராடிவிட்டு நேராக இங்கு வருகிறாயா?" — இதைச் சற்றுக் கடுமையைக் குறைத்துக்கொண்டு கேட்டான் சண்டதண்டன்.

"வேறு எங்கு போயிருப்பேனென்று எதிர்பார்த்தீர்...

"ஒரு வேளை அந்தக் குடிசைகளுக்கு..." வாக்கியத்தை முடிக்கவே திணறினான் சண்டதண்டன்.

"அங்கு நான் இரவில்தான் போவேனென்று உங்களிடம் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேனே!" சுள்ளென்று பேசினாள் இந்திரகுமாரி.

"இரவில்தான் போவாயா?"

"ஆம்."

"இரவில் என்ன வேலை அங்கே?"

"அதையும் சொல்லியிருக்கிறேன் — நாட்டியமாட."

"நாட்டியம் அவசியமா?"

இந்திரகுமாரி நன்றாகவே தந்தையை ஏறெடுத்துப் பார்த்தாள். "நாட்டியம் பழகுவது அவசியமா, இல்லையா என்பதல்ல கேள்வி. அரசகுல மக்கள் எத்தனையோ பேர் இக்கலையைக் கற்றிருக்கிறார்கள். தவிர இங்கு எனக்கு எப்படிப் பொழுதுபோகும்? பகலிலும் இரவிலும் இங்கேயே அடைந்து கிடக்கவா அழைத்து வந்தீர்கள் என்னை? நான் என்ன குற்றவாளியா, சிறையில் அடைக்க?" என்று துணிவுடனும் உஷ்ணத்துடனும் வார்த்தைகளை உதிர்த்தாள்.

கடைசியில் மெள்ள சண்டதண்டனே பணிந்தான். "நீராட ஏன் இத்தனை நேரம் என்று எண்ணினேன். நீண்ட நேரம் வராவிட்டால் எனக்குக் கவலையாயிருக்காதா?" என்று பரிவுடன் பேசினான். அவன் குரலில் கெஞ்சல் இருந்தது.

"கவலை எதற்கு? என்னை வேவு பார்க்க நீங்கள் அனுப்பிய வீரர்கள் பாதுகாக்க மாட்டார்களா?" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

அவள் பேசிய பேச்சும் தொனித்த உறுதியையும் ண்டதண்டன், தான் அனுப்பிய வீரர்கள் சொன்னது



பொய்யாயிருக்குமோ என்று சந்தேகித்தான். தவிர மிக நேர்மையானவளும் சாதாரணமாக யாருக்கும் அடங்காதவளுமான தன் மகள் யாரோ ஒரு ஆண் மகனுடன் பேசிக் கொண்டிருந்ததாக வீரர்கள் கூறியது சரியானதாக இருந்தாலும்கூட, அவ்விருவருக்கும் உள்ள உறவு முறையைப் பற்றித் தான் செய்த முடிவில் குறையிருக்கும் என்றே நம்பினான் சண்டதண்டன். அதனால் அந்தப் பகலைச் சிந்தனையிலேயே கழித்தான். அன்றிரவு இந்திரகுமாரி காட்டுவாசிகளின் குடிசைக்குக் கிளம்பியபோதுகூட அவன் நேராக முன்வாசல் வழியாகவே "அப்பா! நான் தாத்தாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று தந்தையிடம் சொல்லிவிட்டே சென்றாள். அவளைச் சண்டதண்டன் அப்பொழுது தடை செய்யவில்லை. புரவியிலேறி அதை நடத்திச் சென்றபோதும் தடை செய்யவில்லை. ஏதோ முடிவுக்கு வந்தவன் போல் தலையை அசைத்தான்.

குடிசைகளுக்கு நடுவே வழக்கம்போல் சுள்ளிகளாலான தீ எரிந்து கொண்டிருந்தது. நாட்டியத்துக்குப் பெண்களும் சித்தமாகிக் கொண்டிருந்தார்கள். இந்திரகுமாரி வந்ததும் அவளுக்கும் நாட்டிய உடை அணிவித்தார்கள். தலைகுழலையும் அவளுக்குப் பழையபடி கொண்டை போட்டுவிட்டார்கள். நாட்டியம் துவங்கிய சிறிது நேரத்துக்கெல்லாம் சுற்று முற்றும் பார்த்த இந்திரகுமாரி ரவிவர்மன் காணாததைக் கவனித்தாள். "எங்கு தான் சென்றிருப்பார்?" என்று நினைத்தவண்ணம் அவள் உள்ளத்தில் சுவாரஸ்யமின்றி ஆடிக் கொண்டிருந்ததால் அன்று அவள் ஆட்டத்தில் சுறுசுறுப்பு இல்லை, தாளங்கூட அவ்வப்போது தப்பியது.

"அரசகுமாரி! எங்கே யோசனை! பார்த்து ஆடு" என்று கண்டித்தான் வனவாசி.

அப்பொழுதும் அவள் ஆட்டம் சுவாரஸ்யமில்லாதிருந்தது. ஆட்டத்தின் கூட்டத்திலிருந்து விலகி மறைவுக்

குச் சென்று தனது கசங்கிய பழைய ஆடையை அணிந்து வந்து, வனவாசிக் கிழவன் பக்கத்தில் அமர்ந்து "தாத்தா! அவர் எங்கே?" என்று மெதுவாக வினவினாள்.

"எங்கோ தெரியவில்லை. காலை முதல் அவனைக் காணவில்லை. வேட்டைக்குப் போனவன் திரும்பி வரவில்லை" என்றார் தாத்தா.

"அவருக்கு ஏதாவது ஆபத்து..?'' கவலையுடன் வினவினாள் இந்திரகுமாரி.

"அவனுக்காவது ஆபத்தாவது!" என்று அலட்சியமாகப் பேசிய வனவாசி "அம்மா! அவன் போக்கே இப்படித்தான். எப்பொழுது போகிறான், எப்பொழுது திரும்புகிறான் என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் இரண்டு மூன்று நாட்கள் காட்டிலேயே தங்கிவிடுவான். சில சமயங்களில் சொல்லாமலே போய்விடுவான். ஒரு மாதம் கழித்து வருவான். தன்னை இன்னாரென்றும் அறிவித்துக் கொள்வதில்லை. அவனால் பெரிய சங்கடம் எனக்கு. இன்றிரவு அவனை அழைத்துக் கொண்டு உங்கள் மாளிகைக்கு வருவதாக உன் தந்தையிடம் கூறினேன். அவன் வந்தாலல்லவா நான் அழைத்துப் போவதற்கு?'' என்று சலித்துக் கொண்டான்.

அந்தச் சலிப்பை உதறவோ என்னவோ ரவிவர்மன் மெள்ள அந்த இடத்தில் தலையை நீட்டினான். அவன் நீண்டநேரம் மறைவிலிருந்தே அவர்கள் உரையாடலைக் கேட்டிருக்க வேண்டும். "தாத்தா! கவலைப்படாதே உன் வாக்கை நிறைவேற்றுகிறேன்" என்று கூறிக்கொண்டே மரங்களின் மறைவிலிருந்து வெளியே வந்தான். அவன் கைக் கயிற்றில் அகப்பட்டுக் கொண்டிருந்த ஒரு சிறுத்தைக் குட்டி சீறிக்கொண்டும் துள்ளிக் கொண்டும் வந்தது.



ஏதோ ஒரு நாய்க்குட்டியைப் பிடித்து வருவதுபோல் அவன் வருவதைக் கண்ட அரசகுமாரி அவனை விந்தைக் கண்களால் நோக்கினாள். பிறகு எழுந்து அந்தச் சிறுத்தையுடன் விளையாட முயன்றாள் "வேண்டாம் அரசகுமாரி! அது இன்னும் அடங்கவில்லை. பத்து நாட்கள் கழித்து அதை உன் சொற்படி நடக்க வைக்கிறேன்" என்று அவளைத் தடுத்த ரவிவர்மன், கீழே உட்கார்ந்து ஒரு மணிக்கயிறு கொண்டு அதன் வாயை இறுகக் கட்டினான். பிறகு அதன் கழுத்திலிருந்த கயிற்றைத் தாத்தாவிடம் கொடுத்து "தாத்தா! இதைப் பார்த்துக்கொள். நானும் அரசகுமாரியும் அவள் மாளிகை வரையில் போய்வருகிறோம்" என்றான்.

அரசகுமாரி அதிர்ச்சியடைந்தாள். "எங்கள் மாளிகைக்கா?" என்று வினவினாள் அச்சம் துளிர்த்த குரலில்.

"ஆம், தாத்தாவின் சொல்லைக் காப்பாற்ற வேண்டும். அடுத்து..." என்றான் ரவிவர்மன் சிரிப்புடன்.

"அடுத்து?"

"உன் தந்தைக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்."

"ஓய்வா?"

"அரசாங்க அலுவலில் இருந்து."

"அரசை யார் கவனிப்பார்கள்?"

"நான்"

"நீங்களா?"

"ஆம் பெண்ணுக்குச் சீதனம் கொடுப்பது வழக்கமல்லவா? உன் கணவனுக்கு அவர் அரசைக் கொடுப்பது பெரிய சீதனமல்ல. உன்னைவிட அரசு சிறந்ததல்ல."

அரசகுமாரி வியப்பு நிரம்பிய விழிகளால் அவனை ஏறெடுத்து நோக்கினாள். "சீதனமில்லாவிட்டால் என்னை மணக்கமாட்டீர்களா?" என்று அவள் வினவினாள்.

அவன் அதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை. தனது கையிலிருந்த மரக் கங்கணத்தை அகற்றி அவள் வலது கையை எடுத்து அதில் போட்டான். "இந்திரகுமாரி! இது எங்கள் குலத் தாவரமான கடம்ப மரத்திலிருந்து கடையப் பட்டது. இது பொன்னிலும் வைர வைடூரியங்களிலும் சிறந்தது. இதை அணிந்தது முதல் நீ என் மனைவியாயிருக்கிறாய். வா, உன் தந்தையின் ஆசியைப் பெற்று வருவோம்" என்று கூறி அவளைத் தூக்கிப் புரவிமீது உட்கார வைத்தான். தாத்தாவின் கையிலிருந்த சிறுத்தையைக் கயிற்றுடன் இழுத்துக்கொண்டு புரவியை அவளை நகர்த்தச் சொல்லி கையில் சிறுத்தைக் குட்டியையும், வலது கையில் புரவி மேலிருந்த சித்தினியின் இடையையும் பிடித்துக் கொண்டு நடந்த ரவிவர்மன் மனம் உல்லாசத்திலிருந்தது. சிறுத்தைக் குட்டியைப் பிடித்த இடதுகை ஒரு நிலையில் இருந்தாலும் அரச குமாரியைப் பற்றிய கை இடையிலிருந்து சிறிது கீழும் பிறகு முன்னும் வந்து அவள் அழகிய தொடையிலும் தங்கியது. அந்த புருஷ சபலத்தையும் சேஷ்டையையும் உள்ளத்தே நினைத்துப் புன்முறுவல் கொண்டாள் இந்திரகுமாரி. "கை சும்மா இருக்காதா?" என்று வெட்கத்துடன் கடிந்து கொண்டாள்.

"அது.." என்று ஏதோ சொல்ல முயன்றான் அந்த வாலிபன்.

"மிகவும் துஷ்டக் கை!" என்றாள் அவள்.

"ஆம் ஆம்!"

"என்ன ஆம் ஆம்?"

"நான் சொன்னபடி கேட்கமாட்டேனென்கிறது?"

"ஓகோ?"

"சுதந்திரமாக உலாவ இஷ்டப்படுகிறது."



"படும் படும். இருங்கள், அந்தக் கையை உடைத்து சிறுத்தையிடம் போட்டுவிடுகிறேன்" என்றாள் அரச குமாரி.

இப்படிப் பேசிக்கொண்டே மாளிகையருகே வந்ததும் அரசகுமாரி புரவியை வாயிலிலே நிறுத்திவிட்டு உள்ளே செல்ல முயன்றாள். "ஏன், இதைக் கொட்டிலில் கட்டி விடுவதுதானே" என்றான் ரவிவர்மன்.

"இங்கேயே இருக்கட்டும். நமக்குத் தேவையாயிருக்கும்" என்று கூறிவிட்டு உள்ளே நடந்துவிட்டாள்.

அவள் சொன்னதன் பொருள் அவனுக்குப் புரிந்தே இருந்தது. தனக்கு அவள் தந்தையால் ஆபத்து ஏதாவது நேரிடும் பட்சத்தில், தான் ஓட உதவியாயிருக்கும் என்று அவள் நினைத்துவிட்டாள் என்பது அவனுக்குச் சந்தேகமறத் தெரிந்ததால், லேசாக நகைத்தவண்ணம் அவளைப் பின்பற்றி உள்ளே சென்றான். தன்னிடம் இத்தனை அக்கறையுள்ள எதிரி மகளை மனத்துள் பாராட்டிய வண்ணம் உள்ளே நுழைந்த ரவிவர்மனை, மாளிகையின் முன்கூடத்திலேயே சண்டதண்டன் எதிர்கொண்டான்.

இரு எதிரிகளும் ஒருவரையொருவர் உற்று நோக்கிய வண்ணம் பல விநாடிகள் நின்றுவிட்டார்கள். சிறுத்தைக் குட்டியொன்றைப் பிடித்துக்கொண்டு எதிரில் நின்ற தனது எதிரியைக் கண்டு, அவன் அச்சமற்ற பார்வையைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சியடைந்த சண்டதண்டன் மகிழ்ச்சியை வெளிக்குக் காட்டாமல் "ரவிவர்மா! உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று வறண்ட குரலில் கூறினான்.

"நானும் உன்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று ஏகவசனத்தில் பேசினான் ரவிவர்மன்.

சண்டதண்டன் முகத்தில் சினம் லேசாகத் துளிர்த்தது. "மரியாதையின்றிப் பேசுகிறாய்..." என்றான் சண்டதண்டன்.

"மரியாதை கொடுத்து மரியாதை வாங்க வேண்டும்."

"நான் உன்னைவிட வயதில் பெரியவன்."

"வயதைப் பொறுத்ததல்ல மரியாதை. தகுதியைப் பொறுத்தது."

"என் தகுதிக்கு என்ன குறைவு? பல்லவர் கடம்பர்களுக்குக் குறைந்தவர்களா?"

"ஆம்." இதை மிக உறுதியாகச் சொன்ன ரவிவர்மன், "பல்லவர்களிடமிருந்து வனவாசி நாட்டில் கடம்பர்கள் கைப்பற்ற வேண்டியது ஒரே ஒரு நகரம்" என்று குறிப்பிட்டான்.

"எது?" என்று கேட்டான் பல்லவன்.

"பலாசிகா. உன் தற்காலத் தலைநகரம்" என்ற ரவிவர்மன் "அந்தத் தலைநகரத்தை நோக்கி என் படைகள் சென்று கொண்டிருக்கின்றன" என்று பெரிய அதிர்வெடியை எடுத்து வீசினான். அத்துடன் நிற்கவில்லை அவன். "பலாசிகாவை நீயாகக் கொடுத்துவிடுவது உனக்குப் பெருமை அளிக்கும்" என்றான்.

சண்டதண்டன் முகம் பிரளயமாயிற்று. "எப்படி அது பெருமையோ?" என்று சண்டதண்டன் கேட்டான்.

"உன் மகளுக்கு நீ அளிக்கும் சீதனம்" என்று திட்டமாகவே சொன்னான் கடம்ப இளவல்.

## 11. பலாசிகா

அதிர்ச்சி என்ற சொல்லுக்கு ஏதாவது பொருள் உண்டென்றால் அந்தப் பொருளுக்கு ஒரு இலக்கணமாக



அமைந்திருந்தது சண்டதண்டன் முகம். நமது தலைநகரத்துக்கும் கடம்பர் அரசுக்கும் எல்லையாக அமைந்துள்ள ஸ்ரீபர்வதத்துக்குத் துணிவுடன் வந்ததன்றி, தனது தலைநகர்மீது படைகளை நகர்த்திவிட்டதாகவும், போரைத் தவிர்க்க பலாசிகாவைத் தன் பெண்ணுக்குச் சீதனமாகக் கொடுக்கும்படியும் கேட்டுத் தன்னெதிரில் சிறுத்தைக் குட்டியைப் பிடித்துக் கொண்டு இன்னொரு சிறுத்தையென நின்ற ரவிவர்மனை நோக்கிய பல்லவன் மனம் மிகக் குழப்பத்திலிருந்தது. தான் ஸ்ரீபர்வத மாளிகைக்கு வந்ததை அறிந்தே ரவிவர்மன் அங்கு வந்திருக்கிறானென்பதையும் எண்ணிப் பார்த்த சண்டதண்டன், அவன் தனியாக வந்திருக்க மாட்டானென்றே எண்ணியதால் "இங்கு உன் படைப்பிரிவு வந்திருக்கிறதா?" என்று வினவினான்.

"இல்லை" ஒற்றைச் சொல்லில் பதிலளித்தான் ரவிவர்மன்.

"உண்மையாகவா!" சந்தேகத்துடன் கேட்டான் சண்டதண்டன்.

"பொய் சொல்லும் பழக்கம் கடம்பர்களுக்குக் கிடையாது" — மிகத் திட்டமாக இருந்தது ரவிவர்மன் பதில்.

"இப்பொழுது உன்னைச் சிறை செய்தால் என்ன செய்வாய்?" என்று பல்லவன் கேட்டான்.

"முடிந்தால் முயன்று பார்க்கலாம்" என்றான் ரவிவர்மன்.

"தப்பிவிடலாமென்று நினைக்கிறாயா?"

"தப்ப அவசியமில்லை."

"ஏன்?"

"இந்த மாளிகையில் எனக்கும் உரிமை உண்டு."

"என்ன உரிமை?"

"உன் மகளை அழைத்துக் கேள்" என்ற ரவிவர்மன் "இந்திரகுமாரி!" என்று குரல் கொடுத்தான்.

இந்திரகுமாரி உட்புறத்திலிருந்து வெளியே வந்து தந்தையையும் காதலனையும் மாறி மாறிப் பார்த்தாள். "ஏன் அழைத்தீர்கள் என்னை" என்று வினவினாள் குழப்பம் நிரம்பிய குரலில்.

"உனது வலது கையைத் தந்தையிடம் காட்டு" என்றான் ரவிவர்மன்.

அவன் சொன்னதும் சொல்லாததுமாக மகளின் வலது கையை வலிய எடுத்து நோக்கிய சண்டதண்டன் பிரமையும் சினமும் ஒருங்கே அடைந்து "இது எப்பொழுது நடந்தது?" என்று மகளை நோக்கி வினவினான்.

"சற்று முன்புதான் எனக்குக் கொடுத்தார்" என்றாள் அரசகுமாரி.

"கடம்ப மரத்திலிருந்து கடையப்பட்டது" என்றான் சண்டதண்டன்.

"ஆம் சொன்னார்..." தலையைக் கவிழ்த்து கொண்டாள் அரசகுமாரி.

"இது கடம்பர்கள் வதுவையின்போது மனைவிக்குப் போடும் கங்கணம்" என்று சுட்டிக் காட்டினான் சண்டதண்டன். "அவர்கள் வழக்கப்படி உனக்கு விவாகம் ஆகிவிட்டது. நீ இப்பொழுது ரவிவர்மன் மனைவி" என்ற சண்டதண்டன் "போ உள்ளே" என்று சீறி அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான். திரும்பி வந்ததும் தனது காவலாளிகளை அழைத்து "கடம்ப மன்னனைச் சிறை செய்யுங்கள்" என்று கூவினான்.



காவலர் நாலைந்து பேர் ரவிவர்மனைச் சூழத் துவங்கியதும் கையில் பிடித்திருந்த சிறுத்தைக் குட்டியை அவிழ்த்து அவர்கள்மீது விட்டெறிந்து தனது வாளைக் கையில் எடுத்துக் கொண்டான் கடம்பன். அவர்கள் வாட்களைக் கீழே இறக்கு முன்பு சண்டதண்டன் ஊட்டியில் தனது வாளின் நுனியை நாட்டிய ரவிவர்மன் "பல்லவ மன்னரே! எங்கள் நாட்டைச் சூறையாடி எங்கள் பலாசிகாவைச் சொந்தமாக்கிக் கொண்ட உன்னை இப்பொழுதே என்னால் கொல்ல முடியும். இந்திர குமாரியை மட்டும் நான் சந்திக்காதிருந்தால் அதைச் செய்துமிருப்பேன். ஆனால் என் மனைவியின் தந்தையைக் கொல்ல இஷ்டமில்லாததால் உன்னை விடுகிறேன்—உன் மகளை முன்னிட்டு. அவள் கங்கணத்தைக் காட்டினால் நீ பலாசிகாவுக்கு அனுமதிக்கப்படுவாய். நீ கோட்டைக்குள் சென்றதும் போரைத்துவங்குகிறேன். போர் முனையில் சந்திப்போம், அதாவது இது வரை போர் துவங்காதிருந்தால்" என்று கூறிக்கொண்டே வாளுடன் பின்னடைந்தான். தன்னைத் தடுக்க வந்த இருவரின் வாட்களைத் தட்டிவிட்டு ஒருவனைக் காயமும் படுத்திவிட்டு வெளியே ஓடினான். அரசகுமாரி விட்டுப் போன அவன் புரவி வாசலிலேயே நின்றிருந்ததால் அதன் மீது பாய்ந்து, அது விரைந்து செல்லக் கடிவாளத்தை இழுத்துக் கொடுத்தான். மலைப் பகுதியில் புரவி பறந்து சென்றது.

அவன் சென்று பின்பு அவனைத் தொடர முற்பட்ட தனது வீரர்களை வேண்டாமென்று அடக்கிய சண்டதண்டன் எத்தனை துரிதமாக ரவிவர்மன் போர் நடவடிக்கை எடுத்திருக்கிறானென்பதை எண்ணி வியந்தான். தன்மீது பாய வந்த சிறுத்தைக் குட்டியைப் பிடித்துக் கொள்ள காவலருக்கு உத்தரவிட்டு மகளிடம் சென்று "மகளே! நாம் இன்றிரவே நமது தலைநகருக்குப் புறப்படுகிறோம்" என்றான். மகளின் கையைப் பார்த்துப்

பெரு மூச்சு விட்டு "மகளே! போரின் விளைவு எப்படி யிருந்தாலும் இனி பலாசிகா ரவிவர்மனுக்குத்தான் போய்ச் சேரும்" என்றான்.

"அப்படியானால் போர் அவசியமா அப்பா?"" என்று வினவினாள் இந்திரகுமாரி.

"மகளே! நான் க்ஷத்திரியன், அவன் அந்தணன். அவனே போரிடும்போது நான் பின்வாங்கினால் நிரந்தர மாக சரித்திரத்தில் கோழைகளுக்குள்ள இடத்தைப் பெறு வேன்; வேறு வழியில்லை; போரிட்டுத்தான் ஆக வேண்டும். புறப்படு தலைநகர் செல்வோம்" என்று கூறினான். அடுத்த இரண்டே நாட்களில் பலாசிகாவை அடைந்தான்.

மலைகளால் சூழப்பட்டதும் நந்தி மலைக்குச் செல்லும் வழியில் உள்ளதும், * பலாசிகாவுக்கு முன்பாக ஒரு பெரிய குன்றளவுக்கு வளர்ந்திருந்த ஒரு மண்மேட்டின்மீது நின்று சக்கிர தீர்த்தம் என்ற கிணற்றில் இருந்து சிறிது தூரத்திலுமி ருந்த பெரிய கோட்டையைக் கண்ட சண்டதண்டன் பலாசி காவைக் கைப்பற்ற யாராலும் முடியாதென்று தீர்மானித் தான். பலாசிகா கோட்டையைச் சுற்றிலும் இடைவெளி விட்டு விட்டு கும்பல் கும்பலாகத் தெரிந்த கடம்ப வீரர் களின் முற்றுகைப்படை வலுவானதென்றாலும் பலாசி காவைப் பிடிக்க அதன் வலுபோதாதென்று நினைத்தான். அப்படியிருக்க தன்னை உள்ளே அனுமதிக்க ஏன் தனது மகள் கையில் கடம்ப கங்கணத்தை ரவிவர்மன் அணிவித் தான் என்பதும் விளங்கவில்லை சண்டதண்டனுக்கு. ஆகை யால் ரவிவர்மன் பேச்சு வெறும் வீம்புப் பேச்சேயென்றும்,

* *Palasika or Halsi the Chief Town of the later Kadambas is on the road Nandigad. A Well on the mount near Halsi is called Chakrathirtha-Indian Antiquary Vol-VI-Page-22.*



தன் மகளுக்கு முன்னதாகத் தன் வீரத்தைக் காட்டவே அவன் பேசியிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்து சண்ட தண்டன் தன் மகளுடனும் காவலருடனும் கோட்டையின் பிரதான வாயிலை நோக்கித் தனது புரவியைச் செலுத்தினான்.

அவர்களது இரு புரவிகளும் கோட்டையின் பெரு வாயிற்கதவை அடைந்ததும் முற்றுகைப் படை வழிவிட்டது. வெளியிலிருந்து ஒரு கொம்பும் பலமாக ஊதப்பட, வாயிற் கதவுகள் பெருத்த ஓசையுடன் திறந்தன. அந்த வாயிலுக்குள் மக்கள் பின்தொடரச் சென்ற பல்லவன் இரண்டு மூன்று வீதிகளையும் கடந்து தனது அரண்மனைக்கு வந்து சேர்ந் தான், அங்கு அவனுக்குப் பிரமாத வரவேற்பு காத்திருந்தது. மங்கல வாத்தியங்கள் முழங்க அவனும் இந்திரகுமாரியும் வர்வேற்கப்பட்டார்கள்.

அந்த வரவேற்பும் நகரத்தின் தோற்றமும் எல்லாமே புதிதாயிருந்தது சண்டதண்டனுக்கு. அவன் வியப்புடன் திரும்பிப் பார்த்து "எங்கே என் மந்திரிப் பிரதானிகள்?" என்று வினவினான்.

இந்திரகுமாரிக்குக்கூட அங்கிருந்த காவலர் எல்லா ருமே புதுமுகமாயிருந்தார்கள். தனது அந்தப்புரத் தோழி களையும் காணோம். அவள் உள்ளே விடுவிடுவென நடந்தாள். அந்தப்புரம் தான் விட்டுப்போன மாதிரிதான் இருந்தது. ஆனால் கோட்டைக்குள் போர் வீரர் நட மாட்டம் அதிகமாயிருந்தாலும் அவர்களில் பல பேர் பல்லவ வீரர்களாகக் காணோம். அதனால் பெரும் குழப்பமடைந்த இந்திரகுமாரி தந்தையை நாடி "அப்பா! மாளிகையில் காவலரே புதியவர்களாயிருக்கிறார்களே"" என்றாள்.

"நாம் வந்தபோது வாயில் காவலர் நம்மை ஏதும் கேட்கவில்லை. கோட்டை வாயிலைத் திறந்து விட்டார்

களே! முற்றுகை நிலை இப்படியிருப்பது விசித்திரமாயிருக்கிறதே" என்று சண்டதண்டன் கூறினான்.

அவன் அப்படிப் பேசிக் கொண்டிருக்கையிலே வெளியே தூரி வாத்தியங்கள் முழங்கின. போர்முரசுகள் பெரிதாகச் சப்தித்தன. சாளரத்தின் வழியாக வெளியே நோக்கிய பல்லவன் அரபுப் புரவியில் ஆரோகணித்த பூர்ண கவச மணிந்து அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருந்த ரவிவர்மனை நோக்கினான். ரவிவர்மனுக்குக் கோட்டைப் புறத்திலிருந்த எல்லோரும் தலைவணங்குவதைக் கண்ட சண்டதண்டன், தன்னையும் மீறிய நிலை உருவாயிருப்பதை உணர்ந்து கொண்டதால், ரவிவர்மன் வரட்டும் என்று காத்திருந்தான்.

ரவிவர்மன் தாமதமின்றி உள்ளே வந்து சண்டதண்டனுக்குத் தலைவணங்கி "பல்லவ மன்னரே! நான் வருவதற்கு முன்னரே எனது தம்பிகளான பானுவர்மனும் சிவரதனும் கோட்டைத் தாக்குதலைத் துவங்கிவிட்டார்கள். அதிகப் பாதுகாப்பு இல்லாததால் பலமான எதிர்ப்பு இல்லை. கோட்டைவாசிகளின் நலனை முன்னிட்டுத் தங்கள் படைத்தலைவர் சமாதானம் கோரி சரணடைந்தார்" என்றான்.

திகைத்து நின்றான் சண்டதண்டப் பல்லவன். "போரே நடக்கவில்லையா?" என்று வினவினான்.

"இரண்டு நாட்கள் லேசான எதிர்ப்பு இருந்தது. பிறகு இல்லை" என்ற ரவிவர்மன் "தாங்களே தங்கள் சேனாதிபதியைச் சந்தித்துப் பேசலாம்" என்று கூறிப் பல்லவ சேனாதிபதியை வரவழைத்தான்.

சேனாதிபதி தலைவணங்கினான். "மன்னவா! கடம்பர்களின் பெரும்படை நம்மை முற்றுகையிட்டது. நம்மைவிட



நான்கு மடங்கு அதிகமானது. வீணாக மக்கள் நாசத்தைத் தவிர்க்க சரணடைந்தேன். தாங்களிருக்குமிடமும் தெரியவில்லை. தங்களை நாடி அனுப்பப்பட்ட தூதர்களும் திரும்பிவிட்டார்கள். தங்களை எக்காரணத்தை முன்னிட்டும் தொந்தரவு செய்யக்கூடாது என்று சொல்லியிருந்தும், மீறி தூதுவர்களை அனுப்பினேன். அவர்கள் எதிரிகளால் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். கடம்பர்கள் சாரிசாரியாக வந்து கொண்டிருந்தார்கள். இது பல்லவ ராஜ்யத்தின் கடைசி எல்லை. அதைப் பிடிக்க பூர்ண பலத்துடன் வந்தார்கள். நான் மறுத்திருந்தால் தலைநகரைக் கொளுத்தவும் சித்தமாயிருந்தார்கள்..." என்றான் சேனாதிபதி.

அப்பொழுது ரவிவர்மன் மன்னனைப் பார்த்துச் சொன்னான். "பல்லவ மன்னரே! சிந்தியுங்கள். உங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட இந்த நகரம் எங்கள் இரண்டாவது தலைநகர். இப்பொழுது வீண் நாசமின்றி சொந்தக்காரரிடம் சேருகிறது" என்று. "தவிர இங்கு ஆட்சி புரியப்போவது உங்கள் மகள். நன்றாகச் சிந்தியுங்கள். நாளை காலையில் மீண்டும் சந்திப்போம்; அப்பொழுதும் உங்களுக்குப் போர் தேவையென்றால் எனது படைகள் வெளியேறி, போரில் வெற்றி வாகை சூடி உள்ளே நுழையும். அப்பொழுது ஏற்படக் கூடிய விபரீதங்களுக்கு நான் பொறுப்பாளியல்ல" என்று சொல்லி அரசகுமாரியைப் பார்த்துப் புன்முறுவல் செய்துவிட்டு வெளியேறினான்.

## 12. வேகம், மௌனம், சாந்தி

ரவிவர்மன் உள்ள நிலையை உள்ளபடி கூறிவிட்டு வெளியே சென்றதும், தனிமையில் விடப்பட்ட தந்தையும் மகளும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நீண்ட

நேரம் நின்றதும், இந்திரகுமாரி மன எழுச்சியின் மிகுதியால் அறையின் கோடியிலிருந்த மஞ்சத்தை நோக்கிச் சென்று உட்கார்ந்தாள். சண்டதண்டன் மட்டும் அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தான். பிறகு தனது மகளுக்கு எதிராக நின்று "மகளே! ரவிவர்மன் சகலத்தையும் திட்டமிட்டுச் செய்திருக்கிறான்" என்று கூறினான். மேலும் சொன்னான் "நாம் இங்கிருந்து மலைக்குப் போவதற்கு முன்பே அவன் ஒற்றர்கள் இந்த நகருக்குள் இருந்திருக்க வேண்டும். அவன் ஸ்ரீபர்வதம் வந்தது தற்செயலாக அல்ல. நாம் அங்கிருப்பதை அறிந்தே வந்திருக்கிறான். நான் இந்த நகரிலிருந்து வெளியேறியதுமே இதை முற்றுகையிட கடம்பர் படைகள் சித்தமாக இருந்திருக்கின்றன. நாம் மலைக்குப் புறப்பட்ட மறுநாள் இந்த மாநகரைக் கடம்பர் படைகள் சூழ்ந்திருக்கின்றன என்றால் அவை முன்னதாகவே சுற்றுப் புறங்களுக்கு வந்திருக்க வேண்டும். காடுகளில் மறைந்திருந்ததால் திட்டமான புலன் கிடைப்பது நமக்குத் துர்லபமாயிற்று. பலமுறை நமக்கு உதவி அனுப்பும்படி நான் பல்லவ காஞ்சிக்குச் செய்தியனுப்பியது பயனில்லாது போயிற்று. இப்படியிருந்த பலாசிகாவின் சுற்றுப் புறங்களை ரவிவர்மன் விழுங்குவது பெரிய காரியமல்ல. மன்னனும் இல்லாமல் போதிய படையுமில்லாத பலாசிகாவை ரவிவர்மன் பிடித்துக் கொண்டால் அது அவன் திட்டமிடும் திறனைப் பொறுத்தது. இன்னும் நமது படைகள் சில வெளியூர்களில் இருக்கின்றன. இந்த நகரைப் பிடித்ததும் அவர்கள் விரைந்து வரவில்லை. இந்த மாநகர் கடம்பர்கள் கையில் விழுந்ததே அவர்களுக்குத் தெரியாதபடி சுவடுகளை ரவிவர்மன் கத்தரித்து விட்டான்" என்று.

"இப்பொழுது நாம் பலாசிகாவை அவரிடம் ஒப்படைக்காது போருக்குச் சித்தமானால்?" என்று அரசகுமாரி கேட்டாள் மிகுந்த வேதனையுடன்



"சித்தமாகலாம். ரவிவர்மனும் வெளியே செல்வான், அவன் கூறியபடி. ஆனால் நகரை மூன்று நாட்கள்கூட காப்பாற்ற நம்மால் முடியாது" என்று கூறிவிட்டுச் சாளரத்தை நோக்கினான். "இப்படி வா மகளே! என்று இந்திரகுமாரியையும் அழைத்தான். அவள் வந்ததும் வெளியே தெரிந்த காட்சியைச் சுட்டிக்காட்டி "மகளே! இது எதிரி ஆதிக்கத்தில் உள்ள நகரமாகவா தெரிகிறது? அதோ மக்கள் சகஜமாக நடக்கிறார்கள்; பெண்கள் பயமின்றிக் கடைகளை நோக்கிச் செல்கிறார்கள். நகரத்தின் பெருங் கிணற்றிலிருந்து எத்தனை பெண்கள் நீர் எடுத்து மருங்கில் குடம் தாங்கிச் செல்கிறார்கள்! இதிலிருந்து என்ன தெரிகிறது? இதைப் பிடித்துப் பத்து நாட்களுக்குள் அச்சமற்ற, நீதியான அரசை நிறுவிவிட்டான் ரவிவர்மன். அடிக்கடி கடம்பர்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இந்த நகரத்துக்குப் படை வலுவால் ரவிவர்மன் அமைதியை அளித்துவிட்டான். இனி மக்கள் மனம் அவன் பக்கத்தில் இருக்கும்..." என்று விளக்கினான்.

வெளியே இருந்த நிலைமையைப் பார்த்த அரசமகளும் தந்தை சொன்னதன் உண்மையை உணர்ந்தாள். "அப்பா! நீங்கள் இந்த பலாசிகாவைப் பெற மீண்டும் இங்குப் போர் ஏற்படாமலே அரசு செலுத்த ஒரு வழி இருக்கிறது" என்று சொன்னாள் அரசகுமாரி.

"அது என்ன வழி பெண்ணே?" என்று சாளரத்தருகே தனது பக்கத்தில் நின்ற மகளைக் கேட்டான் சண்டதண்டன்.

"உங்களுக்குப் பலாசிகாவைக் கொடுத்துவிடும்படி அவரிடம் சொல்கிறேன். நாங்கள் கடம்பர்களின் முதல் தலைநகரான வைஜயந்திக்குப் போய்விடுகிறோம்" என்று கூறினாள் இந்திரகுமாரி.

இதைக் கேட்ட சண்டதண்டன் இன்பப் புன்முறுவல் கொண்டான். "இந்திரகுமாரி! சண்டதண்டன் போர் செய்ய வகையில்லாமல் பெண்ணைக் கொடுத்துப் பலாசிகாவை வரமாகப் பெற்றான் என்ற அபக்கியாதியைவிட மரணம் நல்லதல்லவா? அதைவிட மக்களின் நாசத்தைத் தவிர்க்கப் போரைக் கைவிட்டான் என்பது பெருமையாக இருக்கும்" என்று கூறினான் புன்முறுவலின் ஊடே. "பெரும் வெற்றிக்குப்பின் போரை வெறுத்தான் என்பதால் அசோக மௌர்யனுக்கு ஏற்பட்ட பெருமை, அனைத்தையும் பெற்ற அவன் பாட்டனுக்கு ஏற்படவில்லை. மக்களை மீண்டும் நாசப்படுத்தி இந்த பலாசிகாவை நான் அடைந்தாலும் என்ன பயன்? இங்கு ஆளப்போவது நீ. நான் வெற்றியடைந்தாலும் தோல்வியடைந்தாலும் நீதான் இந்த சிங்காசனத்தில் ஏறுவாய். அதைப் போரில்லாமல் மக்கள் மகிழும்படி விட்டுக் கொடுத்தால் என்ன?" என்று வினவினான்.

"அப்படியானால்...?" இழுத்தாள் இந்திரகுமாரி.

"ரவிவர்மன் கேட்டபடி உனக்கு இந்த நகரைச் சீதனமாகக் கொடுத்துவிடுகிறேன்" என்றான் சண்டதண்டன்.

"நீங்கள்?" என்று மகள் கேட்டாள்.

எனது மலை மாளிகை எங்கும் போய்விடவில்லை. என்னுடன் வரக்கூடிய காவலருக்கோ பணிமக்களுக்கோ குறைவில்லை. நான் ராஜ்யபார சுமையை இறக்கிக் கொள்கிறேன். பழைய காலத்து அரசர்கள் ஏற்ற வானப்பிரஸ்த ஆசிரமத்தை ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறிய சண்டதண்டன் "தவிர நான் ரவிவர்மனுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சொன்னான்.

"எப்படிக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் இந்திரகுமாரி.



"பெண் உருவில் ஆணாக இருந்த உனக்குப் பெண்மையையும் சிறந்த வாழ்க்கையையும் அளித்தான் ரவிவர்மன். உனக்குத் தகுந்த மாப்பிள்ளையை நீயே தேர்ந்தெடுத்து விட்டாய். அது மட்டுமல்ல மகளே! அந்தக் கங்கணத்தை எந்த விநாடி உன் கையில் அவன் போட்டானோ அந்த விநாடி முதல் நீ கடம்பன் மனைவி. உன் குலம் கடம்பகுலம். இனி உன் குழந்தைகள் இந்த நாட்டை ஆளும். தவிர ரவிவர்மன் மகாவீரன். மூன்றாகப் பிரிந்த கடம்ப ராஜ்யத்தைப் பெரிதான ஒரே ராஜ்யமாக்கிவிட்டான் தனது வாள் பலத்தால்" என்று கூறிய சண்டதண்டன் அன்றிரவு ரவிவர்மனுக்குச் சொல்லியனுப்பினான்.

ரவிவர்மன் வந்ததும் 'கடம்ப மகாராஜா! நான் வானப்பிரஸ்தம் ஏற்கப் போகிறேன். வீணான போரை நான் விரும்பவில்லை. நீயே இங்கிருந்து இனி சாஸனங்களைப் பிறப்பிக்கலாம்" என்றான்.

ரவிவர்மன் பதிலேதும் சொல்லாமல் நின்றான் சில விநாடிகள். பிறகு அரசகுமாரியைக் கையைப் பிடித்து அழைத்து வந்து சண்டதண்டன் முன்பு தானும் மண்டியிட்டு அவளையும் மண்டியிட்டு வணங்கச் செய்தான்.

"ஆசீர்வாதம் செய்யுங்கள் மகாராஜா" என்றும் பணிவுடன் கேட்டான்.

சண்டதண்டன் அவர்கள் இருவர் தலையிலும் கையை வைத்து ஆசீர்வதித்து "மகனே! இன்று உன்னிடம் எனது இணையிலா மாணிக்கத்தை ஒப்படைக்கிறேன். இவளுக்குச் சீதனமாகப் பலாசிகாவை ஒப்படைக்கிறேனென்று சொல்ல முடியாது. இவள் பலாசிகாவை விடச் சிறந்தவள். நீ அடக்கிய இவளை உனக்கு மனைவியாகத் தருகிறேன். நீ கேட்டது அதுதானே?" என்றான் சண்டதண்டன்.

ரவிவர்மன் முகத்தில் சாந்தி, சந்துஷ்டி இரண்டுமே நிலவியது. அவன் மெதுவாகவும் உறுதியுடனும் பேசினான்.

"பல்லவ மன்னரே! உமது இந்த நடவடிக்கை வரலாற்றில் புகழப்படும். 'போரிட்டு வரும் வெற்றியை விட, போரே இல்லாமல் கிடைக்கும் சாதனையின் மகத்துவம் அளவிட முடியாதது' என்று. அத்துடன் இப்படி வாருங்கள்" என்று கூறி அந்த நகரின் ஒரு மூலையில் பிரும்மாண்டமாய் சிற்பக் கலைக்கு ஒரு எடுத்துக் காட்டாய் விளங்கிய ஜைனமதக் கோயிலைச் சுட்டிக் காட்டினான். "அதோ இருப்பது சமணக் கோயில். அஹிம்சைக்கு அடையாளம். ஹிம்சையை வெறுத்த அவரே மகாவீரர் என்று அழைக்கப்படுகிறார். போரைத் தொடுத்தவர்களுக்கும் ரத்தம் சிந்தியவர்களுக்கும் அழிவுக்குக் காரணமானவர்களுக்கும் அந்தப் பெயர் கிடையாது. நீங்கள் பலாசிகாவை கத்தியின்றி ரத்தமின்றி கொடுத்ததற்கு எனது வாளை உங்கள் பாதத்தில் வைக்கிறேன்" என்று கூறித் தனது வாளை எடுத்துச் சண்டதண்டன் பாதங்களில் வைத்தான். அந்த வாளை எடுத்து ரவிவர்மன் கையில் கொடுத்த சண்டதண்டன் "இந்த வாள் தர்மத்தைக் காக்கவும் எளியவர்களுக்கு அபயமளிக்கவும் உபயோகப்படட்டும்" என்று கூறினான். அன்று மாலையே சண்டதண்டன் தனது படைவீரர்கள் பதின்மருடன் பலாசிகாவை விட்டு வெளியேறினான். அவன் மகளிடம் விடைபெற்றபோது அவன் கண் சிறிது கலங்கிற்று. தனது கண்ணீரை மறைக்கத் தலை குனிந்தாள் இந்திரகுமாரி.

சண்டதண்டனை ரவிவர்மனே கோட்டை வாயிலைத் தாண்டி சக்கிரதீர்த்தம் வரையில் கொண்டு விட்டுத் திரும்பினான். மீதியிருந்த பல்லவ வீரர்களைத் தனது படையில் சேர்த்துக் கொண்டான். அன்று முழுவதும் இந்திரகுமாரியைப் பார்க்காத ரவிவர்மன், மறுநாள் சூரியோதயத்தில் வேதியர்களை வரவழைத்து விவாகத்தை மந்திர லோபமில்லாமலும் படாடோபமில்லாமலும் தனது படைத் தலைவர் சிலர் முன்னிலையிலும் நடத்தி முறைப்படி அந்த அரச மகளை மணந்தான்.



அன்றிரவு பலாசிகாவில் தனது பழைய அந்தப்புர அறையில் அரசமகள் கணவனை வரவேற்கக் காத்திருந்தாள். அவளுக்கு அரண்மனைத் தோழிகள் சிங்காரித்த பெரும் சிங்காரமும் தலையைச் சுற்றிச் சுட்டிக் கட்டிய நீள தங்கச் சங்கிலியும், அவளுக்குப் பேரழகு செய்தன. வெளியே வளர்பிறையின் அரைமதி ஆட்சி செய்து கொண்டு, மங்கலான நிலவைச் சாளரத்தின் மூலம் அறைக்குள்ளே அனுப்பிக் கொண்டிருந்தான். அந்த வெளிச்சத்தைவிட அறையில் அலங்காரக் குத்துவிளக்குகள் பெரிதாக எரிந்து கொண்டிருந்தன. அந்தச் சூழ்நிலையில் அவள் ஜகன்மோகினியாகக் காட்சியளித்தாள்.

புலிநகம் கோத்த ஒரு வீர சங்கிலியை மட்டும் அணிந்து இடையில் பட்டுமட்டும் கட்டி உள்ளே நுழைந்த ரவிவர்மன் நேராக இந்திரகுமாரியிடம் செல்லாமல் அவள் அழகைப் பருகிக்கொண்டே நெடுநேரம் நின்றான். பிறகு அவளை மெள்ள அணுகி, அவள் தலையிலிருந்த சுட்டிச் சங்கிலியை எடுத்துத் தலைமயிருக்கு விடுதலையளித்தான். அவள் கழுத்திலிருந்த பலமான பொற்சங்கிலிகளை யும் எடுக்க முயன்று, அவளைப் பஞ்சணை மீது உட்கார வைத்து மெதுவாக அவற்றையும் எடுத்தான். "இந்த விலங்கு கள் உனக்கு வேண்டாம் இந்திரகுமாரி. மங்கலக் கயிறும் கடம்ப கங்கணமும் போதும். உன் இயற்கை அழகைச் செயற்கை அலங்காரங்கள் குறைக்கின்றன" என்று கூறிக் கொண்டே அவள் மேலாடையை நெகிழ்த்தினான். அவள் மெதுவாகத் திரும்பி அவனை நோக்கினாள். அவள் கண்கள் வேட்கையைக் கொட்டின. மார்பகம் விம்மி நின்றது. இதழ்கள் துடித்தன. "வீணாக அஞ்சுகிறாய் இந்திரகுமாரி!" என்று அவளைத் திருப்பித் தனது மார்புடன் அணைத்துக் கொண்டான் ரவிவர்மன். இருவருக்கும் இடையிலிருந்த இடைஞ்சல்களை மெதுவாக நீக்கலானான். "இந்திரகுமாரி!" என்று மெல்ல அழைத்தான்.

அவளது கழுத்தைக் கைகளால் கட்டியவண்ணம் அவன் படுக்கையில் சாய்ந்தான். "பல்லவன் மகளே! இன்று நமது ராஜ்யங்கள் ஒன்றுபட்டன. நாமும் ஒன்று படுகிறோம்" என்று கூறிய அவன் மெதுவாக அவளை நோக்கிக் குனிந்தான். அவள் காதுக்கருகில் சொன்னான்: "இந்திரகுமாரி! போரில்லாமல் பலாசிகா கிடைத்தது. நீயும் கிடைத்தாய். இனிமேல் போரில்லை" என்றான்.

"ஏனில்லை?"

"ஏது போர்?"

"முடியாத போர் இருக்கிறது."

"அப்படி ஒரு போர் உண்டா?"

"உண்டு. வாழ்க்கை எனும் போர்"

"அது இன்பப் போர்!" என்று ரவிவர்மன் அவள் காதில் ஓதினான்.

"அதை இன்பமாக அடிப்பதும் துன்பமாக அடிப்பதும் நமது கைகளில் இருக்கிறது" என்று முணுமுணுத்த அவள் புரண்டு படுத்தாள். பிறகு இருவரும் பேசவில்லை. இன்பப் போருக்குப் பேச்சு எதற்கு? உணர்ச்சிகளுக்குத் தடையேது? உணர்ச்சிகள் புரண்டன. இருவர் இதயங்கள், உடல்கள் ஒன்றுபட்டன. "இதுதான் பூர்த்தி போலிருக்கிறது!" என்று சிந்தித்தாள் இந்திரகுமாரி. 'பூர்த்திக்கு அவ்வப்பொழுது ஆரம்பமும் உண்டு. முடிவற்றுத் தொடரும் கதை அது' என்று எண்ணினாள் அவள். அவள் எண்ணத்திற்கு அவன் அநுகுணமான அநுபவம் கொடுத்தான். கண்ணோடு கண் சேர்ந்தாலே வாய்ச் சொல் யாதும் பயனில என்று சொன்னார்கள். ஆனால் அனைத்து இந்திரியங்களும் சந்திக்கும் போது?

வேகம், மௌனம், சாந்தி இவைதான் முறையே நிலைகள்.

# தாரனி

## 1. பஞ்சவடிப் பயணம்

தேவகிரி யாதவகுல மன்னன் மகாதேவனின் மகா மந்திரியும் சிறந்த கவியுமான ஹேமாத்ரி நறுக்கு ஓலைகளில் தான் வடித்துக் கொண்டிருந்த கவிதைகளில் ஆழ்ந்து கிடந்ததால், தனது காலடியில் வணங்கி எழுந்து பயபக்தியுடன் நின்றிருந்த ராஜபுத்திரி குலவதியை ஏறெடுத்தும் பார்த்தாரில்லை. அவர் எழுத்தாணி ஓடிக் கொண்டிருந்த வேகத்தைக் கவனித்த குலவதியும் அவருடைய சிந்தனை ஓட்டத்தைத் தடுக்க இஷ்டப்படாமலும் உதடுகளைக்கூட அசைக்காமலும் பேசாமல் நின்று கொண்டே இருந்தாள். ராஜகுமாரி வந்ததையோ வணங்கியதையோ சிறிதும் கவனிக்காமலிருந்த மகா மந்திரியை இந்த உலகுக்குக் கொண்டுவர அவருடைய சீடர்களில் ஒருவன் மெதுவாக "குருநாதரே" என்று ஒருமுறை அழைத்தான். அதற்கும் அவர் தலை நிமிராது போகவே "மகாமந்திரி?" என்று சிறிது உரக்கவே, அழைத்ததும் காவிய நிஷ்டை கலைந்த ஹேமாத்ரி தமது கண்களை உயர்த்தி, அரசகுமாரியைப் பார்த்துப் புன்முறுவல் கொண்டு, "குழந்தாய், நீ வந்து வெகு நேரமாகி விட்டதா?" என்று விசாரித்தார்.

குலவதியும் சிறிது புன்முறுவல் செய்து "இல்லை! அதிக நேரமாகவில்லை" என்று மிக மிருதுவான குரலில் பதில் சொன்னாள்.